
KALKI 22.7.90 ரூ. 2.50
கல்கி
சிதாரா:
திரையுலகில் ஒரு புது வசந்தம்



இது சாதாரணம். பாருங்களேன். நான் சாக்லேட்களை கபளீகரம் செய்வது போல, வழக்கமாக ஸிபாகா ஃப்ளோரைட் உபயோகித்து என்னுடைய பற்களைத் தேய்க்கிறேன்.

ஸிபாகாவினுடைய செறிப்பான நுரை சுத்தப்படுத்தி எல்லா சாக்லேட் துணுக்குகளை நீக்குகிறது. அதனுடைய பிரத்தியேகமான ஃபார்முலா பற்கள் கெட்டுப் போகாமல் பாதுகாக்கிறது.

ஆகையால் ஸிபாகா ஃப்ளோரைடுக்கு நன்றி. என் முப்பத்திரண்டு பற்களும் பளிச்சிடும் வெண்மையுடன் வாழ்நாள் முழுவதும் உறுதியாக இருக்கும். சாக்லேட் எல்லாம் இருந்தும் கூட.

பற்களுக்கு பலம். என்றென்றும் தரும். Cibaca Fluoride

ULKA-13196 TAM

பத்மநாபா: பாசம் மிக்கப் போராளி!



இ. பி. ஆர். எல். எஃப். இயக்கத் தலைவர் பத்மநாபா கொலை செய்யப்பட்டு ஒரு மாதம் ஆகிறது. புகழ்வாய்ந்த தமிழகப் போலீஸார் இன்னமும் கொலையாளிகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை! "அவர் உயிருடன் இருப்பதாகவே நாங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறோம்" என்கிறார்கள் அவருடன் பல்லாண்டுகள் பழகிய நண்பர்களான அரணமுறுவலும், தாஸும். அவர்கள் நினைவுகூர்ந்த செய்திகளின் தொகுப்பு:

● மாதத்தில் 15 நாட்களை ரொட்டியும், டீயும் சாப்பிட்டே கழித்தார் பத்மநாபா. ஓர் ஓட்டை சைக்கிளில், பகலில் சென்னை நகரம் முழுவதும் சுற்றி, தலைவர்களைச் சந்தித்து இலங்கைப் பிரச்னையை விவரிப்பார். இரவில் இயக்கப் போஸ்டர்களை அவரே தெருத் தெருவாக ஒட்டி விட்டு வருவார். இலங்கை மலைத் தோட்டத் தமிழர்கள் மேல் தனி பாசம் உண்டு.

● மிகவும் எளிமையானவர். வீட்டைப் பெருக்குதல், கக்கூஸைக் கழுவி விடுதல் போன்றவற்றைத் தயக்கமின்றித் தாமே செய்வார்.•

● அவரை எல்லோரும் எஸ். ஜி. தோழர் என்றுதான் சொல்லுவோம். இயக்கத்துக்கு அவர் செக்ரட்டரி ஜெனரல் அதைச் சுருக்கி எஸ். ஜி. ஆக்கினோம். ரஞ்சன் என்ற பெயரும் பத்மநாபாவுக்கு உண்டு. தோழர்கள் எவ்வளவு கோபத்தில் வந்தாலும் அவர்களைச் சமாதானப்படுத்தும் வசீகரம் அவருக்கு இருந்தது.

● பத்மநாபா, யாழ்ப்பாணம் அருகே காங்கேசன் துறையில் பிறந்தவர். அப்பா கந்தசாமி, போஸ்ட் மாஸ்டராகப் பணியாற்றினார். பத்மநாபா லண்டனில் கணக்குத் தணிக்கையைச் சிறப்புப் பாடமாக எடுத்துப் படித்தவர்.

● பத்மநாபா ராணுவப் பயிற்சி பெற்றது பாலஸ்தீனிய மண்ணில். சுமார் மூன்று மாதம் பயிற்சி. அவருக்குப் பிடித்த தலைவர் கியூபாவின் 'காஸ்ட்ரோ'. தாடி வளர்ப்பதிலும், தொப்பி அணிவதிலும் காஸ்ட்ரோவின் பாணியைக் கையாண்டார் பத்மநாபா.

● ஒருமுறை இலங்கை அகதிகள் பலர் சென்ட்ரல் ஸ்டேஷனில் தங்கி அவஸ்தைப் பட்டுக் கொண்டிருப்பதாகத் தகவல் வந்தது. உடனே பத்மநாபா அங்கே சென்றார். மூன்று பெண்கள் பிரசவ வேதனையால் துடித்துக் கொண்டிருந்தார்கள். லண்டனிலிருந்து தாம் வாங்கி வந்திருந்த ஒரு காமிரா லென்ஸை பர்மா பஜாரில் முந்நூறு ரூபாய்க்கு விற்று, அந்தப் பெண்களுக்கு அவசரச் செலவுக்காகக் கொடுத்து விட்டு வந்தார்.

● சென்னை சூளைமேடு ஹைரோப் தெருவில் இயக்க அலுவலகம் இருந்த போது, எதிர் வீட்டில் கேரளாவைச் சேர்ந்த குடும்பம் ஒன்று தங்கியிருந்தது. அந்த வீட்டில் டைப்ரைட்டிங் மிஷின் இருந்ததால் ஏதேனும் டைப் அடிக்க பத்மநாபா அங்கே செல்வார். அந்த வீட்டுப் பெண் ஆனந்தி, வெகு உற்சாகமாக டைப் அடித்துத் தருவார். சுமார் எட்டு வருடம் பழகிய பின்னர் ஆனந்தியைக் கைப்பிடித்தார் பத்மநாபா. "விடுதலைப் போராட்டத்தில் இறங்கியுள்ள எனக்கு என்றைக்கும் மரணம் சம்பவிக்கலாம். அதனால்தான் கல்யாணத்தைப் பற்றி யோசிக்க வேண்டியிருக்கிறது" என்று இவர் ஒருமுறை ஆனந்தியிடம் கூற அவரோ, 'ஒரு நாள் வாழ்ந்தாலும் உங்களோடுதான் வாழ்வேன்' என்று சொல்ல.. கடைசியில் திருமணம் நடந்தது.

● இறப்பதற்கு முன் கடைசியாக அவர் கலந்து கொண்டது பழநியில் நடந்த மாமனாரின் சஷ்டியப்தபூர்த்தி விழா. பொதுவாக மாலை வேளைகளில் வீட்டில் இருக்க மாட்டார் பத்மநாபா. அன்று துரதிர்ஷ்டம்!


— **கௌசல்யா**

படம்: **சுபா**

சென்னைக்கு வயது 350!



* சைதாப்பேட்டைப் பாலம் — சரித்திரச் சான்று.



* பாலத்தில் கல்வெட்டு.


● லண்டன் மற்றும் இந்தியாவில் உள்ள பல பெருநகரங்களில் டிராம் வண்டிகள் வருவதற்கு ஆறு வருடங்கள் முன்னரே சென்னைக்கு டிராம் வண்டிகள் வந்து-விட்டன.

● *1666* — ஆம் ஆண்டு ஆர்மேனியர்கள் வர்த்தகத்துக்காகச் சென்னைக்கு வந்தார்கள். சென்னை சைதாப்பேட்டையில் உள்ள மறைமலை அடிகள் பாலம் கோஜா பேட்ரஸ் உஸ்கான் என்ற ஆர்மேனிய வர்த்தகரால், *1726* — ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இது பற்றிய கல்வெட்டு பாலத்தின் துவக்கத்தில் (சைதாப்பேட்டைப் பக்கம்) இன்றும் இருக்கிறது.

● மதராஸ் (Madras) என்று பெயர் ஏன் வந்தது? இதற்குச் சுவையான செவிவழிச் செய்தி ஒன்று உண்டு. இப்போது கோட்டை இருக்கும் இடத்திற்கு அருகே, தெற்கே மதராஸ் பட்டிணம் என்ற மீனவர் கிராமம் இருந்ததாம். அந்தக் கிராமத்தில் மதராசன் என்ற கிராமத் தலைவர் இருந்ததாகவும், கிராமம் உள்ள இடத்தைக் கிழக்கிந்தியக் கம்பெனி எடுத்துக் கொண்ட போது அந்தக் கிராமத் தலைவரின் நினைவாகப் பெயர் சூட்டுவதற்கு அவர்கள் ஒப்புக் கொண்டதாகவும் சொல்லப்படுகிறது. இதுதான் மருவி மதராஸ் ஆனது என்கிறார்கள்.

* 'பிளாக் பக்'





* கோட்டை கொடிக் கம்பம்.

● செயின்ட் ஜார்ஜ் கோட்டை உருவான பின் அமைக்கப்பட்டது மாநகராட்சி. அப்போது அதன் பரப்பளவு பத்து சதுர கி.மீ. தான். இப்போது 174 சதுர கி. மீ. பரப்பளவுக்குச் சென்னை மாநகராட்சி செயல்படுகிறது.

● சென்னைக்கு ஐஸ் அறிமுகம் ஆகியிராத காலத்தில், அமெரிக்காவிலிருந்து ஐஸ் கட்டிகளை இறக்குமதி செய்து அவற்றைப் பாதுகாத்துப் பயன்படுத்த ஒரு கட்டடம் கட்டப்பட்டது. பீட்டர்ஸ் சாலை முனையில் கடலையொட்டிக் கட்டப்பட்ட அந்தக் கட்டடத்தின் பெயர்: ஐஸ் ஹவுஸ். பின்னாட்களில் இந்தக் கட்டடத்தில் விவேகானந்தர் வந்து தங்கியதால் அவர் நினைவாகத் தற்போது 'விவேகானந்தர் இல்லம்' என்று அழைக்கப்படுகிறது.

● கிருஷ்ணதேவராயரின் வழிமுறையில் வந்த சந்திரகிரி ராஜாவின் சார்பாக, வந்தவாசி கவர்னராகச் செயல்பட்டார் தாமர்ல வெங்கடாத்ரி. இவர் கிழக்கிந்தியக் கம்பெனிக்குப் பத்து சதுர கி. மீ. இடத்தை வழங்கினார். இங்குதான் செயின்ட் ஜார்ஜ் கோட்டை உருவானது. 350 ஆண்டுகளுக்கு முன் பிரான்ஸிஸ் டே என்பவர் இந்த நிலத்தைப் பெற்றுக் கொண்டு கோட்டையை உருவாக்கினார்.

* யேல் திருமணம் நடந்த சர்ச்.




கோட்டையில் நடந்த கல்யாணம்

* இதுவும் ஃபோர்ட் செயின்ட் ஜார்ஜ்தான்! — கோட்டை மியூசியத்தில் உள்ள மிகப் பழைய ஓவியம்.





* உயர்நீதி மன்றத்தில் பழைய லைட் ஹவுஸ்.



• இப்போதைய லைட் ஹவுஸ்.

● மதராஸுக்குத் தமிழில் சென்னை என்ற பெயர் எப்படி வந்தது? செயிண்ட் ஜார்ஜ் கோட்டை உருவான போது அந்த இடத்திற்குத் தங்கள் தகப்பனாரான சென்னப்பாவின் நினைவாக, சென்னப்பட்டினம் என்று பெயர் வைக்க வேண்டும் என்று தாமர்ல சகோதரர்கள் கேட்டுக் கொண்டனர். சென்னப்பட்டினம்தான் சென்னை ஆகிவிட்டது.

● *1871* — இல் சென்னை நகரத்தின் மக்கள் தொகை சுமார் நான்கு லட்சம். இப்போது நாற்பது லட்சம்!

● சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் சைதாப்பேட்டையின் பெயர் ரகுநாதபுரம் என்று இருந்தது.

● இந்தியாவில் உள்ள கொடி மரங்களிலேயே சென்னைக் கோட்டையில் உள்ள கொடி மரம்தான் உயரமானது. உயரம்: 150 அடி. இந்தக் கொடி மரத்தில்தான் யூனியன் ஜாக் கொடியை *1687* — இல் கவர்னர் யேல் ஏற்றினார். (அமெரிக்காவில் உள்ள யேல் பல்கலைக்கழகம் இவர் பெயரில்தான் அமைந்திருக்கிறது.)

● சென்னையில் முதலாவது அச்சகம் *1711* இல் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் *1766* இல் வேப்பேரியில் கொஞ்சம் நவீன அச்சகம் துவங்கப்பட்டது. இங்கு ஏராளமான தமிழ்ப் புத்தகங்கள் அச்சாயின.

● கோட்டைக்குள் இருக்கும் செயிண்ட் மேரி சர்ச் தான் முதல் ஆங்கில கிறிஸ்துவ சர்ச். இந்த சர்ச் கட்டுவதற்கான கருங்கற்கள், பல்லாவரத்திலிருந்து கொண்டு வரப்பட்டன. ராபர்ட் கிளைவ் தம் மனைவியைக் கைப்பிடித்தது இந்த சர்ச்சில்தான்.

● *1774* இல் சென்னையில் போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் நியமிக்கப்பட்டார். தனியார் அனுப்பும் கடிதங்களுக்கு அஞ்சல் தலை ஒட்டும் வழக்கம் ஆரம்பமானது. தூரத்தைக் கணக்கில் எடுத்து ஒட்ட வேண்டிய அஞ்சல் தலை மதிப்பைக் கணித்தார்கள்.


● சென்னையில் முதல் முதலாகக் கலங்கரை விளக்கம், கோட்டையில் உள்ள மியூஸியத்தின் மாடியில்தான் நிறுவப்பட்டது. பின்னர் உயர்நீதிமன்ற வளாகத்திற்கு மாற்றப்பட்டு, அதன் பின்னர், இப்போது ரேடியோ நிலையத்துக்கு எதிரே வந்திருக்கிறது. இப்போது இந்தியாவிலேயே, உயரமான கலங்கரை விளக்கம் சென்னையில் உள்ளதுதான்!

● இந்தியாவிலேயே ஒரு நகரத்தின் மையத்தில் வனவிலங்கு சரணாலயம் அமைந்துள்ளது சென்னையில்தான். 'பிளாக் பக்' என்ற பாதுகாக்கப்பட்ட மான் இனம் சென்னை, கிண்டி தேசிய பூங்கா சரணாலயத்தில் இருக்கிறது.

தொகுப்பு: **ப்ரியன்.**

படங்கள்: **ரமணன்.**

“அம்மா! ஒரு நற்செய்தி!”



“நான் விரும்பும் ஃபாரெக்ஸ் இப்போது சிக்கனமான விலையில் கிடைக்கிறது!!”

ஊட்டச்சத்துள்ள சுவையான, பால் சேர்ந்த ஃபாரெக்ஸ் ஸீரியல் — இப்போது வசதியான சுகாதாரமான புதிய ரீஃபில் பேக்கிலே.

ரீஃபில் பேக்கை திறந்ததும், அதிலுள்ளவற்றை உடனடியாக காற்றுப் புகாத டின்னிற்குள் மாற்றுங்கள்.

200 கிராமுக்கு ரூ. 11.50*



புதிய ரீஃபில் பேக்

ஃபாரெக்ஸ் : சுவையுடன் வளரும் வழி.

*எந்தக் கடையிலும் சிக்கனமான ஒரே விலையில் கிடைக்கிறது.

தேர்ந்தெடுத்த இடங்களில் மட்டுமே கிடைக்கிறது.

Gx/265.90 Tm

சிதாரா: திரையுலகில் ஒரு புது வசந்தம்

வெய்யில் நிர்தாட்சண்யமாகக் காய்ந்து கொண்டிருந்தது. சென்னை ரேஸ் கோர்ஸின் பொட்டல் வெளியில் ஒரு பக்கமாக இருபத்தைந்து முப்பது பேர் அடங்கிய குழுவினர் வியர்க்க வியர்க்கப் 'புரியாத புதிர்' திரைப்படத்தை அடியடியாக உருவாக்கிக் கொண்டிருந்தனர்.

மணி ஒன்று. 'Brea.....k' என்று ஒரு குரல் ஒலிக்க, பசித்த, களைத்த முகங்களுடன் குழு கலைந்தது. இறுக்கமான ஜீன்ஸ், வெள்ளை 'டாப்' அணிந்திருந்த சிதாரா அவர்களிடமிருந்து தனியே பிரிந்து வந்தார். அவ்வளவு ஆட்டத்துக்குப் பிறகும் புத்துணர்ச்சியுடன் இருந்தார். மேக்—அப்பையும் மீறி மலர் போன்ற புது மெருகு. அளவாகச் சிரித்த போது எட்டிப் பார்த்த ஒரு தெற்றுப் பல் — ஒரு சராசரிப் பெண்ணைப் பார்த்துப் பேசுவது போன்ற உணர்வே ஏற்பட்டது. சிதாரா கல்கிக்கு அளித்த பேட்டியின் தொகுப்பு:

கேள்வி: சிதாரா என்ற பெயரே அபூர்வமாக இருக்கிறதே...?

பதில்: என் அம்மா வைத்த பெயர் அது. அவருக்கு மிகவும் பிடித்த பெயர் என்று சொல்வார். சினிமாவுக்காக அதை மாற்றிக் கொள்வதில்லை என்று உறுதியாக இருந்து விட்டேன்.

கே: சினிமாவில் நீங்கள் வந்து சேர்ந்தது எப்படி?

ப: திரையுலகுக்கு நான் வந்தது தற்செயலான நிகழ்வு. A happy accident. நான் ஒன்பதாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த போது 'காவேரி' என்ற மலையாளப் படத்தில் நடிக்க ஒரு புதிய முகத்தைத் தேடிக் கொண்டிருந்தார்கள் அதன் தயாரிப்பாளர்

"...பதினாலு வயதில் எனக்குக் கிடைத்த வாய்ப்பு மிகப் பெரிய சவாலாகத் தோன்றியது. மம்முட்டி, மோகன்லால், நெடுமுடி வேணு ஆகிய மூன்று மலையாள சூப்பர் ஸ்டார்களும் தோன்றிய படம்... முதல் காட்சியிலேயே நான் அடூர் பாஸியுடன் நடிக்க வேண்டும்... அந்தச் சவாலின் ஈர்ப்புக்குக் கட்டுப் படாமல் இருக்க முடியவில்லை."



கள். கலை, கலாசார பின்னணி உள்ள கதை. பள்ளி மாணவி முதல், விதவைப் பெண் வரையில் படிப்படியாக மாறும் கதாநாயகி பாத்திரம். இதற்குப் பொருத்த மான முகத்தைத் தேடி, நான் மோகினி ஆட்டம் கற்றுக் கொண்டிருந்த நாட்டியப் பள்ளிக்கு வந்து சேர்ந்தார்கள். ஏனோ என் முகம் தயாரிப்பாளரைக் கவர்ந்து விட்டது. ஸ்க்ரீன் டெஸ்டுக்கு வரச் சொன்னார்கள். வீட்டில் அப்பா அம்மாவுக்கு இஷ்டமே யில்லை. ஆனால் என் மாமாவும் நான் படித்த பள்ளியின் தலைமையாசிரியரும், எனது நாட்டிய குருவும் பெற்றோருக்குத் தைரியம் சொன்னார்கள். ஸ்க்ரீன் டெஸ்டி லும் தேறி விட்டேன். அப்போதும் என் பெற்றோருக்கு அரை மனதுதான். ஆனால் பதினாறு வயதில் எனக்குக் கிடைத்த அந்த வாய்ப்பு ஒரு மிகப் பெரிய சவாலாகத் தோன்றியது. மம்முட்டி, மோகன்லால், நெடுமுடி வேணு ஆகிய மூன்று மலையாள சூப்பர் ஸ்டார்களும் தோன்றிய படம் அது. முதல் காட்சியிலேயே நான் அடூர் பாஸியு டன் சேர்ந்து நடிக்க வேண்டும்.... அந்தச் சவாலின் ஈர்ப்புக்குக் கட்டுப்படாமல் இருக்க முடியவில்லை... நான் ஒப்புக் கொண்டு விட்டேன். பெற்றோர்களும் மனத் தைத் தைரியப்படுத்திக் கொண்டார்கள். 'காவேரி' வர்த்தக ரீதியாகப் பெரிய வெற்றி பெறாவிட்டாலும் எனக்கு நல்ல பெயரைப் பெற்றுத் தந்தது.... அதற்குப் பிறகு நிறைய வாய்ப்புக்கள் என்னைத் தேடி வந்தன...

கே: பள்ளிப் படிப்பு பாதிக்கப்பட்டதா?

ப: இல்லவே இல்லை! பத்தாவது பரீட் சையையும் சரி, ப்ரீ டிகிரி வகுப்புத் தேர்வை யும் சரி, முதல் வகுப்பில் 'பாஸ்' செய்தேன். ஒரே குறை நான் விரும்பிய விஞ்ஞானப் பாடத்தை எடுத்துக் கொள்ள முடியாமல் போனதுதான். இப்போது தபால் மூலம் பி.ஏ. ஆங்கில இலக்கியம் படித்துக் கொண் டிருக்கிறேன்.

கே: ஒரு நடிகையாக வேரூன்றிய பிறகும் பட்டம் பெறுவதற்காகப் படிப்பது அவசி யம் என்று நினைக்கிறீர்களா?

ப: எனக்கு ஆங்கில இலக்கியத்தில் கொஞ் சம் ஈடுபாடு உண்டு. அதனால் எப்படி யாவது பி.ஏ. தேறி விட வேண்டும் என்று தீவிரம். மேலும், நான் திரையுலகில் அடி எடுத்து வைத்ததுமே, என் பள்ளி நண்பர் கள், ''எக்காரணம் கொண்டும் நீ படிப்பைப் பாதியில் நிறுத்தக் கூடாது'' என்று என்னிட மிருந்து வாக்குறுதி பெற்றுக் கொண்டார் கள். 'காவேரி' படப்பிடிப்பு முடிந்து, நான் பள்ளிக்குத் திரும்பிய போது ஒரு வாரத் துக்கு யாரும் என்னுடன் பேசவில்லை. முன்பு போல் தோழமையுடன் நடந்து கொள்ளவில்லை. 'சினிமா' என்ற அன்னிய உலகப் பிரதிநிதியாகவே என்னை நோக்



> ''புது வசந்தம் படத் தின் வெற்றி விழா வில் பங்கேற்கப் போன போது ரசி கர்கள் 'சிதாரா' 'சிதாரா' என்று கோஷமிடவில்லை; 'கௌரி' 'கௌரி!' என்றுதான் குரல் கொடுத்தார்கள்.''

கினார்கள். அப்போது முறிந்து போக விருந்த உறவுகளை நான் மிகவும் பிரயத் தனப்பட்டு, மனம் விட்டுப் பேசி, என் நிலைமையை எடுத்துச் சொல்லிக் காப்பாற் றிக் கொண்டேன். அவர்களில் ஒருத்தியாக மீண்டும் அங்கீகாரம் பெறும் தருவாயில் தான் என்னிடம் படிப்பு பற்றிய அந்த வாக் குறுதியை நண்பர்கள் கேட்டுப் பெற்றார் கள். அதனால்தானோ என்னவோ படிப்பை மிக முக்கியமாகக் கருதுகிறேன்.

கே: இப்போது நீங்கள் முழு நேர சினிமா ஸ்டார்... உங்கள் நண்பர்கள் பழைய தோழமையுணர்வோடு பழகுகிறார்களா?

ப: அவர்களுக்கு நான் தோழி சிதாரா தான். திருவனந்தபுரம் போனால் முதல்



ஜப்பான் நாட்டுப் பூந்துழலி!

காலம் ரொம்பத்தான் மாறிப் போச்சு. முன்னாட்களில் ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் திருமணம் புரிந்து கொள்வதென்றால் மற்றொரு ராஜ குடும்பத்தில்தான் சம்பந்தம் பேசுவார்கள். அல்லது குறைந்த பட்சம் பெரிய நிலப் பிரபுவாகவாவது இருக்க வேண்டும். தாம் காதலித்த சாமானியப் பெண்ணை மணப்பதில் உறுதியாக இருந்த விண்ட்ஸர் கோமகன், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தையே துறந்து, தம்பி ஆறாம் ஜார்ஜிடம் அதனை ஒப்படைக்க நேர்ந்தது! அந்தக் காலம் மலையேறி விட்டது. இப்போதெல்லாம் அரச குடும்பத்தினர் சாமானியரை மணப்பது சர்வசாதாரணமாகி வருகிறது.

சமீபத்தில் ஜப்பானிய இளவரசர் ஃபிபூமிஹிடோ ஆயா (24), தமது காதலி கிகோவைத் (23) திருமணம் செய்து கொண்டார். கிகோ, நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர். இவர்கள் காதல் மலர்ந்த இடம், இவர்கள் பயின்ற பல்கலைக்கழகம். இவர்களை இணைத்து வைத்தது இயற்கைச் சமநிலை, பனிச் சறுக்கு விளையாட்டு, டென்னிஸ் ஆகியவற்றில் இருவருக்குமே இருந்த ஈடுபாடு.

••

வேலையாக போன் எடுத்து அவர்கள் எல்லோரிடமும் பேசி விடுவேன். ஆனால் இந்தத் துறையில் முழு மூச்சுடன் இறங்கி விட்டதால் வேறு பல இழப்புக்கள்... சுதந்திரம் அடியோடு பறிபோய் விட்டது. கடைகண்ணிக்குக் கூட நிம்மதியாகப் போய் வர முடியாது...

கே: இத் துறையில் நீங்கள் பெற்றுள்ள லாபங்கள் இந்த நஷ்டத்தை ஈடுசெய்து விடும் என்று கருதுகிறீர்களா?

ப: பொருளாதார ரீதியில் லாபம் நிறையத்தான். ஆனால் அதைச் சுதந்திர இழப்புக்கு ஈடாகச் சொல்ல முடியாது.

கே: பின் ஏன் இந்தத் துறையிலேயே நீடித்துக் கொண்டிருக்கிறீர்கள்?

ப: சினிமா வாய்ப்பு எல்லாரையும் தேடி வராது. என்னைத் தேடி அது வந்ததே தெய்வாதீனம் என்று தோன்றுகிறது. அதைப் பயன்படுத்திக் கொள்ளாமல் விட்டு விட மனம் இல்லை.

கே: தமிழில் வாய்ப்பு எப்படிக் கிடைத்தது?

ப: சரிதாவின் கணவர் முகேஷுடன் ஒரு மலையாளப் படத்தில் நடித்தேன். அதற்குப் பிறகு சரிதாவே என்னைப் பாலசந்தர் சாருக்கு அறிமுகம் செய்து வைத்தார். 'புதுப் புது அர்த்தங்கள்' படத்தில் வாய்ப்புக் கிடைத்தது. பாலசந்தருக்குப் பணியாற்றியது எனக்கு ஒரு மிகப் பயனுள்ள அனுபவமாக அமைந்தது. என் வலிமையையும் என் குறைகளையும் எனக்கு ஒருங்கே உணர்த்தியவர் அவர். எப்படி நின்றால், சிரித்தால், உடுத்தினால் என் திறமையை நன்றாக வெளிப்படுத்தலாம், எவ்வாறு செய்தால் உகந்ததாக இருக்காது என்பதைப் பொறுமையாக எடுத்துச் சொல்லுவார். ஒரு பள்ளிக்கூடத்தில் பாடம் கற்பிப்பது போல் கச்சிதமாக நடிப்புக் கற்றுக் கொடுப்பார்...

கே: 'புது வசந்தம்' படத்தின் வெற்றிக்குக் காரணம் என்ன என்று நினைக்கிறீர்கள்?

ப: அதன் தயாரிப்பில் பங்கேற்ற அனைவரது ஒத்துழைப்பும் காரணம் — குறிப்பாக விக்கிரமன் சாருக்குத் திரைக் கதையில் இருந்த ஆழ்ந்த ஈடுபாடு. அவர் படத்துக்கு என்னை ஒப்பந்தம் செய்வதற்கு முன் கதையை விவரித்த விதமே அந்த ஈடுபாட்டை உணர்த்தியது.' அதுவே அப் பாத்திரத்தை நான் ஏற்கவும் தூண்டியது. நாங்கள் எல்லோரும் உழைத்தாலும் இறுதி வெற்றிக்குக் காரணம் ரசிகர்கள்தான்! அவர்களுக்கு வித்தியாசமான அந்தக் கதையும் அதை விக்கிரமன் கையாண்ட விதமும் பிடித்துப் போய் விட்டது!

கே: அந்தக் கதை நடைமுறை சாத்தியமானது என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அத்தகைய ஆரோக்கியமான ஆண் பெண் உறவை நீங்கள் கண்டதுண்டா?



நறுமணம் நிலவட்டும்...
வியர்க்குரு விலகட்டும்.
இது ஒரு அற்புதமான உணர்வு. நைஸில் லாவெண்டர்; லாவண்டர் மற்றும் கோலோனின் புதுமணத்துடன் மேனியைத் தழுவிடும் ஓர் அழகிய உணர்வு. இன்றே முயன்று பாருங்கள். இதை மிகவும் விரும்புவீர்கள்.
புதிய
நைஸில்
லாவெண்டர்
nycil
PRICKLY HEAT POWDER
வியர்க்குருவை எதிர்த்திடும்.
லாவெண்டர், கோலோனின் நறுமணம் பரப்பிடும்.
1511

ப: நடைமுறை சாத்தியமானதா என்று தெரியவில்லை. ஆனால் எல்லாருடைய மனத்திலும் அத்தகைய ஆரோக்கியமான சிந்தனைகள் இருக்கின்றன என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்தேன். பல பெண்கள் எனக்குக் கடிதம் எழுதுகிறார்கள். ''புது வசந்தம் கதையில் வருவது போன்ற நண்பர்கள் எங்களுக்குக் கிடைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? கல்யாணம் செய்து கொள்வது மட்டுமே வாழ்க்கைக்கு அர்த்தம் கொடுக்கும் என்ற நம்பிக்கை பொய்யாகி விட்டது'' என்று பொருள்பட எழுதப்பட்ட இக் கடிதங்களைப் பார்த்து நான் ஆச்சரியமடைந்தேன். 'புது வசந்தம்' படத்தின் வெற்றி விழாவில் பங்கேற்கப் போன போது ரசிகர்கள் 'சிதாரா' 'சிதாரா' என்று கோஷமிடவில்லை; 'கௌரி!' 'கௌரி!' என்றுதான் குரல் கொடுத்தார்கள். அந்த அளவுக்கு அந்தக் கதாபாத்திரத்துடன் அவர்களால் ஒன்ற முடிந்தது.

கே: ஒரு நடிகையின் இறுதி இலக்கு என்னவாக இருக்க வேண்டும்?

ப: இரண்டு பாட்டுக்கு டான்ஸ் ஆடி விட்டுப் போனால் ரசிகர்கள் கொஞ்ச நேரம் சந்தோஷப்பட்டு விட்டுப் பறந்து விடுவார்கள். ஆனால் எனக்கென்று ஓர் இடம் பிடித்துக் கொள்ள வேண்டுமானால் நான் கனமான பாத்திரங்களை ஏற்று நடிக்க வேண்டும். தமிழ்த் திரையுலகில் இதற்குச் சூழ்நிலை ஏதுவாக இருக்கிறது. நிறையக் கேரள நடிகைகள் இங்கு வந்துதான் புகழ் அடைந்திருக்கிறார்கள். லலிதா, பத்மினி, ராகினி, கே. ஆர். விஜயா, சுஜாதா, அம்பிகா, ராதா, ரேவதி என்று நீளமாகப் பட்டியல் போடலாம்... தமிழ் ரசிகர்கள் நல்ல நடிப்புக்கு அந்தஸ்துக் கொடுக்கிறார்கள்.

கே: தற்போது நல்ல கேரக்டர் ரோலில் ஏதேனும் படத்தில் நடித்து வருகிறீர்களா?

ப: சமீபத்தில் வெளியான 'மனஸா மமதா' என்ற தெலுங்குப் படம் அந்த வகையில் எனக்கு நிறையத் திருப்தி அளித்தது. சூப்பர் குட் ஃபிலிம்ஸ் தயாரிப்பான 'புதுப் புது ராகங்கள்' படத்துக்கு ஒப்பந்தமாகியிருக்கிறேன். இசை சம்பந்தப்பட்ட கதை.

கல்கி: புதுப் புது அர்த்தங்கள், புது வசந்தம், புதுப் புது ராகங்கள்... மேலும் பல புதுப் புதுப் படங்களில் உங்களுக்குப் புதுப் புது வெற்றிகள் கிடைக்க வாழ்த்துக்கள்.

சிதாரா: நன்றி!

பேட்டி: **நிகிலா ராஜா.**

அட்டை வண்ணப்படம்: **யோகா**
மற்ற படங்கள்: **ஹரீஷ்.**

ஹஜ் யாத்திரையை முடித்துக் கொண்டு சென்னை திரும்பியிருக்கும் தமிழ் நாட்டு 'ஹாஜி'க்கள் சிலரைச் சந்தித்த போது......

மெக்காவில் நடந்தது

விபத்தா? நாசவேலையா?

முகமது இப்ராஹிம் (54, மதுரையைச் சேர்ந்த ஹாஜி, ஸ்டேட் பாங்கில் அதிகாரி) கூறினார்:

நமது ஊரில் சித்திரைத் திருவிழாவில், பாதையோரத்தில் படுத்துத் தூங்குவதைப் போல் அங்கும் சுரங்க வழிகளில், யாத்திரிகர்கள் தூங்கிக் கொண்டிருந்த போது, இரு புறமிருந்தும், 'குர்பானி' கொடுப்பதற்காக மக்கள் கூட்டம் முண்டியடித்துக் கொண்டு நுழைந்தது. மின் விளக்குகளும், ராட்சத 'ப்ரொப்பல்லர்' விசிறிகளும் நின்று போயிருந்த நிலையில், பீதியடைந்த பயணிகள், சுவாசிக்க முடியாமல் அங்குமிங்கும் ஓடிய போது ஏற்பட்ட நெரிசலில் பல ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

''அரேபியாவில் மின்தடை ஏற்பட்டு நான் பார்த்ததில்லை. அதற்கு அங்கு வாய்ப்பே இல்லை'' என்றார் சவுதி அரேபியாவில் பணியாற்றி வரும் லத்திஃப் அஷ்ரப்.

''மெக்கா முனிசிபாலிடியில் வேலை பார்க்கும் என் உறவினர், வேன் வேனாக வந்து கொண்டிருந்த சடலங்களின் எண்ணிக்கை மூவாயிரம் முதல் ஆறாயிரம் வரை இருக்கும் என்று சொன்னார். ஆனால், அதிகாரபூர்வமாக அறிவிக்கப் பட்ட இறந்தவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு'' என்றார் திருச்சியைச் சேர்ந்த ஹாஜி ஷகாபுத்தின். ''சவுதி அரசாங்கம் உண்மையை மறைப்பதற்குக் காரணம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் மறைத்து விட்டார்களே!''

அரேபிய மன்னர் கிங் ஃபாட், ''சுரங்க வழியில் நடந்த நிகழ்ச்சி ஒரு விபத்து. திட்டமிட்ட செயலல்ல'' என்று



* ஹாஜி முகமது இப்ராஹீம்

அறிவித்த போதும் சந்தேகத்தின் பேரில் பலர் கைது செய்யப்பட்டிருப்பதாக ஹாஜிகள் கூறுகின்றனர். அமெரிக்க – இஸ்ரேலிய கூலிப்படை இந்த விபத்துக்குக் காரணமாயிருக்கலாம் என்பது ஒரு ஈரான் பத்திரிகையின் கணிப்பு!

''மீனாவில் நடந்த தீ விபத்தில் கூடாரங்கள் பற்றி எரிந்த சமயத்தில், நாங்கள் அனைவரும் அல்லாவின் கிருபையால் அராபத்தில் 'ஹஜ்'க்காக குழுமியிருந்தோம். திரும்பி வந்து பார்த்த போது, தரை கருகியிருந்தது. தண்ணீர் அடித்திருந்தார்கள். உடமைகள் போயிருந்தன! அவ்வளவு தான் தெரியும்'' என்றார் ஷகாப்புத்தின்.



* ஹாஜி ஸிராஜுதீன்



ராமநாதபுரத்தைச் சேர்ந்த ஹாஜி நஸிஹுதுல்லாவோ அது ஒரு விபத்து என்பதில் தமக்கு உடன்பாடில்லை என்றே வெளிப்படையாகச் சொன்னார். இவர் மலேஷியாவில் ஹோட்டல் நடத்தி வரும் தமிழர். "அறிவுபூர்வமாகப் பார்த்தால், இது திட்டமிட்ட நாசவேலையென்று புரிந்து விடும். ஏனென்றால், 90,000 ஹாஜிகள் தங்கும் கூடாரங்களில், ஒரே நேரத்தில், பல இடங்களில் அங்கங்கே பற்றி எரிவது விபத்தாக இருக்க முடியாது. இருந்தாலும் அல்லாவின் பாதையில் போகும் போது எனக்கு எதுவும் கஷ்டமாகத் தெரியவில்லை" என்றார்.

"தீ விபத்து அங்கு ஒரு தினசரி நிகழ்ச்சி. நாங்கள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த போது, அன்றிரவே மூன்று மணிக்கு இரண்டாவது முறையாக, தீப் பிடித்தது. watch tower வைத்துக் கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள். என்ன பயன்?" என்று வருத்தப்பட்டார் ஈரோடைச் சேர்ந்த சிலாஜுதீன். "ஹாஜிகளுக்கும் அஜாக்கிரதை அதிகம், கீழே போடும் சிகரெட்டைக் கூட யாரும் அணைப்பதில்லை. எண்ணெய் போன்ற தீப்பற்றும் பொருளையும், கீழே கொட்டி அசிரத்தையாக உபயோகிக்கிறார்கள். அங்கே கூட்டம் அதிகமாகி விட்டது. அவசரம் அதிகமாகி விட்டது. எனவே விபத்துக்களும் சகஜமாகி விட்டன."

பெரிய விபத்துக்கள் எதிலும் தமிழ் நாட்டு ஹாஜிகள் சிக்கி விடவில்லை என்றாலும் போன இடத்தில் நடந்த சம்பவங்களால் இவர்கள் மனம் கனத்துப் போயிருக்கிறது. எதிர்காலத்திலாவது இவ்வாறெல்லாம் நேராதிருக்க சௌதி அரேபிய அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்குமா என்று இவர்கள் கவலையோடு எண்ணுகிறார்கள்.

— உ. பரதன்

படங்கள்: சுபா

அடுத்த இதழில்



சுகாசினி

சிறப்புப் பேட்டி

பரிசு

சுஜாதா சிறுகதை

எங்கள் பாதுகாப்புப் பேழைகளைக் கையாள்வது குழந்தை விளையாட்டே!



உங்கள் தேவைக்கேற்ற பல அளவுகள்:
கம்ப்யூட்டர் இயக்கம், தானியங்கிக் கதவுகள்,
அடையாள அட்டைகள்... இன்னும் பல நவீன
முறைகள்:

முழுவதும் புதுமையானது.
குளிர்சாதன அமைப்புடையது.
கோட்டை போலக் கட்டப்பட்டது.

மதிப்பு மிக்க உங்கள் உடைமைகளை பாதுகாக்க
ஆண்டு ஒன்றுக்கு ரூ. 10 முதல் 20 வரை
செலுத்துக. பேழைகளில் உங்கள் செல்வங்களைப்
பாதுகாத்து நிறைவு பெறுக.



நாளொன்றுக்கு 2.7 பைசாவிற்கு மட்டுமே ஒரு பாதுகாப்பு பேழையை பி.எல்.பைனான்ஸ் உங்களுக்கு வழங்குகிறது.

முழு விவரங்கள் அடங்கிய பிரசுரத்தை
எனக்கு அனுப்ப வேண்டுகிறேன்:

பெயர்: ....

முகவரி: ....

தொலைபேசி: ....

பி.எல். பைனான்ஸ் அண்ட்
இன்வெஸ்ட்மென்ட் லிட்.
8, மேக்நிகல்ஸ் சாலை, சென்னை-600 031.
ஃபோன்: 473584

பி எல் பைனான்ஸ்
அண்டு இன்வெஸ்ட்மெண்ட் லிமிடெட்

பதிவு அலுவலகம்: ''கஸ்தூரி'' முதல் தளம், 6 ஸ்மித் ரோடு, சென்னை-600 002.
நிர்வாக அலுவலகம்: 1, அபெக்ஸ் சேம்பர்ஸ், 20, தியாகராய ரோடு, பாண்டிபஜார், தி.நகர்,
சென்னை-600 017 ஃபோன்: 440810.
பாதுகாப்புப் பெட்டக மையம்: ''ஜாஸ்மான்ஸ்'' 8, மேக்நிகல்ஸ் ரோடு, சேத்துப்பட்டு,
சென்னை-600 031. ஃபோன்: 473584.

உங்கள் உடைமைகளைப் பாதுகாப்பது பி எல் பைனான்ஸ் பாதுகாப்பு பெட்டகம்.

125 ஆண்டு பியர்ஸ் லெஸ்லியின் ஓர் அங்கம்



"ஆத்திகத்தையும், நாத்திகத்தையும் நான் சமநோக்கில் பார்க்கிறேன்" கருணாநிதி



கல்கி

1990 ஜூலை 22
மலர் : 48 இதழ் 51
பிரமோதூத ஆடி 6



ரூ. 4000 கோடி சிக்கனம்! — எங்ஙனம்?

'மத்திய அமைச்சகங்கள் எல்லாம் பத்து சதம் செலவைக் குறைக்க வேண்டும்' என்று நிதி அமைச்சர் மது தண்டவதே கேட்டுக் கொண்டிருக்கிறார். இதன் மூலம் நாலாயிரம் கோடி மிச்சமாகும் என்பது கணிப்பு. பின் விளைவாக, பட்ஜெட்டில் விழுந்த பற்றாக்குறை பெருமளவு குறையும்; எனவே பண வீக்கம் இராது; விலைவாசி உயராது! காகிதக் கணக்கு சரிதான். ஆனால் நடைமுறையில் 4000 கோடி என்ன, 400 கோடி கூட மிச்சம் பண்ண மாட்டார்கள்.

''விமான நிலையத்துக்கு வழி அனுப்பவும் வரவேற்கவும் பட்டாளம் பட்டாளமாக வர வேண்டாம்'' என்று முன்பு மொரார்ஜி கூறினார். யார் கேட்டார்கள்? இப்போது வாரத்தில் அரை நாள் பெட்ரோல் பங்குகளை மூடி வைத்துப் பொருளாதாரத்தையே புரட்டிவிட எண்ணுகிறார்கள்! அபத்தம். இவையெல்லாம் யானைப் பசிக்குச் சோளப் பொரி.

சிக்கனம் பற்றிப் பேசு முன்னர், 'எங்கே கோளாறு?' என்று சிந்திக்க வேண்டும். கடந்த நாற்பது ஆண்டுகளில் இலவசங்களுக்கு எல்லாரையும் பழக்கப்படுத்தி விட்டது தான் அடிப்படைத் தவறு. 'இலவசம்' என்னும் போது நாம் தமிழக அரசின் லட்டு திட்டத்தையோ வேட்டி — புடைவை விநியோகத்தையோ மட்டும் குறிப்பிடவில்லை. பகாசுர இலவசங்கள் — கண்ணுக்குத் தெரியாமல் — உள்ளன! உதாரணமாக, விவசாயிக்குக் குறைந்த விலையில் ரசாயன உரம் தர வேண்டும் என்பதால் ரசாயன ஆலைகளுக்கு ஆண்டுதோறும் அரசு பல கோடிக் கணக்கில் பணம் தந்து நஷ்டத்தை ஈடு செய்கிறது. இப்போது தேர்தல் வாக்குறுதிப்படி கடன் ரத்து — அதை நெசவாளிக்கும் விரிவாக்க உத்தேசம். அரசாங்க உத்தியோகங்களில் சம்பளம் தவிர 'பெர்க்ஸ்' எனப்படும் இலவசங்கள் ஏராளம். போதாக்குறைக்குப் பதின்மூன்று மாதச் சம்பளம் கட்டாயம். இப்படி எத்தனை எத்தனையோ! அநேகமாக எல்லா அரசுத்துறை நிறுவனங்களும் நஷ்டத்தில் நடக்கின்ற போது, நஷ்டத்தில் இயங்கும் தனியார் நிறுவனங்களையும் தொழிலாளர் நலன் கருதி அரசு ஏற்பது என்பது வேறு நடைமுறையாகி விட்டது!

இப்படியெல்லாம் சலுகைகளுக்குப் பழக்கப்படுத்திவிட்ட பிறகு, இப்போது இந்தச் சலுகைகளை வாபஸ் பெறுவதென்றால் எதிர்ப்புக் கூக்குரல்தான் எழும். மார்கரெட் தாட்சர் முன்பு கல்வி அமைச்சராக இருந்த போது, ''பள்ளிக் குழந்தைகளுக்குப் பால் தருவது அரசின் பணி அல்ல, அது பெற்றோர் கடமை'' என்று கூறினார். அவ்வளவு தான், ''Thatcher, Milk Snatcher!'' என்று கோஷமெழுப்பி அவரைப் படாதபாடு படுத்தி விட்டார்கள்! இங்கிலாந்திலேயே அப்படி என்றால் இங்கே கேட்க வேண்டுமா?

நவீனங்களை வரவேற்க நாடு தயாராகு முன்னரே நவீனப்படுத்துவதால் ஏற்படும் நஷ்டம் பல நூறு கோடி. உதாரணமாக ஏர் பஸ் 320க்கு ஏற்ப விமான நிலையங்கள் தயாராகு முன்னரே அவற்றை வாங்கியதில் என்ன நடந்தது? கடந்த சில மாதங்களில் அவை பறக்காததால் எவ்வளவு நஷ்டம்? கரையோரக் கடல் பகுதிகளில் எரிவாயு கிடைக்கிறது என்று குடைந்து விட்டார்கள். அதைப் பயன்படுத்திக் கொள்ள முன்னேற்பாடுகளைச் செய்யவில்லை. இதனால் எத்தனை எரிவாயு வீணே எரிக்கப்படுகிறது? எத்தனை கோடி நஷ்டம்? கணக்குப் பார்த்தால் தலை சுற்றும்!

இவ்வாறெல்லாம் முன் யோசனை இன்றி நடந்து கொண்டு விட்டு, இப்போது ''சிக்கனம், சிக்கனம்'' என்று அடித்துக் கொண்டால் என்ன பயன்? ராணுவச் செலவுகளைக் குறைக்க முடியாது. வேண்டுமானால் திட்டச் செலவினங்களைக் குறைத்து, நாட்டின் முன்னேற்றத்தை மேலும் தாமதப்படுத்தலாம்!

சிக்கலிலிருந்து மீள வழி இல்லாமல் போகவில்லை. முதலாவது சோஷலிஸக் கொள்கையை ருஷ்யாவே கைவிட்டு விட்டது என்பதை உணர்ந்து, நாமும் அதனை உடைப்பில் போட வேண்டும். பிரிட்டனில் தாட்சர் செய்தது போல், அரசுத் துறை நிறுவனப் பங்குகளைப் பொது மக்களுக்கு விற்று, அவற்றைத் தனியார் துறையாக்க வேண்டும். அரசாங்கத்தில் புதிதாக யாரையும் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு வேலைக்கு எடுப்பதில்லை; புதிய வாகனங்கள் வாங்குவதில்லை; அரசுத் துறையில் இனி புதிய நிறுவனங்கள் தோன்றாது என்றெல்லாம் முடிவெடுத்து, அவற்றில் உறுதியாக நிற்க வேண்டும். வரிகளைக் குறைத்தும், பர்மிட் — லைசென்ஸ் முறையை ஒழித்தும் கறுப்புப் பணப் பொருளாதாரத்துக்கு இடமில்லாமல் செய்துவிட வேண்டும். சுருங்கச் சொல்வதெனில், ''குறைந்தபட்ச அரசு; அதிகபட்ச மக்கள் சுதந்திரம்.''

இந்தக் கொள்கையைப் படிப்படியாக அமுலாக்கினால், அரசுக்குப் பிரச்னைகள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையும்; மக்களுக்கோ சுபிட்சம் வேகம் வேகமாகப் பெருகும்!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

கதை பிறந்த கதை!

நீல வானத்திலிருந்து பூரண சந்திரன் அமுதக் கிரணங்களைப் பொழிந்து கொண்டிருந்தான். பூவுலகம் மோகன நிலவிலே மூழ்கி அமைதி குடிகொண்டு விளங்கியது. எதிரே எல்லையின்றிப் பரந்து கிடந்த வங்காளக் குடாக் கடலில் சந்திரக் கிரணங்கள் இந்திர ஜால வித்தை செய்து கொண்டிருந்தன. கரையோரத்தில் சின்னஞ்சிறு அலைகள் அதிக ஓசை செய்து அமைதியைக் குலைக்க விரும்பாதவை போல் இலேசான சப்தத்துடன் எழுந்து விழுந்து கொண்டிருந்தன.

கடல் ஓரத்து வெண் மணலில் நாங்கள் உட்கார்ந்திருந்தோம். ரஸிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களும் இன்னும் இரு நண்பர்களும் நானும் இருந்தோம். வேறு மனிதர்களோ பிராணிகளோ கண்ணுக்கெட்டிய தூரம் காணப்படவில்லை.

மாமல்லபுரத்துக் கடற்கரை. பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னால் நடந்த சம்பவம். ரஸிகமணி அவர்கள் வழக்கம் போல் கவிதையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்.

'விதியின் எழுத்தைக் கிழித்தாச்சு! — முன்பு
விட்டகுறை வந்து தொட்டாச்சு!'

என்ற ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாரதியாரின் பாடல் வரிகளை அழுத்தந் திருத்தமாக எடுத்துரைத்தார்.

'முன்பு — விட்டகுறை வந்து தொட்டாச்சு!' என்னும் வரி ஒரு சக்தி வாய்ந்த மந்திரத்தைப் போல் என்னை மதிமயங்கச் செய்தது. அந்தக் கடற்கரை மணலில் அதே மாதிரி வெண்ணிலவில் இதற்கு முன் எத்தனையோ தடவை நான் உட்கார்ந்திருந்ததாகத் தோன்றியது. முந்தைய பிறவிகளில் விட்ட குறைதான் இங்கே என்னைக் கொண்டுவந்து சேர்த்து இன்று இந்தக் கடற்கரை ஓரத்திலே உட்காரச் செய்திருக்கிறது என்றும் தோன்றியது.

கடலிலே ஆயிரமாயிரம் படகுகளும் கப்பல்களும் திடீரென்று காட்சி அளித்தன. கரையிலே கூட்டங் கூட்டமாக ஆடவரும் பெண்டிரும் நடமாடிக் கொண்டிருந்தார்கள். சற்றுத் தூரத்தில் மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் எழுந்தன. அவற்றின் உச்சியில் ரிஷபக் கொடிகளும் சிங்கக் கொடிகளும் உல்லாசமாகப் பறந்தன. இனிமை ததும்பிய இசைக் கருவிகளிலிருந்து எழுந்த சங்கீதம் நாற்புறமும் சூழ்ந்து போதையை உண்டாக்கிற்று. கண்ணுக்குத் தெரிந்த பாறைகளில் எல்லாம் சிற்பிகள் கையில் கல்லுளியை வைத்துக் கொண்டு வேலை செய்தார்கள். எங்கேயோ யாரோ காலில் கட்டிய சதங்கை ஒலிக்க நடமாடிக் கொண்டிருப்பதை உணர முடிந்தது.

சிறிது நேரத்துக்கெல்லாம் அந்த அகக் காட்சிகள் தெளிவடைந்தன. உருவங்களும் முகங்களும் இனந்தெரியுமாறு எதிரே தோன்றின.

ஆயனரும் சிவகாமியும் மகேந்திர பல்லவரும் மாமல்லரும் பார்த்திபனும் விக்கிரமனும் அருள்மொழியும் குந்தவியும் பொன்னனும் வள்ளியும் கண்ணனும் கமலியும் புலிகேசியும் நாகநந்தியும் என்னுடைய மனக்கண் முன்னால் பவனி வந்தார்கள். அப்படிப் பவனி வந்தவர்கள் என் உள்ளத்திலேயே குடிபுகுந்து விட்டார்கள்.

இரண்டு தினங்கள் மாமல்லபுரத்தில் தங்கியிருந்தோம். அற்புதச் சிற்பங்களைத் தாங்கிய கற்பாறைகளைப் பார்த்தோம். குன்றில் குடைந்தெடுத்த கோயில்களையும் விமானங்களையும் பார்த்தோம். ஒவ்வொரு கல்லும் ஒரு கதை சொல்லிற்று. ஒவ்வொரு சிற்பமும் ஓர் இதிகாசத்தை எடுத்துரைத்தது. பார்க்கப் பார்க்க வியப்பு மிகுந்தது; கேட்கக் கேட்கப் பரவசமாயிற்று. கையிலே பிடித்த கல்லுளிகளையே மந்திரக் கோல்களாகக் கொண்டு எந்த மகா சிற்பிகள் இத்தகைய மகேந்திர ஜாலங்களைச் செய்தார்களோ என்று நினைத்தபோது அவர்களைக் கையெடுத்துக் கும்பிடத் தோன்றியது; அந்தச் சிற்பிகளிடம் தோன்றிய பக்தியினால் தலை தானாகவே வணங்கிற்று.

— *சிவகாமியின் சபதம் நூலுக்கு 1948 — இல் எழுதப் பட்ட முன்னுரையிலிருந்து சில பகுதிகள்.*


கல்கி
ஆகஸ்ட் 5 ஆண்டுமலரில் ஆரம்பம்
அமரர் கல்கியின்
சிவகாமியின் சபதம்

அதிர்ஷ்ட தேவதை

15

"ரமணி சார், எதுக்கு என்னை இந்தப் பார்க்குக்கு அழைச்சுட்டு வந்திருக்கீங்க?'' என்று ரங்கன் கேட்டான், சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே.

''அதோ குழந்தைங்களெல்லாம் விளையாடறாங்களே, அதை நீ பார்த்து ரசிக்க வேண்டாமா? அதுக்குத்தான்.''

''ரமணி சார், நான் மனசு இடிஞ்சு போயிருக்கேன். என்னிக்கு எந்த வேளையிலே மயில்சாமி கத்தியும் கையுமா எம் பேர்ல பாய்வான்னு பயந்து சாகறேன். நீங்க என்னைக் கேலி செய்யறீங்க!''

ரமணி பதில் கூறவில்லை. கடிகாரத்தின் பெரிய முள் பன்னிரண்டில் நிற்க, அவன் பூங்காவின் நுழைவாயிலைப் பார்த்தான். இருபத்தைந்து லட்சத்தைச் சூறையாட வருகிறவன் நிச்சயமாகக் காலதாமதம் செய்ய மாட்டான் என்று அவனுக்குத் தெரியும்.

சிவலிங்கம் நுழைவாயிலைக் கடந்து முன்னேறி நடந்து வந்து கொண்டிருந்தான்.

''அதோ ஒரு ஆள் வேட்டியும் மஞ்சள் கலர்லே அரைக்கை ஜிப்பாவுமா தொந்தி வழிய நடந்து வர்றானே, அவன் யார்ன்னு தெரியுமா, ரங்கா உனக்கு?''

ரங்கன் ஓரிரு வினாடிகள்தான் அந்த உருவத்தைப் பார்த்தான். பார்த்தவன் காலில் தேள் கொட்டியது போல,

''என் அண்ணன். அவர் எதுக்கு இங்கே வர்றார்?'' என்று அலறினான்.

''மயில்சாமி எதுக்கு வந்தான்?''

''பணத்துக்கு.''

''இவனும் அதுக்குத்தான்.''

''எனக்கு அண்ணனைப் பார்க்க வேண்டாம், ரமணி சார்.''

''நான் இருக்கேன், பயப்படாதே.''

சிவலிங்கம் பூங்காவின் மற்ற பகுதிகளில் தேடிக் கொண்டிருக்கையில் ரங்கன் பயத்தில் சிலிர்த்துக் கொண்டிருந்தான்.

பலசரக்குக் கடையில் அவன் பட்ட அடி உதைகள். அவன் வீட்டில் சரியாக மாவாட்டவில்லை என்ற காரணத்துக்காக அண்ணி கொட்டிய வெந்நீர். ஒரு மாதம் ஓட்டலில் கிடைத்த பத்து ரூபாய்க்கும் லாட்டரிச் சீட்டு வாங்கியதற்காக, அண்ணன் அடித்த செருப்பு. ஏதோ ஒரு கோபத்தில் அண்ணி அவனைக் கிணற்றடியில் இரவு முழுதும் உட்கார வைக்க, அப்போது அவனுடைய தலையில் கொட்டித் தீர்த்த மழை...

பி.வி.ஆர்.

எல்லாம் இப்போது இமைக்கும் நேரத்தில் ரங்கன் கண்முன் டீ.வி. விளம்பரங்கள் போல வந்தன.

மீண்டும் அவன் தலைநிமிர்ந்த போது ''தம்பீ...'' என்ற குரல் கேட்டது.

'அண்ணா!' என்று மறுகுரல் கொடுக்க அவன் நா அசையவில்லை.

''தம்பி, எப்படி இருக்கே...? சுகமா இருக்கியா...? அண்ணி உன்னை ரொம்ப விசாரிச்சா.''

ரங்கன் பதில் பேசவில்லை. என்னதான் வெகுளியாய், அப்பாவியாய் இருந்தாலும், இருபத்தைந்து லட்சம், இறந்து போன சொந்த பந்தங்களை உயிர் மூட்டி எழுப்புகிறது என்பதை உணர்ந்தான்.

''சார், என் தம்பி என் கூடப் பேசக் கூச்சப்படறான். ஆட்சேபணை இல்லேன்னா, அவனை நான் லாட்ஜுக்கு அழைச்சுட்டுப் போறேன்,'' என்றான் சிவலிங்கம் புன்முறுவலுடன் அமர்ந்திருந்த ரமணியைப் பார்த்து.

ரமணி இப்போது வாய் விட்டுச் சிரித்தான்.

''என்ன எஸ். லிங்கம் இப்படிக் கேக்கறீங்க? நீங்க இவனுக்கு அண்ணன். உங்களுக்கு இவன் தம்பி. நீங்க அழைச்சுட்டுப் போறதுக்கு நான் ஏன் ஆட்சேபணை செய்யணும்?''

''நீங்கதானே சொன்னீங்க, ரங்கன் உங்க பாதுகாப்பிலே இருக்கிறதா?''

''இப்பவும்தான் சொல்றேன். ரங்கனுக்கு உங்ககூட நீங்க தங்கியிருக்கிற லாட்ஜுக்குப் போகச் சம்மதம்னா போகலாமே!''

''வா, தம்பி போகலாம்.''

''நீங்க யார்ன்னு எனக்குத் தெரியாது'' என்றான் ரங்கன். இப்படிப் பேசத் தனக்கு எப்படிச் சாதுரியம் பிறந்தது என்று அவன் தனக்குள்ளேயே வியந்து போனான்.

''ரங்கா, என்னை யார்னு உனக்குத் தெரியலையா... பாவம் நீ, சின்ன வயசிலேயே மந்தனா இருப்பே.. ஆனா இப்ப மறதியுமா வந்துட்டுது? நான் உன் அண்ணன்டா. லிங்கம்டா.. நானும் உன் அண்ணி மரகதமும் ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ்லே கலியாணம் செய்ஞ்சுக்கிட்டப்ப நீதானே ஒரு சாட்சிக் கையெழுத்து போட்டே. அதையும் மறந்துட்டியா?''

''சரி, நீங்க என் அண்ணனாவே இருங்க.. இப்ப எதுக்கு என்னைப் பார்க்கக் கும்ப

கோணத்திலேர்ந்து வந்திருக்கிங்க?''

''பார்த்தாயா, நீயே நான் எங்கேந்து 'வந்திருக்கேன்னு சொல்லிட்டே. இவர்தான் சொல்லியிருக்கணும்.''

''அவர் என்னோட ரமணி சார். இங்கே வந்து சேர்ற வரைக்கும் அவரு உங்களைப் பத்தி ஒரு வார்த்தைப் பேசலை.''

''சரி, அப்படியே இருக்கட்டும். நாம ஒரே தாயோட வயத்தில் பொறந்தவங்க.''

''அம்மா சாகறதுக்கு முன்னாடி என்னையும் தம்பி கோவிந்துவையும் உங்க கையில ஒப்படைச்சுட்டு என்ன சொல்லி அழு தாங்க?''

''என்ன சொன்னாங்க, ரங்கா?''

''ஹாங், அம்மாவையும் அம்மா செத்ததையும் நீங்க உங்க சௌகரியத்துக்கு மறந்து போயிடுவீங்க... 'டேய் லிங்கம், இந்த ரங்கன் சாதுடா.. படிப்பு வரலே அவனை நீதான் உன் புள்ளை மாதிரிப் பார்த்துக்கணும்... கோவிந்து யார் சொல்லையும் கேக்காத முரடனா வளர்றான். அவனை நீதான் ஒரு வழிக்குக் கொண்டு வரணும். இவங்க ரெண்டு பேரையும் ஆளாக்கி விட்டுட்டுத்தான் நீ ஒரு பெண்டாட்டியைத் தேடிக்கணும்...' இப்படி அம்மா உங்ககிட்ட சொல்லலே? நீங்களும் சரின்னு அம்மாவுக்குச் சத்தியம் பண்ணிக் கொடுக்கலே!''

''இதையெல்லாம் ஏன் ரங்கா, இப்ப எனக்கு ஞாபகப்படுத்தறே?''

''நீங்க என்னை அடிச்சிங்க, உதைச்சிங்க. மூணு நாள் சோறு தண்ணி இல்லாம பட்டினி போட்டீங்க. அண்ணி வெந்நீரை எம் மேலே கொட்றப்ப நீங்க அவளைத் தடுக்காம வேடிக்கை பார்த்தீங்க... எனக்குப் புத்தி மந்தம்தான். நான் அஞ்சாங்கிளாசுக்கு மேல் படிக்காதவன்தான். ஆனா ஆண்டவன் எனக்குன்னு ஒரு தெய்வத்தைக் கொடுத்திருக்கான்... இந்த ரமணி சார்தான் அந்தத் தெய்வம். இப்ப நான் எதுக்கு உங்களோட வரணும்?''

சிவலிங்கம் ஓரிரு நிமிடங்கள் வாயடைத்துப் போய் நின்றான். பிறகு மெல்ல—

''இப்படியெல்லாம் பேச உனக்கு யார் சொல்லிக் கொடுத்தாங்க, ரங்கா?'' என்றான்.

''அனுபவம் பேசறது!'' என்றான் ரமணி, இன்னும் சிரித்துக் கொண்டே. பிறகு, ''லிங்கம் நீங்க எதுக்கு உங்க தம்பியைப் பார்க்க இப்ப வந்திருக்கிங்கன்னு சொல்





வேடிக்கை என்

மத்யமர் பிரச்னைகள், சிக்கல்களைப் போலித்தனமற்ற யதார்த்த உணர்வோடு அணுக இன்றைய திரையுலகில் விசுவைத் தவிர இன்னொருத்தர் இனிமேல்தான் வெளிப்பட வேண்டும்.

மனிதர் பார்வையாளர் கவனத்தைப் பறித்து வைத்துக் கொள்ளும் தந்திரத்தை என்னமாய்க் கற்றிருக்கிறார்! கதை ஏதோ கன்னா பின்னாவென்று நானா திசைகளில் சிதறினாலும் அத்தனைக்கும் ஊடே முதுகெலும்பாய் நிற்கும் அந்த சஸ்பென்ஸ்? கல்யாண வயசில் நிற்கும் பெண்ணும் பிள்ளைகளும் வைத்துக் கொண்டு, பெற்றோர் இருவரிடையேயும் பேச்சு வார்த்தை இல்லாதது மட்டுமல்ல; பெண்டாட்டி கையால் பச்சைத் தண்ணீரும் வாங்கிப் பருகாத அளவுக்கு அப்படியொரு பகைமை நிலவுகிறதே, காரணம் என்னவாயிருக்கும்? அந்த ஒரு கொக்கியில் தொங்கிக் கொண்டு தானே மற்றதையெல்லாம் வேடிக்கை பார்க்க வேண்டியிருக்கிறது?

வெற்றுப்பார்வையிலும்உதட்டுமுறுக்கலிலுமே அத்தனை பேரையும் கிழித்துப் போட்டுக் கொண்டிருக்கிறார் விசு. அந்த முறைப்பிலே வெரைட்டி காட்ட வராததால் ஒரு கட்டத்துக்கு மேல் அதற்கு வேல்யூ அம்பேல்.

சிரிப்பு மூட்டுவதையே பிரதான நோக்கமாய்க் கொண்ட படத்தில் சில யதார்த்த அத்துமீறல்களும் உண்டு. உதாரணம்: எப்படியும் வீட்டை விட்டு வெளியேறுவது என்ற முடிவுக்கு வந்து விட்ட மகள் அடியெடுத்து வைத்தாயிற்று. அப்புறம் விசு குறுக்கிட்டு, தம் மேல் துண்டைத் தூக்கிப் போட்டு, 'அந்தத் துண்டைத் தாண்டிப் போனே, அப்புறம் கொலை விழும்,' என்று பூச்சாண்டி காட்ட, மகள் கொஞ்சம் தயங்கிய பிறகு சாவதானமாய் அந்தத் துண்டைத் தாண்டி நடைப்பக்கம் நகர, அங்கே தம் வேட்டியை அவிழ்த்துப் போட்டுக் கால் சட்டையோடு நின்று அதே மிரட்டலை மீண்டும் பிரயோகிக்க, மகள் அதையும் தாண்டிப் போனதும் அவர் கால் சட்டைப் பக்கம் கைவைக்க, மூத்த மகன் சேகர் ஓடோடி வந்து அவர் கையைப் பற்றிக் கொண்டு தடுத்து அலறுவது ஏக கலகலப்பு.

விட்டா ஒரு வேளை ரங்கன் மனசு இளகி மாறலாம், இல்லியா?'' என்றான்.

ரமணியின் கேள்வியின் உள்ளர்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல், யதார்த்தமாக எடுத்துக் கொண்ட லிங்கம், ''நீங்க சொல்றதும் சரிதான்'' என்று கூறி விட்டு, தம்பியைப் பார்த்து, ''ரங்கா, உன் உடம்பு துரும்பாப் போயிடுத்து. நீ நல்லாச் சாப்பிட்டு நிறைய நாள் ஓய்வு எடுத்துக்கணும்.. நல்ல இடத்தில் பெண் எடுத்து உனக்குக் கட்டி

சேகர் — ரேகா முதல் தனிமைச் சந்திப்பில் காதல் மலரும் கட்டத்தில் திரையுலகக் காதல் தேவதைகள் சில சுற்றிவர, சேகர் அவர்களிடம் கேட்கிறார். ''ஆமா, சினிமாவிலே காதல் மலரும் போது வழக்கமா பத்து இருபது பேர் வருவாங்களே'' என்று. அதற்கு ஒரு காதல் தேவதை சொல்கிறது: ''உங்கமூஞ்சிக்குநாங்கநாலுபேர்போதும்னு தான்!'', குபீர்ச் சிரிப்பு எழுகிறது அரங்கில்.

திலீப்பின் ஒன்றுக்கும் உதவாத தந்தை வெ. ஆ. மூர்த்தி. அவர் தந்தை சுதந்திரப் போராட்டத்தியாகிபூரணத்தைச்சரிக்கட்டப் பத்தமடை பரந்தாமன் என்று ஒரு பெயரை விசு சொன்னாலும் சொன்னார், பூரணம், 'அந்தப் பத்தமடை பரந்தாமன் யாரு?' என்று கேட்டு அழ மாட்டாத குறையாய்ப் படுகிற அவஸ்தை இருக்கிறதே, ஏக அமர்க்களம். அந்தக் கிழவரைக் கடத்திப் போய் அடைத்து வைத்து, பழியை மைத்துனர் கிஷ்மூ, மூர்த்தி மேல் சுமத்தித் திசை திருப்பி நாடகமாடுவதும் பூரணம் மனம் மாறி விசுவுக்கு ஒத்துழைப்புத் தருவதும் சுவையான கதைத் திருப்பங்கள்.

மானாவாரிநடிகர்கள்—நடிகைகள். சர்க்கஸில் தேர்ந்த ரிங் மாஸ்டரைப் போல் அத்தனை பேரையும் அளவோடு ஷோ காட்டி உறும விட்டிருப்பதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. 'விசு படமா? ஏதேனும் மெஸேஜ் இருக்குமே!' என்று கேட்கிறவர்களுக்குச் சரியான பதில் சொல்ல முடியுமா? குறிப்பாய் ஒன்று அல்ல; சின்னச் சின்ன

வாடிக்கை

தாய்ப் பலது. கட்டின புருஷனிடம் கடந்த காலக் காதல் கதையை உளறி வைக்காதே; கல்யாணமாகுமுன் கட்டிலுக்கு அழைத்தால் போகாதே; கலப்புக் கல்யாணம் பண்ணிக் கொண்டு... மன்னிக்கணும், இந்த அறிவுரை என்னமோ இடிக்கிற மாதிரி இருக்கிறது.

டாக்டர் விசு தயாரித்துள்ள சிரிப்பு டானிக்.

— பி. எஸ். எஸ்.

வைக்கணும். நம்ப அம்மா சொன்ன வாக்கை நான் அப்பக் காப்பாத்தலே... இப்பவாவது காப்பாத்திடறேன்... வா, நாம கும்பகோணத்துக்குப் போவோம்.''

''ரமணி சாரும் கூட வந்தால் நான் வரேன்.''

ரமணி வாய் விட்டுச் சிரித்து விட்டுச் சொன்னான்: ''ரங்கா, உனக்குச் சமர்த்தும் சாமர்த்தியமும் வந்துட்டுது. உன்னை யாராலும் இனிமேல் அசைக்க முடியாது!''

சிவலிங்கத்துக்கு ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வந்தது.

''என்ன சார் நீங்க பக்கவாத்தியம் வாசிக்கிறீங்களா? இவன் என் தம்பி. இவன் மேலே எனக்கு உரிமை உண்டு.''

''அதை நிலைநாட்ட உங்களுக்கு இப்பத்தானே வேளை வந்தது? இந்த ஆறு வருஷத்தில் தம்பி எங்கே இருக்கிறான், வேலையிலே இருக்கானா இல்லே பிச்சை எடுக்கிறானான்னு ஒரு தடவையாவது விசாரிச்சிருக்கீங்களா? ஒரு பொங்கலுக்கு ஒரு தீபாவளிக்குக் கூப்பிட்டிருக்கீங்களா? எப்படிக் கூப்பிடுவீங்க? இவன் விலாசமே நேத்துப் பேப்பர் பார்த்துத்தானே தெரியும்?''

''வாயை மூடுங்க!'' என்றான் சிவலிங்கம். பிறகு, ''வாடா ரங்கன்,'' என்றான்.

''நீங்க என்னை வாடான்னு கூப்பிடறீங்களா இல்லே என் லாட்டரிப் பணத்தை வரச் சொல்லிக் கூப்பிடறீங்களா?'' என்றான் ரங்கன்.

''சபாஷ் ரங்கா!''

''நான் போலீசுக்குப் போவேன்... 'ரமணிங்கற ஒரு ஆள் என் தம்பியைத் தன் பிடியில் வைச்சிருக்கான்னு கம்ப்ளெய்ன்ட் கொடுப்பேன்!''

''ஏன் நின்னுட்டே இருக்கீங்க, லிங்கம். இதே ரோட்லே நேரே போனா வாய்க்கால் வரும். வாய்க்காலைத் தாண்டி ஒரு நிமிஷம் நடந்தா இடது பக்கமா போலீஸ் ஸ்டேஷன் இருக்கு. அங்கே துரைசாமின்னு இன்ஸ்பெக்டர் இருக்கார். வில்லியம்ஸ்னு சப் — இன்ஸ்பெக்டர், ஸ்டேஷன் ரைட்டர் பேரு கோதண்டராமன். போய் மொதல்லே கம்ப்ளெய்ன்ட் கொடுங்க. அப்புறம் நாங்க ரெண்டு பேரும் வர்றோம்.''

சொன்ன ரமணி எழுந்தான்.

''வா ரங்கா... நீ மனுஷன். ஒரு லட்சாதிபதி. தலைநிமிர்ந்து நடந்து வா...''

வீட்டை அடைந்ததும், ரமணி ரங்கனைத் தன் தாயாரிடம் அழைத்துச் சென்றான்.

''என்னடா ரமணி?'' என்று கேட்டாள் கோமதி.

''அம்மா, நீ எனக்காக ஓர் உபகாரம் செய்யணும்.''

''என்ன? அதுக்குத்தானே நான் பிறந்திருக்கேன்!''

''விளையாடாதே அம்மா... மூணு பேருக்குத் தினமும் சமைக்கிற நீ இன்னி ராத்திரியிலிருந்து இவனுக்கும் சேர்த்துச் சமைச்

கடு..."

"ரமணி சார்... வேண்டாம் சார். வேண்டாம் ரமணி சார்... அம்மாவுக்கு என்னாலே ஒரு சிரமமும் இருக்கப்படாது."

"இப்ப நிலைமை மோசமாயிட்டு வர்றது, அம்மா. கொஞ்ச நாள்லே எல்லாம் சரியாப் போயிடும். அதுவரைக்கும் இவன் வெளியே வாசல்ல போகப்படாதுன்னு எனக்குப் படறது."

"ஆமாமாம்! இன்னிக்குக் கூட ஒரு ரெளடி பேரை மாத்திச் சொல்லி ஏமாத்தி இவனைத் தாக்க வந்தான். நாளைக்கு யார் வருவாங்களோ? மொதல்ல போலீஸ்ல சொல்லி, ஓர் ஆளை நம்ப வீட்டு வாசல் வராந்தாவில் உட்காரச் சொல்லு. போலீஸ் உடுப்பு இல்லாம இருக்கட்டும்."

"இந்த ஐடியா எனக்கு வரவே இல்லே அம்மா.... இன்னிக்கே துரைசாமியைப் பார்த்துடறேன்."

"ரமணி சார்!" என்றான் ரங்கன்.

"என்னடா, ரங்கா?"

"மெட்ராஸ் வந்த புதுசிலே உங்க வீட்ல தான் ரெண்டு மூணு மாசம் தங்கினேன். தாத்தாவுக்கு ஒத்தாசையா இருந்தேன். நான் ஏன் உங்க வீட்டுக்கும் தாத்தாவுக்கும் வேலை செய்யக் கூடாது?"

"ஏன்னா, நீ இப்ப லட்சாதிபதி! மத்தவங்ககிட்ட வேலை வாங்கறதுதான் உன் வேலை!"

"அப்ப நான் இங்கே தண்டச் சோறு சாப்பிடணும்னு சொல்றீங்களா?"

"யார் சொன்னா... ரூம் வாடகை நூறு ரூபா. அதைத் தாத்தாகிட்டக் கொடு. சாப்பாட்டுச் செலவுக்கு மாசம் ஐந்நூறு ரூபா. அதை என் அம்மாகிட்டக் கொடு. என் அம்மா சமையல் நாக்குக்கு அமிர்தமா இருக்குன்னு இங்கேயே டேரா போட்டுடாதே... கொஞ்ச நாள்லே நானே உன்னை வேறு ஒரு வீட்டிலே குடி வைச்சுடப் போறேன்!"

கோமதி சிரித்தாள்.

மறுகணம் வாசலில் ஒரு பெண்ணின் குரல் கூரையைப் பிய்க்கும் ஓசையில் கேட்டது.

"யார்டா அது ரமணி?"

"தனம்!" என்றான் ரங்கன்.

"வா ரங்கா அவளை வாசல்லேயே நிக்க வைச்சுப் பேசி அனுப்பிடுவோம். நீ இப்பத்தான் ரொம்ப தைரியமா இருக்கணும்!" என்றான் ரமணி.

சொன்னவன் வாசலை நோக்கி நடக்க, ரங்கன் பயத்தில் இதயம் துடிக்கப் பின் தொடர்ந்தான்.

கோமதிக்கும் சுவாரஸ்யம் ஏற்பட, அவளும் திண்ணைக்குப் புறப்பட்டாள்.

(தொடரும்)

அருள்வாக்கு

தூக்கத்திலே அத்தனை ஸௌக்யம், சாந்தி. ஆசையின் பிடுங்கல், மனஸின் அரிப்பு இல்லாமல் நாம் நிம்மதியாயிருப்பது தூக்கத்தில்தான். நமக்குத் தகுதி இல்லாவிட்டாலும் பகவான் பரம கருணையால் தினமும் ஏழெட்டு மணி இந்தச் சாந்த நிலையை அநுக்ரஹம் பண்ணுகிறார். ஒருகால் பிறரிடம் கருணையால் நாம் அவர்களுக்கு இந்த ஏழெட்டு மணியாவது உபத்ரவம் பண்ணாதிருக்கவே நம்மைத் தூங்கப் பண்ணுவதாகவும் இருக்கலாம்.

அப்படியானால் மனஸ் இல்லாமல் அதிலிருந்து முளைக்கும் ஆசை இல்லாமல் நாம் சாந்தமாக இருக்க வழி தூங்கிக் கொண்டேயிருப்பதுதானா? நிறையத் தூக்க மாத்திரை வாங்கி வைத்துக் கொண்டு முழித்துக் கொள்ளும் போதெல்லாம் போட்டுக் கொண்டு மறுபடி தூங்கி விடலாமா?



அது ஸரியில்லை.

ஜட நிலைமைக்கு அப்புறம் ஓரறிவிலிருந்து ஆறறிவு என்று ஸ்ருஷ்டி க்ரமம் உயர்ந்து கொண்டே போவதில் மநுஷ்யன் உச்சாணியில் இருக்கிறான். இந்த ஆறறிவால் இவனுக்கு ஏகப்பட்ட உபத்ரவங்கள், ஹிம்ஸைகள் ஏற்படுவது வாஸ்தவந்தான். ஆனால் அதற்காகப் பேடி மாதிரி ஒருவன் தன்னை நபும்ஸகனாக்கிக் கொள்கிற மாதிரி, இதுகள் எல்லாவற்றையும் சக்தியிழக்கப் பண்ணி ஜடமாக்குவது கொஞ்சங்கூட அழகில்லை. ஆறறிவுகளால் ஹிம்ஸை உபத்ரவம் வந்தாலும் எத்தனையோ நல்லதும் பண்ண முடிகிறதோ இல்லையோ? உசந்த தத்துவ விசாரணை, ஸங்கீதம், சில்பம், பொதுஜன ஸேவை, அன்பு, தியாகம், இப்படி எத்தனையோ நல்லவற்றிலும் கர்மேந்திரிய ஞானேந்திரியங்களையும் மனஸையும் செலுத்த முடிகிறதோல்லியோ? இப்படிச் செய்ய முயல வேண்டும். அப்புறம் ஆறறிவுக்கு மேலே ஒரே அறிவாக ஆக, ஞான விசாரம் செய்ய வேண்டும்; ஆறறிவுக்குக் கீழே ஜட நிலைக்குப் போகப் படாது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

நிறங்கள்

"அதுக்குள்ள தூங்கியாச்சா?'' — பத்மா பால் செம்பும் தம்ளருமாய்ப் படுக்கையின் விளிம்பில் வந்து அமர்ந்தாள். வரதராஜன் உடல் தளர்த்திப் பேசாமல் கண்மூடிக் கிடந்தான். நெஞ்சில் கைவைத்து உலுக்கினாள். மெல்லக் கண் பிரித்துப் பார்த்தான். மெல்லிசாய் விடிவிளக்கு நீலநிற ஒளியை உமிழ்ந்து கொண்டிருக்க, பத்மாவின் முகம் பக்கவாட்டில் ஜொலிப்பாய்த் தெரிந்தது!

''இந்தாங்க பால்.''

''குட்டிக்குக் கொடுத்துட்டியா?''

''ஆச்சு! அவளுக்கு ஒரு பாட்டில் பால் கொடுத்துப் படுக்க வைக்கிறதுக்குள்ளே... யப்பா உசுரு போறது...''

''வேணும் வேணும்னு தவிச்சயே!''

வரதன் எழுந்து பால் தம்ளரை வாங்கினான். உதடு மீசை எல்லாம் நுரை ஒட்ட உறிஞ்சினான். பத்மா கை உயர்த்திச் சோம்பல் முறித்தாள். சேலை இறுக்கம் தளர்த்தி, பின்னலை அள்ளி முடிந்து கொண்டு 'பொத்'தென்று படுக்கையில் சரிந்தாள். அந்த க்ஷணம் மகா சுகமாயிற்று. வீட்டு வேலை மொத்தமும் துடைத்துப் போட்டு விட்டுத் துவண்டு விழும்போது, மின் விசிறி காற்று வந்து மோத, ஏற்படுகின்ற சுகம்!

''அக்கா லெட்டர் எழுதியிருக்கா. நம்ம ரமா பெரியவளாயிட்டாளாம். நாளைக்குத் தண்ணி ஊத்துறாளாம். அடுத்த வாரமே விசேஷம் வைக்கப் போறாளாம். எழுதியிருக்கா.''

''ரமாவா? ரொம்பச் சின்னப் பொண்ணா இருந்தா!''

''இப்ப நேர்லே பார்த்தீங்கன்னா அசந்துடுவீங்க. நெடுநெடுன்னு எப்படி வளர்ந்துட்டா தெரியுமா? ஆடிப்பெருக்குக்குப் போயிருந்தப்ப அவங்க அக்கா சேலையைச் சுத்திக்கிட்டு வந்து நின்னா பாருங்க, பெரிய மனுஷியாட்டம்.''

''பொம்பளையோட வளர்த்தியும் பொடலங்காய் வளர்த்தியும் ஒண்ணும்பாங்க! இன்னைக்குப் பார்த்துட்டு நாளைக்குப் பார்த்தாலும் வளர்த்தி தெரியுமாம்.''

''லீவுக்கு ஆபீஸ்ல இப்பவே சொல்லிடுங்க. அடுத்த வாரம் லால்குடி போகணும். நம்ம முறைக்கு ஒரு தாவணித் துணி எடுக்கணும். ராக்போர்ட்டுல ரிசர்வ் பண்ணிட்டாக் கூடத் தேவலை. பிற்பாடு அலைய வேண்டியதில்லை...''

''ரொம்பவும் தான் ஆடாதே பத்மா. ரெண்டாள் லால்குடி போய் வர இப்ப நம்மாலே முடியாது. லீவ் போட்டா சம்பளம் கட் பண்ணிடுவான். இப்பவே பட்ஜெட் உதைக்குது. அப்புறம் அடுத்த மாசச் செலவுக்கு என்ன பண்ணுவியாம்?

''நம்ம முறைக்குச் செய்யத் தானே வேணும்?''

''இதுக்குப் போய் அலட்டிப்பானேன்? பேசாம ஒரு வாழ்த்துத் தந்தி கொடுத்துடுவோம். வீட்டோட நிலைமை தெரியாத பேசுறியே பத்மா?''

''அவ்வளவுதான். வேற வெளனையே எனக்கு வேண்டாம். பெரியவளுக்கே ஒண்ணும் பண்ணலென்னு இன்னும் குத்திக் காட்டிட்டு வர்றா. இதுக்கும் ஒண்ணும் பண்ணாட்டி அப்படியே ஒதுக்கிடுவாங்க. சும்மாவே நம்மளை யாரும் மதிக்கிறதில்லை....''



பாரதிபாலன்



''யார் மதிச்சு என்னாவப் போவுது?''

''அப்படி விட்டேத்தியா இருந்துட முடியுமா? நாமளும் நாலு மனுஷா மதிக்க, மதிக்கிற மாதிரி வாழணும்னு ஆசை வருதே. லேசா முகம் சுளிச்சுட்டாங்கன்னாக் கூட பளிச்சுனு குத்துதே! ஏதோ நம்மாலே முடிஞ்சதைப் பண்ணுவோம்.''

''இதோ பாரு பத்மா, விவரம் புரியாம பேசாதே. ஒரு தாவணியோட போயிடுமா? ரெண்டாள் போய் வரணுமே. எப்படியும் ஒரு நாள் தங்கணும்.... செலவு எவ்வளவு ஆகும் தெரியுமா?''

''எதுனா செய்யுங்க. நான் அசிங்கப் படணும்.''

பத்மா சட்டென்று முகம் சுருக்கி வேறு பக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டாள். வரதன் மலர மலர உத்திரம் பார்த்தான். ஏதோ ஒன்று மனசை அழுத்திக் கிறங்கடித்தது. மெட்ராஸிலிருந்து லால்குடி போய் வர இரண்டு ஆட்களுக்குச் செலவு ஐந்நூறாவது ஆகும். தனியார் கம்பெனியில் இஷ்டம் போல் லீவு போட முடியுமா? ஆயிரம் கேள்விகள் எழுப்புவார்கள். போன மாசமே கடன் பிடித்தது போக, பாதிதான் கைக்கு வந்தது. வீட்டு வாடகைப் பாக்கி இருக்கின்றது; மளிகைக் கடை பாக்கி. இப்படித் திரும்பிய திசையெல்லாம் பூதம். கோரமாய்ப் பல் நீட்டி, விழிபிதுக்கி ராக்ஷச நகங்களோடு யுத்தத்திற்கு நிற்கின்ற பூதம். எத்தனை போராடினாலும் வீழ்த்த முடியாத பூதம்.

''நூறு ரூபாய் கிஃப்ட் செக் வாங்கி அனுப்பிடலாமா?''

''..........''

''ஏய்!''

''..............''

''சனியனே வாய்திறந்து பேசுடீ! கேக்குறேன்லெ! செக்கு அனுப்பிடலாமா? ரொம்ப ஸிம்பிள்!''

''அம்மிக் கல்லைத் தூக்கி என் தலையிலே போட்டுடுங்க. ஸிம்பிளாப் போயிடும். எந்த உபத்திரவமும் இருக்காது. அப்புறம் உங்க இஷ்டம்தான் எல்லாம்.''



''பக்கத்து சீட்கிளார்க் எனக்குத் துரோகம் பண்றார் சார்.''

''எப்படி? ''

''வாங்குற லஞ்சத்துல பத்து சதவீதம் சிறப்புத் தள்ளுபடி தந்து வர்ற கூட்டத்தை அவர் பக்கம் இழுத்துக்கறாரு.''

— வி. கி. குமார்.

பத்மா குப்புறக் கவிழ்ந்து கொண்டு உடல் குலுங்க அழுதாள். வரதனுக்குப் படபடப்புக் கூடிற்று. இரண்டு கைகளையும் மடித்துத் தலையில் வைத்துக் கொண்டு இறுகக் கண் மூடிக் கொண்டான்.

ஆபீஸில் லீவுக்குச் சொன்னான். சம்பளம் இல்லாத லீவு ஸாங்ஷனாயிற்று. அடுத்த மாதம் பெரிய பாளமாய்த் துண்டு விழும். ஒழியட்டும்! பிசிறு பிசிறாய் நிறையச் செலவுகள் தலை தூக்கிப் பார்க்கும்! லால்குடிக்குப் போகக் கைச் செலவுக்கு வேறு பார்க்க வேண்டும். எப்படிச் சமாளிக்கப் போகிறேனோ? சமாளிக்க வேண்டும்! பத்மாவின் சந்தோஷம் தான் முக்கியம். அவளின் படபடப்பு அடங்கி, ஆனந்தப் படச் செய்ய வேண்டும். வரதன் அவளுக்கு அருகில் அமர்ந்து கொண்டான்.

''ராக்ஃபோர்ட்டுலே டிக்கெட் வாங்கிடவா?''

''லீவு?''

''சொல்லிட்டேன். சம்பளம் பிடிச்சுப்பானாம்.''

''எப்படியாவது தேர் பண்ணிடலாம். சாப்பாட்டுலே குறைச்சுப்போம். செலவுகளைச் சுருக்கிடுவோம்.''

''வாங்கிடவா?''

''ரயில் வேண்டாம். பணம் ஜாஸ்தியாகும். பஸ்லேயே வாங்கிடுங்க.'' வரதன் சட்டென்று எழுந்தான். பத்மா அருகில் வந்து அவன் கையை மெல்லப் பற்றினாள்.

''என்பேர்ல கோபமா?'' என்றாள். வரதன் மெல்லச் சிரித்துக் கொண்டே நடை வாசலுக்கு வந்தான். சைக்கிள் ஸ்டாண்ட் விலக்கி ''வரட்டுமா?'' என்றான்.

''மார்க்கெட் போக வேண்டாம்.''

''ஏன்?''

''இந்த ஒட்டையை அடைக்கணுமே! இனி வெறும் மோருஞ்சோறுதான். பால் கூட நிறுத்திடுவோம். பாப்பாவுக்கு மட்டும் வெளியிலே வாங்கிக்கலாம்.''

வரதன் சைக்கிளை மிதித்துக் கிளம்பினான். அது அவன் மனசு போல சளர்ந்து இடம் மாறிற்று. பத்மா, வீட்டு நிலவரம் தெரியாதவள் அல்ல. ஒவ்வொரு நாளும் எத்தனை ஹிம்சை பண்ணிவிட்டு நகர்கின்றது என்று புரியாதவள் அல்ல! இருப்பினும் பத்துப் பேர் கூடுகின்ற இடத்தில் தன் கொடி தாழ்ந்துவிடக் கூடாது என்ற ஈகோ! 'ஆஹா' என்று பாராட்டுப் பெற வேண்டும் என்று ஏங்குகின்ற புத்தி!

ஊருக்குக் கிளம்புகின்றது மாதிரியான உற்சாகம் வேறு ஒன்றிலும் இருக்க முடியாது. பைகள் பிதுங்க, நினைத்து நினைத்துப் பொருட்களை எடுத்துத் திணிக்கின்ற வேகம். மொத்த உற்சாகத்துக்கு நடுவேயும் ஒரு புள்ளி. உறுத்தல் இருந்து கொண்டுதானிருந்தது. கைச் செலவுக்குப் போதாது என்று பத்மா பக்கத்து வீட்டு வாத்தியாரம்மாவிடம் இருநூறு வாங்கி வந்தாள். பால், காய்கறி என்று சுருக்கியதில் இருநூறு நீண்டது. கையில் இரண்டு நூறு இருந்தது.

''டிரெஸ் லால்குடியில எடுத்துடலாமா, பத்மா?''

''இங்கே மெட்ராஸ்ல இல்லாத துணியா? ஒரு தாவணி ஒரு பாவாடை போதும். மாம்பலத்தில போய் எடுத்தாந்துடுவோம்.''

''அங்கேன்னா அதுகளுக்குப் பிடிச்சதை எடுக்கலாமேன்னு பார்த்தேன்.''

''இங்க எடுத்தா ஒருமவுசுதான். மெட்ராஸ்லேருந்து எடுத்துக்கிட்டு வந்த டிரெஸ்னு பிதுக்கிப் பிதுக்கிப் பார்க்குங்க...''

இருபத்தி மூன்று கடைகள் ஏறி இறங்கி, பின்பு கத்தரிப்பூ கலரில் ஒரு தாவணியும் ரோஸ் கலரில் பச்சைக் கரை போட்ட பாவாடையும் வாங்கினாள்.


''கஷ்டம்டா சாமி. இத்தனை கடையா ஏறி இறங்குவே?''

''இதோ பாருங்க, எத்தனை கஷ்டம் தாண்டி ஜவுளிக்கடை மிதிச்சிருக்கோம். நல்லதாப் பார்த்து எடுக்க வேண்டாமா? நமக்கா எடுக்கிறோம்? கடனேன்னு தூக்கிட்டுப் போறதுக்கு? அடுத்தவங்களுக்கு எடுக்கிறோம். ஒரு சொல்லு வந்துடப்படாதுங்க...''

''உன் இஷ்டம் தாயி.''

லால்குடியில் விசேஷ வீடு நிரம்பி வழிந்தது. நடை, வாசல், ரேழி, முற்றம் என்று பெண்கள் உட்கார்ந்து எதை எதையோ பேசிக் கொண்டிருந்தார்கள். சிறிசுகளும் பெரிசுகளும் பளபளப்பாய் உடுத்தி, சிரிப்பும் ரகளையும் ஒரே அமர்க்

ஒரு போஸ்ட் கார்டு போதும்!...



ஒரு போஸ்ட் கார்டு உங்களது வாழ்க்கையில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தப் போகிறது என்று நாங்கள் சொன்னால் உங்களுக்கு வியப்பாகத் தோன்றலாம். ஆனால் உண்மை அது தான்!.

★ ஆங்கிலத்தில் பேசினால் ஏதாவது தவறாகப் பேசி விடுவோமோ என்ற தயக்கமின்றி சரளமாகப் பேச...

★ இலக்கணப் பிழை ஏற்பட்டுவிடுமோ என்ற பயமின்றி ஆங்கிலத்தில் கடிதங்கள், கட்டுரைகள் எழுதும் ஆற்றல் பெற...

தமிழகத்தின் தலைசிறந்த கல்வி நிலையம் என்ற தனிப்புகழ் பெற்ற விவேகானந்தா கல்வி நிலையத்தினர் மிகச் சிறந்த முறையில் பயிற்சியளித்து வருகிறார்கள்.

வீட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில் தமிழில் தபால் மூலம் நீங்களும் இப்பயிற்சியை மேற்கொள்ளலாம்.

"நேர்முகப் பயிற்சியும் உண்டு"

மேலும் தகவல் அறிய ஒரு போஸ்ட் கார்டில் உங்களது விருப்பத்தை எழுதி எங்களுக்கு அனுப்பினால் போதும்!

பயிற்சி பற்றிய தகவல் புத்தகத்தையும், விண்ணப்ப மனுவையும் உடனே உங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.

உங்களது முன்னேற்றத்தின் முதல் முயற்சி இன்றே துவங்கட்டும்!

நீங்கள் கடிதம் எழுத வேண்டிய முகவரி:

விவேகானந்தா கல்வி நிலையம்

தபால் பெட்டி எண்: 4986. 9. மேட்லி ரோடு, தி.நகர், சென்னை-17.

கனம். வயசுக்கு வந்த பெண்ணை, ஜோடித்து, நடு ஜமுக்காளத்தில் உட்கார வைத்திருந்தார்கள். கலர் ரிப்பன் கட்டி நிறைய பார்சல்கள் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போனார்கள். சில்வர், வெள்ளி என்று பாத்திரங்கள் கொண்டு வந்தார்கள். ஒவ்வொருவராய் நகர்ந்து போகப் பத்மா முன்னேறி வந்தாள்.

''ரமாவுக்குத் தாவணி எடுத்தாந்திருக்கேன்.'' பத்மா மனசு துள்ள பார்சலை நீட்டினாள். ரமாவின் அம்மா ஆர்வமாய் வாங்கிக் கொண்டாள். பார்சலைப் பிரித்ததும் அவளின் விழிகள் அகன்று ஆச்சரியம் காட்டப் போகின்றன. புருவம் வளைய, பூரித்துப் போகப் போகிறாள். முயல்குட்டியின் முதுகைத் தடவுவதைப் போல் துணியைத் தடவிப் பார்த்து, 'எங்கே வாங்கினே பத்மா?' என்று படபடக்கப் போகின்றாள். இமைகள் படபடக்க, பத்மா காத்திருந்தாள். ''வெளியிலேதான் எடுத்துப் பாரேன்'' என்று பத்மா சொன்னவுடன் செத்துப் போன எலியை வால் பிடித்துத் தூக்குவது போல் வெளியில் எடுத்தாள்.

''நல்லா இருக்கா?''

''ப்ச!''

''நல்லா இல்லை?''

''இது என்ன கலர்னு இதைப் போய் எடுத்தியாம்.''

''பிடிக்கலையா?''

''என்ன பண்றது? எடுத்துட்டு வந்துட்டியே!''


பத்மா நகர்ந்து சுவரில் சாய்ந்து கொண்டாள். கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது. கடவுளே இதற்குத்தானா இத்தனை பறந்தேன். குருவி குருவியாகச் சேர்த்துக் கட்டிய கூட்டை உதடு குவித்து ஊதிக் கலைத்து விட்டார்களே என்ற அயற்சி. பத்மா கண்களை மூடிக் கொண்டு இழுத்து மூச்சு விட்டாள். கண்களுக்குள் கலர் கலராய் வளையங்கள் தோன்றி இருளில் மிதப்பது மாதிரித் தெரிந்தது. ஜோடித்து உட்கார வைக்கப்பட்டிருந்த ரமா ஜமுக்காளத்தின் பிசிறுக்குச் சடை பின்னிவிட்டுக் கொண்டிருந்தாள்..பத்மா மெல்ல நெருங்கி அவள் புஜத்தைத் தொட்டாள்.

''உனக்கும் பிடிக்கலையாப்பா?''

அம்மாவின் கையிலிருந்து பார்சலை வாங்கிய ரமாவின் முகம் பிரகாசமாகியது.

''ஹை! எனக்குப் பிடிச்ச கலர் சித்தி. கத்திரிப்பூக் கலர் தாவணி என் பட்டுப் பாவாடைக்கும் மேட்சா இருக்கும்... மெட்ராஸ்ல வாங்கினீங்களா?''

ஆர்வத்துடன் ரமாவின் குரல் ஒலித்ததும் பத்மாவின் கண்களுக்குள் விரிந்த வண்ண வளையங்கள் கரையத் தொடங்கின...



பொன்னியின் செல்வன்



அத்தியாயம் 90

பொன்மழை பொழிந்தது!

வந்தியத்தேவன் ஆனைமலைக் காட்டுக்குத் தான் சென்று வந்த வரலாற்றைக் கூறி முடித்ததும், குந்தவை அவனைப் பார்த்து, "ஐயா! நீங்கள் கூறிய வரலாறு மிக அதிசயமாயிருக்கின்றது. உண்மை நிகழ்ச்சிகள்தானா என்று சந்தேகமும் சில சமயம் எனக்கு ஏற்பட்டது. கதை புனைந்து கூறுவதில் தாங்கள் கெட்டிக்காரர் என்பதை அறிவேன். அதிலும் தாங்கள் அடிக்கடி பேச்சை நிறுத்தி மேலும் கீழும் பார்த்து விழித்து விட்டுப் பேச்சைத் தொடங்கிய போது என்னுடைய சந்தேகம் மேலும் அதிகமாயிற்று!" என்றாள்.

வந்தியத் தேவன் மற்றும் ஒரு முறை மேலும் கீழும் பார்த்து விட்டுக் குந்தவையை நோக்கினான்.

"தேவி! புனைகதை சொல்லுவதற்கு வேறு இடங்கள் இருக்கின்றன. என்னுடைய அந்தச் சாமர்த்தியத்தைத் தங்களிடம் இது வரையில் நான் காட்டியதில்லை. இடையிடையே என் பேச்சுத் தடைப்பட்டதற்கு வேறொரு காரணம் உண்டு!" என்றான்.

"அதுவும் பெரிய இரகசியமா? பெண்களிடம் சொல்லக் கூடாததா?" என்று கேட்டாள் குந்தவைப் பிராட்டி.

"வேறு யாரிடமும் சொல்லக் கூடாத இரகசியந்தான். ஆனால் தாங்கள் அநுமதி கொடுத்தால் அதையும் சொல்லுகிறேன்!" என்றான் வந்தியத்தேவன்.

"உண்மையைச் சொல்லுவதற்கு எப்போதும் என்னுடைய அநுமதி உண்டு!" என்றாள் குந்தவை.

"அப்படியானால் சொல்லி விடுகிறேன். பிறகு என்னைக் கோபித்துக் கொள்வதில் பயனில்லை. நான் தங்களிடம் பேசிக் கொண்டிருக்கும்போது சில சமயம் தற்செயலாகத் தங்கள் விழிகளில் என் பார்வை பதிந்து விடுகிறது. தேவியின் கரிய கண்களில் என்ன அரிய மாயம் இருக்கிறதோ, தெரியவில்லை. அது என்னை அப்படித் திகைத்து நிற்கும்படி செய்து விடுகிறது. மறுபடியும் சமாளித்துக் கொண்டு பேச்சைத் தொடங்குகிறேன்!" என்றான்.

குந்தவையின் இதழ்கள் விரிந்தன; கன்னங்கள் குழிந்தன; கண்கள் சிரித்தன.

"ஐயா! என்னுடைய கண்களில் அரிய மாயம் ஒன்றுமில்லை; கரிய மாயமும் இல்லை. சில காலமாக மையிட்டுக் கொள்வதையும் விட்டுவிட்டேன். என்னுடைய கண்களில் தாங்கள் தங்களுடைய உருவத்

அமரர் கல்கி

தைத்தான் பார்த்திருப்பீர்கள். அது தான் தங்களைத் திகைப்படையச் செய்திருக்கும்!" என்றாள்.

"தேவி! என்னுடைய உருவத்தை நான் கண்ணாடிகளில் பார்த்திருக்கிறேன். தெளிந்த நீரில் பிரதிபலிக்கப் பார்த்திருக்கிறேன். அப்போதெல்லாம் நான் எந்த விதத் திகைப்பும் அடைந்ததில்லை!" என்றான் வல்லவரையன்.

"என் கண்களைக் கண்ணாடிக்கும் தண்ணீருக்கும் ஒப்பிடுகிறீர்களா? கண்ணாடி மங்கி விடும்; தண்ணீர் கலங்கி விடும்!" என்றாள் இளவரசி.

"கண்ணாடி மங்கினால் துடைத்துச் சுத்தம் செய்வேன். தண்ணீர் கலங்காமல் பார்த்துக் கொள்வேன். தங்கள் கண்களின் இமைகள் மூடித் திரையிட்டு என் உருவத்தை மறைப்பதை நான் தடுத்து நிறுத்த முடியாதல்லவா?" என்றான் வந்தியத் தேவன்.

"கண்ணாடிக்கு எதிரில் நின்றால்தான் உருவம் பிரதிபலிக்கும். தண்ணீர் கலங்காமல் தெளிந்திருந்தால்தான் உருவம் தெரியும். ஆனால் என் கண்கள் திறந்திருந்தாலும் கண்ணிமைகள் மூடியிருந்தாலும் தாங்கள் என் முன் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தங்கள் உருவம் எப்போதும் என் கண்களில் பொலிகிறது. இந்த அதிசயத்தின் காரணம் என்னவென்று தங்களால் சொல்ல முடியுமா?" என்று குந்தவை கேட்டாள்.

வந்தியத்தேவனின் மெய்சிலிர்த்தது. தழுதழுத்த குரலில், "தெரியவில்லையே, தேவி!" என்றான்.

"தெரியாவிட்டால் நான் சொல்லுகிறேன். தங்களிடத்திலேதான் அப்படி ஏதோ ஒரு மாய மந்திர சக்தி இருக்கிறது. சோழ குலத்தைப் பழி வாங்க வந்த வயிர நெஞ்சம் கொண்ட நந்தினியின் உள்ளமும் தங்களைக் கண்டு சஞ்சலம் அடைந்து விட்டதல்லவா?"

"சற்று முன் தாங்கள் அமுதினுமினிய வார்த்தை கூறி என்னைப் பரவசப்படுத்தினீர்கள். அதே மூச்சில், அந்தக் கொடிய விஷ நாகத்தின் பெயரை ஏன் சொல்லுகிறீர்கள்?"

"நந்தினியை உள்ளத்தில் நஞ்சுடைய பாம்பு என்று நான் வெறுத்த காலம் உண்டு. இப்போது அவளை நினைக்கும் போது எனக்கு அவள் பேரில் இரக்கந்தான் உண்டாகிறது....."

"நந்தினியிடம் தாங்கள் இரக்கங்கொள்வது சோழ குலத்தை நாசமாக்க வரும் ஆலகால விஷத்திடம் இரக்கங்கொள்வதாகும்."

"ஐயா! சோழ வம்சத்தாருக்குக் குல தெய்வமாகி விட்ட மந்தாகினி தேவியின் மகள் அவள்! என் அருமைச் சகோதரன் அருள்மொழியைப் பல முறை காப்பாற்றிய தேவியின் மகள் அவள்! என் தந்தையைச் சதிகாரனுடைய வேலுக்கு இரையாகாமல் காப்பாற்றித் தன்னுடைய உயிரைப் பலி கொடுத்த மாதரசியின் மகள் நந்தினி!....."

"ஆனால் அந்தச் சதிகாரனுடைய வேலை எறியத் தூண்டியவள் அவள்! ஆதித்த கரிகாலருக்கு யமனாக வந்தவள் அவள்! வீராதி வீரராகிய பெரிய பழுவேட்டரையரின் மதியை மயக்கிப் பொம்மைபோல் ஆட்டி வைத்தவள்....."

"பெரிய பழுவேட்டரையரின் மதியை மட்டுந்தானா மயக்கினாள்? பார்த்திபேந்திர பல்லவன், கந்தமாறன் முதலியவர்களையும் தன் கைக்கருவி ஆக்கிக் கொண்டாள்! இவையெல்லாம் தெரிந்திருந்தும் அவளை என்னால் வெறுக்க முடியவில்லை. வீர பாண்டியனுடைய மரணத்துக்குப் பழி வாங்கவே இவ்வளவும் செய்தாள்! எடுத்த காரியத்தை நிறைவேற்றுவதில் வெற்றி அடைந்தாள்! வீர மறக் குலத்துப் பெண்! அவள் இப்படியெல்லாம் பயங்கரமான செயல்களில் இறங்குவதற்கு நானும் காரணமாயிருந்தேன் என்பதை நினைத்தால் வருத்தமாயிருக்கிறது. அவளுடைய குழந்தைப் பிராயத்தில் பழையாறையிலிருந்து விரட்டியடித்தோம்....."

"நல்ல காரியமே செய்தீர்கள், தேவி! தங்களுடைய நெஞ்சிரக்கத்தின் மிகுதியால் அவள் சோழ குலப் பகைவனுடைய மகள் என்பதை மறந்துவிட வேண்டாம். வீர பாண்டியனுடைய மகள் சோழர் வீட்டில் வளர்ந்து அதனால் விளைந்த அனர்த்தம் போதாதா? வீர பாண்டியனுடைய மகளும் இங்கே வளர்ந்து ஆதித்த கரிகாலரைத் திருமணம் புரிந்து கொள்ள நேர்ந்திருந்தால்...."

"மிக்க நன்மையாக முடிந்திருக்கும். இந்த இரண்டு பெருங் குலங்களின் பகைமை தீர்ந்து இரு குலமும் ஒரு குலமாகியிருக்கும். ஆனால் அந்தச் செய்தி உண்மையாயிருக்குமா?"

"எதைக் கேட்கிறீர்கள், தேவி!"

"நந்தினி வீர பாண்டியனின் மகள் என்பது உண்மையாயிருக்குமா?"

"நந்தினி அவ்வாறு ஆதித்த கரிகாலரிடம் கூறியதை என் காதினால் நானே கேட்டேன். பெரிய பழுவேட்டரையரும் கேட்டார். அதுதான் பெரிய பழுவேட்டரையரின் மனத்தை அடியோடு மாற்றி அவரை ரௌத்ராகாரம் கொள்ளச் செய்தது. அந்தக் கொடிய வார்த்தைதான் இளவரசர் ஆதித்த கரிகாலரின் உயிருக்கும் யமனாக முடிந்தது!"

"சிறிது யோசியுங்கள்! கரிகாலன் மீது

பழி முடிப்பதற்காகவே அவள் அவ்விதம் சொல்லியிருக்கலாம் அல்லவா? வீர பாண்டியனைக் கரிகாலன் கோபத்திலிருந்து காப்பாற்ற விரும்பியபோது அவனே வேறு விதமாகக் கூறியிருக்கிறாள். பெற்ற தகப்பனைக் குறித்துக் 'காதலன்' என்று எந்தப் பெண்ணாவது தன் வாயினால் சொல்லியிருப்பாளா?''

''தேவி! கரிகாலர் அப்போது 'வெறி கொண்டவராயிருந்தார். அவள் என்ன சொன்னாளோ, இவர் என்ன வென்று பொருள் செய்து கொண்டாரோ, யாருக்குத் தெரியும்? கரிகாலர் சொல்லியதுதானே? அவரே பின்னால் நந்தினி 'என் தகப்பன் வீர பாண்டியன்' என்று சொன்னபோது நம்பிவிட்டாரே? மேலும் வீர பாண்டியன் இறந்த பிறகே அவளுக்கு இது தெரிந்திருக்கலாம். தன் பிறப்பைக் குறித்த உண்மையை அறிவதற்காக நந்தினி என்னென்ன பிரயத்தனங்கள் செய்தாள் என்பது தங்களுக்குத் தெரியுமே? நள்ளிரவில் அவளுடைய அன்னையின் ஆவியைப் போல் நடித்துச் சுந்தர சோழரைப் பைத்தியம் பிடிக்க அடிக்கவில்லையா? அதைத் தங்கள் தோழி பார்த்து மூர்ச்சையடைந்து விழவில்லையா ....?''

''பாதாளச் சிறையில் மூன்று வருஷமாக அடைபட்டிருந்து தங்களுடன் விடுதலை அடைந்த பைத்தியக்காரனை ஆழ்வார்க்கடியான் பயமுறுத்திக் கேட்ட போது அவன் சொன்னதும் தங்களுக்குத் தெரிந்திருக்கும்.....''

''தெரியாமலென்ன? நந்தினிக்கும் அவள் சகோதரனுக்கும் தானே தகப்பன் என்று அவன் கூறினான்....''

''அதுவே உண்மையாகவும் இருக்கலாம் அல்லவா?''

''அப்படியானால், சில சமயம் பொய்யும் மிக்க வலிமையுடையதாகிறது. அரண்மனைக் குள்ளேயே வளர்ந்து சண்டையென்றால் பயந்து கொண்டிருந்த பழைய மதுராந்தகத் தேவர் தாம் வீர பாண்டியனுடைய மகன் என்று அறிந்ததும் எத்தகைய வீர புருஷர் ஆகிவிட்டார் என்பதைத் தாங்கள் பார்த்திருந்தால் பிரமித்துப் போயிருப்பீர்கள். ஒரு முறை சின்னப் பழுவேட்டரையர் தமது வயிரக் கரத்தால் என் தோளைப் பற்றினார். அதை நினைத்தால் இன்னமும் அவர் பிடித்த இடத்தில் எனக்கு வலியுண்டாகிறது. அத்தகைய மகா வீரருடன் நாமெல்லாரும் 'கோழை' என்று எண்ணிய மதுராந்தகன் சரி சமமாக வாட்போர் இட்ட காட்சியை என்றும் நான் மறக்க முடியாது.''

''அதைக் குறித்தே நானும் தங்கள் வார்த்தையில் சந்தேகம் உண்டாகிறது என்று சொன்னேன்.''

''நம்புவதற்கு அரிதான சம்பவந்தான். நந்தினியின் மூடு பல்லக்கில் பிரயாணம் செய்து கொண்டிருந்தவனும், பழுவேட்டரையர்களின் பெயரைச் சொன்னாலே நடு நடுங்கியவனுமான நாம் அறிந்த மதுராந்தகன் சின்னப் பழுவேட்டரையருடன் வாட்போர் செய்யத் துணிவான் என்று யார் நம்ப முடியும்? ஆயினும் அது உண்மையில் நடந்தது என்பதை ஆழ்வார்க்கடியான் திரும்பி வந்து தங்களுக்குக் கூறுவான்.''

''ஐயா! தாங்கள் நந்தினி தேவியைப் பார்க்க முடியவில்லையா?''

''அந்தப் பெண் உருக்கொண்ட ராட்சஸியை நான் ஏன் பார்க்க வேண்டும்?''

''நந்தினியைப் பற்றி இனி அவ்விதம் சொல்ல வேண்டாம். என்றைக்காவது ஒரு நாள் நானே அவளைச் சந்திப்பேன். உண்மையில் அவளுடைய தந்தை யார் என்னும் இரகசியத்தை அறிவேன். ஆனால் ஒன்று தெரிந்து கொள்ளுங்கள். நந்தினியைப் பற்றி என்னிடம் எதுவும் தவறாகக் கூற வேண்டாம். அவளுடைய தகப்பனார் யாராயிருந்தாலும், அவளுடைய அன்னை யார் என்பதில் சந்தேகமில்லையல்லவா? அவளிடம் நான் அன்பு கொள்வதற்கு அது ஒன்றே போதும். அதற்கு மேலே இன்னொரு முக்கிய காரணமும் இருக்கிறது......''

''அது என்ன காரணம்?''

''நந்தினி தங்களிடம் பிரியம் கொண்டிருந்தாள். அவளுடைய முத்திரை மோதிரத்தைத் தங்களிடம் கொடுத்தாள். தஞ்சைக் கோட்டையிலிருந்து தப்பிச் செல்வதற்கு உதவி செய்தாள். கொள்ளிடக் கரைக் காட்டில் ரவிதாஸன் கூட்டத்தாரிடம் தாங்கள் சிக்கிக் கொண்டிருந்த போது மறுபடியும் தங்கள் உயிரைக் காப்பாற்றினாள்..''

''கடைசியாக, ஆதித்த கரிகாலரைக் கொன்ற பயங்கரமான பழியை என் பேரில் சுமத்தினாள். அதற்காகவே அத்தனை சூழ்ச்சிகளும் செய்தாள்!''

''ஏன் அப்படிச் செய்தாள் என்று தங்களுக்குத் தெரியவில்லையா?''

''பாம்பு ஏன் கடிக்கிறது என்பதற்குக் காரணம் சொல்ல வேண்டுமா? சிறுத்தை ஏன் பாய்கிறது என்பதற்குக் காரணம் கூற வேண்டுமா?''

''நந்தினி பிறக்கும் போதே பாம்பாகவோ, சிறுத்தையாகவோ பிறக்கவில்லை. நாங்கள் தான் அவளை அப்படிச் செய்து விட்டோம். சந்தர்ப்பங்கள் அவ்விதம் சதி செய்து விட்டன. தாங்களும் அதற்குக் காரணமாயிருந்தீர்கள்.''

''ஐயையோ! என் பேரில் ஏன் வீண் பழி? நான் அவளுக்கு அப்படி என்ன தீங்கு செய்தேன்?''



''தாங்கள் அவளுக்கு ஒரு தீங்கும் செய்ய வில்லை; அவள்தான் தங்களிடம் அன்பு கொண்டிருந்தாள்.''

''தெய்வமே!.....''

''புருஷர்கள் சில காரியங்களில் கண்ணிருந்தும் குருடர்களாயிருப்பார்கள் போலிருக்கிறது. ஐயா! இதைக் கேளுங்கள்! நந்தினியின் உள்ளம் தங்களுக்குத் தெரியவில்லை; நான் நன்றாகத் தெரிந்து கொண்டேன். அந்தத் துர்ப்பாக்கியசாலி உண்மையில் வீர பாண்டியனிடம் அன்பு கொண்டிருக்கவில்லை; பெரிய பழுவேட்டரையரிடம் அன்பு கொண்டிருக்கவில்லை; ஆதித்த கரிகாலனிடம் அவளுக்கு உண்மையான நேசம் கிடையாது. அவர்களிடம் அன்பு கொண்டதாக நடித்ததெல்லாம் அவள் அரசு பீடத்தில் அமர்வதற்காகத்தான்!''

''இதை நானும் அறிவேன், தேவி! அவளுடைய கிராதக நெஞ்சில் அன்புக்குச் சிறிதும் இடமே இல்லை!''

''அது தவறு; தங்களைக் கண்ட போது தான் அவள் உள்ளத்தில் உண்மையான அன்பு உதயமாயிற்று. தங்கள் அபிமானத்தைக் கவர்வதற்காக அவள் எதுவும் செய்யச் சித்தமாயிருந்தாள்....''

''என்பேரில் இளவரசரைக் கொன்ற பழியைச் சுமத்தவும் சித்தமாயிருந்தாள்.''

''அது எதற்காக? தங்களை என்றென்றைக்கும் சோழ குலத்தாருடன் நட்பும் உறவும் கொள்ளாமலிருக்கச் செய்வதற்குத்தான்...''

''அதற்காக என்னைத் தஞ்சாவூர் இராஜ வீதிகளின் நாற்சந்தியில் கழுவில் ஏற்றச் செய்வதற்கு ஏற்பாடு செய்து விட்டாள். அதை விட அவளுடைய கையில் பிடித்திருந்த கத்தியினாலேயே என்னைக் கொன்றிருக்கலாமே?''

''தங்களைக் கொல்ல எண்ணியிருந்தால் அவ்விதம் செய்திருக்கலாம். அல்லது ரவிதாஸன் கூட்டத்தைக் கொண்டு தங்களைக் கொல்லச் செய்திருக்கலாம். பெரிய பழுவேட்டரையர் குற்றத்தைத் தன் பேரில் போட்டுக் கொண்டிராவிட்டால், பொன்னியின் செல்வர் குறுக்கிட்டிராவிட்டால், தங்களை உண்மையிலேயே கழுவில் ஏற்றக் கட்டளை பிறப்பித்திருந்தால், ரவிதாஸன் கூட்டத்தார் வந்து தங்களை விடுவித்துக் கொண்டு போயிருப்பார்கள். தாங்களும் ஒருவேளை இன்று ஆனைமலையின் மேல் சேர்ந்திருக்கும் கூட்டத்துடன் கலந்து கொண்டிருந்தாலும் இருப்பீர்கள்.''

''அத்தகைய விபத்து நேராமல் கடவுள் தான் என்னைக் காப்பாற்றினார்.''



"சோழ நாட்டையும் காப்பாற்றினார். தங்களைப் போன்ற ஒரு வீரரின் சேவை சோழ சாம்ராஜ்யத்துக்கு நஷ்டமாகாமல் காப்பாற்றினார்......"

"தேவி! சோழ சாம்ராஜ்யம் மகத்தானது. ஐந்நூறு லட்சம் வீரர்களின் வாள்களும் வேல்களும் இந்த ராஜ்யத்தைக் கண் போலக் காத்து நிற்கின்றன. நான் ஒருவன் இதன் உதவிக்கு அவ்வளவு அவசியமாயிருக்க முடியாது...."

"சோழ நாட்டை நாலாபுறமும் புதிய அபாயங்கள் சூழ்ந்து கொண்டிருப்பதாகத் தாங்களே சொன்னீர்கள்."

"அது உண்மைதான், தேவி! ரவிதாஸனுடைய சூழ்ச்சித் திறன் அதிசயமானது. பாண்டிய நாட்டுச் சிங்காதனத்துக்கு உரிமையாளர் இரண்டு பேரை உண்டாக்கி விட்டான். முன்னே ஒரு சிறு குழந்தைக்குக் கொள்ளிடக் கரைக் காட்டில் பாண்டிய மன்னன் என்று பட்டம் சூட்டினான். அந்தப் பராங்குசன் நெடுஞ்செழியனுடன் இப்போது அமரபுஜங்கன் நெடுஞ்செழியன் ஒருவனும் சேர்ந்து விட்டான்...."

"அது யார் அமரபுஜங்கன் நெடுஞ்செழியன்?"

"நம் பழைய மதுராந்தகரின் பெயர் இப்போது அதுதான். பாண்டிய அரசுக்கு உரிமை கொண்டாடுவோன், 'மதுராந்தகன்' என்ற பெயருடன் இருக்க முடியாதல்லவா? சின்னப் பழுவேட்டரையர் அருவிப் பள்ளத்தில் விழுந்ததும், மலை உச்சியில் பாண்டியன் அமரபுஜங்கன் நெடுஞ்செழியன் வாழ்க!' என்று எழுந்த கோஷம் அந்தப் பெரிய அருவி விழும் சத்தத்தையும் அடக்கிக் கொண்டு எழுந்தது."

"இம்மாதிரி இரண்டு உரிமையாளரை ஏற்படுத்தி வைப்பதில் ரவிதாஸனின் கூட்டத்தாருக்கு என்ன லாபம்?"

"ஒருவனுக்கு ஏதாவது நேர்ந்தால் இன்னொருவன் கையில் இருக்கட்டும் என்றுதான். ஒருவனைக் கொண்டு இலங்கை அரசன் மகிந்தன் உதவியைப் பெறவும், இன்னொருவனைக் கொண்டு சேர மன்னனின் கூட்டுறவைப் பெறவும் அக்கூட்டத்தார் முயற்சி செய்வார்கள்...."

"ஐயா! என் சகோதரனும் தாங்களும் சேர்ந்து சதி செய்து உத்தமச் சோழரின் தலையில் மணி மகுடத்தைச் சூட்டினீர்கள். உத்தமச் சோழருக்கு நீங்கள் பெரிய நன்மை செய்து விட்டதாக நான் கருதவில்லை. தற்சமயம் சோழ சாம்ராஜ்யத்தின் பாரத்தை வகிப்பது அவ்வளவு எளிய காரியமாகத் தோன்றவில்லை......"

"சோழ சாம்ராஜ்ய பாரத்தை வகிப்பது தற்சமயம் மிகப் பிரயாசையான காரியந்தான். ஆனால் அதை உத்தமச் சோழரா தாங்கப் போகிறார்? அவர் தமது அன்னைக்கு உதவியாக ஆலயத்திருப்பணியில் ஈடுபட்டுக் காலங் கழிக்கப் போகிறார். சோழ சாம்ராஜ்யத்தைத் தாங்கப் போகிறவரும் பாதுகாக்கப் போகிறவரும் தங்கள்

தம்பி அருள்மொழித் தேவர்தான்!''

''அது உண்மையே. அருள்மொழிக்கு அதற்கு ஆற்றலும் உண்டு. ஆனாலும் அவன் பிராயத்தில் சிறியவன்; அநுபவம் இல்லாதவன். சோழ சாம்ராஜ்யத்தைத் தாங்கி வந்த இரு பெரும் வயிரத் தூண்கள் — பழுவூர் அரசர்கள் — போய் விட்டார்கள். பெரியவர் நம்மை விட்டே சென்று விட்டார்! தாங்கள் சொல்வதைப் பார்த்தால், சின்னப் பழுவேட்டரையர் பிழைத்து வருவதும் துர்லபம் என்று தோன்றுகிறது....''

''அவர் பிழைத்து வந்தாலும் இராஜ்யத்துக்குப் பயன்பட மாட்டார். தமது மகளையும் மருமகனையும் நினைத்து நொந்து கொண்டிருப்பார்......''

''சம்புவரையரும் அதே நிலைமையை அடைந்து விட்டார். சில தினங்களில் அவருடைய உள்ளமும் உடலும் சோர்ந்து பலவீனமடைந்து விட்டன. மலையமான் முன்னமே முதுகிழவர். தமது பேரர்களில் ஒருவன் இறந்து இன்னொருவனுக்குப் பட்டமில்லை என்று ஆனதும் அவரும் அடியோடு தளர்ந்து போனார். கொடும்பாளூர்ப் பெரிய வேளாரின் மனம் ஒரு நிலையில் இல்லை. அருள்மொழி முடி சூட்டிக் கொள்ளப் போவதாகச் சொல்லிக் கொண்டிருந்து கடைசி நிமிஷத்தில் தம்மை ஏமாற்றி விட்டதை அவரால் மன்னிக்க முடியவில்லை. வானதியை அருள்மொழி மணந்ததில் கூட அவருக்குத் திருப்தி ஏற்படவில்லை. இனிமேல் இராஜ்ய விவகாரங்களில் தாம் தலையிடுவதில்லையென்றும் கொடும்பாளூரில் ஆலயத்திருப்பணி செய்யப் போவதாகவும் கூறிவிட்டுப் போய் விட்டார். கடம்பூர் மாளிகையில் நடந்த சதிக் கூட்டத்தில் கலந்து கொண்ட மற்றச் சிற்றரசர்கள் அனைவரும் அவர்கள் ஒன்று நினைக்கக் காரியம் வேறாக முடிந்தது பற்றி வெட்கி மனங் குன்றிப் போனார்கள். ஐயா! அருள்மொழிக்கு உதவி செய்யத் துணைவர்கள் வேண்டும். வாள் வலி — தோள் வலியுடன் அறிவுத் திறமையும் வாய்ந்த உற்ற நண்பர்கள் அவனுக்கு வேண்டும்.....''

''நல்ல வேளையாகப் பல்லவப் பார்த்திபேந்திரர் இருக்கிறார்!'' என்று சொன்னான் வந்தியத்தேவன்.

''அவருடைய துணை வலியும் அருள்மொழிக்குக் கிடைக்கும் என்று சொல்வதற்கில்லை. அவரை ஊரை விட்டு அனுப்பி விட்டு உத்தமச் சோழருக்கு முடிசூட்டியதில் அவருக்குக் கோபம். அதைக் காட்டிலும், அருள்மொழி தன் அந்தரங்கத் தோழராகத் தங்களைப் பாவிப்பது அவருக்குப் பிடிக்கவில்லை.....''

''அவருடைய கோபத்துக்கு நியாயம் இருக்கிறது. சோழ குலத்துக்கு அவர் எவ்வளவோ தொண்டு செய்திருக்கிறார். நானோ புதிதாக வந்தவன். அவரிடம் நான் வேணுமானால் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.''

குந்தவை சிறிது யோசித்து விட்டு, ''அது எரிகிற தீயில் எண்ணெய் விட்டது போலாகும்'' என்று கூறினாள்.

''பார்த்திபேந்திரர் மகா வீரர். அவரைச் சமாதானப்படுத்துவதற்கு வேறு வழி இல்லையா?'' என்றான் வந்தியத்தேவன்.

''அவரே அந்த வழியைக் குறிப்பிட்டார். என் தந்தையிடமும் தமது விருப்பத்தைத் தெரிவித்தார்.....''

''பார்த்திபேந்திர பல்லவருடைய விருப்பத்தை நிறைவேற்றச் சக்கரவர்த்தி மறுத்திருக்க மாட்டார்.....''

''ஆனால் அது சக்கரவர்த்தியைப் பொறுத்ததல்ல. அவருடைய மகளைப் பொறுத்தது. அவருடைய மகள் அதை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டாள்! ஆம், ஐயா! சிவாலயத்துக்கு மலர் எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தவர் திடீரென்று சிங்காதனம் ஏறி மணி மகுடம் சூடிக் கொண்டதைப் பார்த்துப் பல்லவகுலத் தோன்றலுக்குப் பொறுக்கவில்லை. கடலில் படகு விட்டுக் கொண்டிருந்தவன் சிங்காதனம் ஏறியதும் அவருக்குச் சகிக்கவில்லை. பழைய பல்லவ நாட்டுக்குத் தன்னைச் சுதந்திர மன்னனாக்கிச் சிலாசாஸனம் எழுதும் உரிமை அளிக்க வேண்டும் என்று கேட்டார்.....''

''ஆகா! அது எப்படிக் கொடுக்க முடியும்? சோழ ராஜ்யத்தைச் சின்னா பின்னப்படுத்துவ்தாகுமல்லவா?''

''அந்த உரிமை கொடுக்க என் தந்தை சம்மதித்து விட்டார். அத்துடன் பல்லவ குமாரர் நிற்கவில்லை. முன்னொரு சமயம் பல்லவ அரச குமாரி சோழ குமாரன் ஒருவனை மணந்து கொண்டாளாம். அதற்கு ஈடாகச் சுந்தர சோழரின் குமாரியைத் தமக்குத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்று கோரினார்!''

இதைக் கேட்டதும் வந்தியத்தேவனின் முகம் மிக்க மன வேதனையைக் காட்டியது. அதை மறைத்துக் கொள்வதற்காக அவன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான்.

குந்தவையின் முகம் புன்சிரிப்பால் மலர்ந்தது. வேண்டுமென்றே அவன் மேலே

ஒன்றும் சொல்லாமலிருந்தாள்.

சற்றுப் பொறுத்து வந்தியத்தேவன் "அதற்குச் சக்கரவர்த்தி என்ன விடை கூறினார்?" என்றான்.

"அதற்குச் சக்கரவர்த்தி எப்படிப் பதில் கூற முடியும்? அது அவர் மகள் விருப்பத்தைப் பொறுத்ததல்லவா? சக்கரவர்த்தி தம் மகளைக் கேட்டார்....."

"சக்கரவர்த்தித் திருமகள் அதற்கு என்ன பதில் கூறினார்?"

"பார்த்திபேந்திரனைக் கைப்பிடிக்கச் சம்மதமில்லை என்று சொல்லி விட்டார்!"

"ஏன்? ஏன்?" என்று வந்தியத் தேவன் கேட்ட குரலில் அடங்காத ஆர்வம் ததும்பியது.

"சக்கரவர்த்தித் திருமகள் காரணம் எதற்காகச் சொல்ல வேணும்? இருந்தாலும், ஒரு காரணம் கூறினாள். தெய்வப் பொன்னி நதி பாயும் புனல் நாட்டை விட்டு, வெளி நாட்டுக்குப் போக விருப்பமில்லை என்று கூறினாள்."

"அது ஒன்றுதானா காரணம்?"

"வேறு காரணமும் இருக்கலாம். அதில் சிரத்தை உள்ளவர்களுக்கு அல்லவா சொல்ல வேணும்? ஏனோ தானோ என்று கேட்பவர்களிடம் எதற்காகச் சொல்ல வேண்டும்?" என்றாள் குந்தவை.

"தேவி! அளவில்லாத சிரத்தையுடனும் ஆர்வத்துடனும் கேட்கிறேன்."

"அவ்வளவு சிரத்தையும் ஆர்வமும் உள்ளவர்கள் தாங்களாகவே அதைத் தெரிந்து கொள்வார்கள். அவர்களுக்குச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை."

குந்தவையின் முகத்தை அப்போதுதான் முதன் முதலில் பார்ப்பவன் போல் வந்தியத்தேவன் பார்த்தான்.

மின்னலை மின்னல் தாக்கியது. அலையோடு அலை மோதியது. சொர்க்கம் பூமிக்கு வந்தது. மண்ணுலகம் விண்ணுலகம் ஆயிற்று.

விழிக்கோணத்தில் விஷமப் புன்சிரிப்புடன் குந்தவை "ஒரு பெண்ணின் மனத்தில் உள்ளதை அறிய முடியாமல் அவள் வாயினால் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கும் ஆண் மகனைப் பற்றி என்னவென்று நினைப்பது? சோழ சாம்ராஜ்யத்தின் பகைவர்களுடைய தந்திரச் சூழ்ச்சிகளையெல்லாம் அவர் அறிந்து கொள்ள முடியும் என்று எவ்விதம் எதிர்பார்ப்பது?" என்றாள்.

வந்தியத்தேவன் சற்று நேரம் மேலும் கீழும் பார்த்து விட்டு, "தேவி! பழம் பெரும் பல்லவ குலத்தில் வந்த பார்த்திபேந்திரன் கோரிய அதே கோரிக்கையைத் தங்குவதற்கு ஒரு குடிசை நிழலும் இல்லாத அநாதை வாலிபன் ஒருவன் வெளியிட்டால், அதைப் பற்றிச் சக்கரவர்த்தி என்ன நினைப்பார்?" என்றான்.

"அவர் என்ன நினைத்தாலும், தம் மகளுடைய விருப்பம் என்னவென்று கேட்பார்; அதன்படியே பதில் சொல்லுவார்."

"தேவி! சக்கரவர்த்தியின் திருக்குமாரி என்ன பதில் வொல்லுவாள்?"

"இப்படிச் சுற்றி வளைத்துக் கேட்டுக் கஷ்டப் படுவானேன்? சக்கரவர்த்தியிடம் நேரில் கேட்டுப் பார்த்து விடலாமே? பதில் உடனே தெரிந்து விடுகிறது!" என்றாள் குந்தவை.

"அது எப்படிக் கேட்க முடியும்? ஈழம் முதல் வேங்கி வரையில் ஒரு குடை நிழலில் ஆளும் மன்னர் மன்னரின் திருமகளைத் தனக்கு மணம் செய்து கொடுக்கும்படி ஊரும் பேருமில்லாத வாலிபன் — உற்றார் உறவினர் அற்ற அநாதைச் சிறுவன் — எப்படித்துணிந்துகேட்கமுடியும்?" என்றான் வல்லவரையன்.

"வாணர் குலத்தில் பிறந்த வீரருக்கு இவ்வளவு தன்னடக்கம் எங்கிருந்து வந்தது? முதன் முதலில் தாங்கள் என்னைப் பார்த்த போது தங்கள் குலப் பெருமை பற்றிக் கூறியதை நான் மறந்து விடவில்லை. சேர சோழ பாண்டியர்களின் அரண்மனைகளில் ஆண் குழந்தைகள் பிறந்தால், அக் குழந்தையின் மார்பு அகலமாயிருந்தால், மாவலிவாணனின் பெயர்கள் எல்லாவற்றையும் அந்தக் குழந்தையின் மார்பில் எழுதலாம் என்று அரசிமார்கள் களிப்படைவார்கள் என்றீர்கள். வாணர் குல மன்னரின் அரண்மனை வாசலில் மூவேந்தர்களும் காத்திருப்பார்கள் என்றும், புலவர்கள் அம் மன்னரிடம் பெற்றுப் போகும் பரிசுகளைப் பார்த்து, 'இது என் குதிரை! இது என் யானை, இது என் கிரீடம், இது என் குடை!' என்று அவர்கள் பேசிக் கொள்வார்கள் என்றும் சொன்னீர்கள். அவ்வாறு பெருமையடித்துக் கொண்டவர் இவ்வளவு அடக்கம் கொண்டவரானது ஏன்?"

"தங்கள் தம்பியின் சிநேகந்தான் அதற்குக் காரணம். பழைய குலப் பெருமையைக் கூறிச் சிறப்படையப் பார்ப்பதை அருள்மொழிவர்மர் வெறுக்கிறார். சூரிய குலத்தில் தோன்றியவர்கள் என்றும், கரிகால வளவன் வம்சத்தினர் என்றும், விஜயாலயச் சோழரின் பேரரின் பேரர் என்றும் பெருமையடித்துக் கொள்வதை நினைத்து அவர் சிரிக்கிறார். ஒரு நாள் அவர் என்னிடம் என்ன சொன்னார் தெரியுமா? 'என் குலத்து முன்னோர்கள் இது வரையில் செப்புப் பட்டய

ரோஜா நிறத்தில் செய்தித்தாள்!

○○ எகனாமிக் டைம்ஸ் நாளிதழ் திடீரென ரோஜா நிறத் தாளில் அச்சிடப்படுகிறது! காரணம்? ''ரிலையன்ஸ் குரூப் அம்பானியின் 'பிஸினஸ் அண்டு ஃபைனான்ஷியல் அப்சர்வர்' என்ற பொருளாதார தினத்தாள் இளஞ்சிவப்புத் தாளில் அச்சிடப்படக் கூடும்'' என்று தெரிய வந்ததனால்தான்! ஒருவரையொருவர் முந்த, பத்திரிகைத் துறையில் அப்படியொரு போட்டி!

— ராஜீவி நரசிம்மன்.

மும் சிலாசாஸனமும் எழுதுவிக்கும்போதெல்லாம் சூரிய வம்சத்திலிருந்தும் மனு நீதிச் சோழனிலிருந்தும் சிபிச் சக்கரவர்த்தியிலிருந்தும் தொடங்கி எழுதச் செய்து வந்திருக்கிறார்கள். நான் அரச பீடம் ஏறினால் இந்த வழக்கத்தை மாற்றி விடுவேன். நான் எழுதுவிக்கும் சிலாசாஸனங்களிலும் செப்புப் பட்டயங்களிலும் நான் சாதனை செய்த காரியங்களை மட்டும் பொறிக்கச் செய்வேன். அப்போது அச்சாஸனங்கள் புனைந்துரைகளோ என்ற ஐயத்துக்கு இடந்தராத மெய்க் கீர்த்தியாக விளங்கும்!' என்றார். தேவி! நானும் அவருடைய கருத்தை ஒப்புக் கொண்டேன். பழைய குலப் பெருமை பேசுவதை விட்டு விட உறுதி கொண்டேன். தங்கள் தந்தை யாரிடம் சென்று என் பழைய குலப் பெருமைகளைக் கூறித் தங்கள் கரம் பிடிக்கும் பாக்கியத்தைக் கோர மாட்டேன். அருள்மொழி வர்மரும் நானும் இந்தச் சோழ சாம்ராஜ்யத்தின் மேன்மைக்கு எங்கள் ஆயுளை அர்ப்பணித்திருக்கிறோம். வடக்கே விந்திய பர்வதத்திலும் தெற்கே திரிகோண மலையிலும் மேற்கே லட்சத் தீவிலும் கிழக்கே கடல்களுக்கு அப்பாலுள்ள சாவகத்திலும் கடாரத்திலும் காம்போஜத்திலும் புலிக் கொடியைப் பறக்கச் செய்யத் தீர்மானித்திருக்கிறோம். நாங்கள் மேற்கொண்ட காரியங்களை ஓரளவேனும் சாதித்த பிறகு சுந்தரசோழ சக்கரவர்த்தியிடம் சென்று 'இதோ நான் அணிந்து வந்திருக்கும் வெற்றி மாலைகளைத் தங்கள் திருக்குமாரியின் கழுத்தில் சூட அநுமதி கொடுங்கள்!' என்று விண்ணப்பித்துக் கொள்வேன். இலங்கைக்குச் சென்று மகிந்தனை வென்று பாண்டியன் மகுடத்தையும் இந்திரன் ஹாரத்தையும் கொண்டு வந்து இளவரசியின் முன்னால் வைப்பேன். வைத்து விட்டு, 'தங்கள் திருக் கரத்தைப் பிடிப்பதற்கு நான் தகுதியுள்ளவனானால் அந்த பாக்கியத்தை எனக்கு அளியுங்கள்!' என்று பெருமையோடு கேட்பேன்....''

''ஐயா! தங்கள் தீர்மானத்தை நான் பாராட்டுகிறேன். தங்களுக்கும் பார்த்திபேந்திரர் மனப் போக்குக்கும் உள்ள வேற்றுமையைக் கண்டு வியந்து மகிழ்கிறேன். ஆனால் ஆண் பிள்ளையாகிய தாங்கள்தான் இவ்வாறெல்லாம் செய்யலாம். வெற்றிகளையும் சாதனைகளையும் கொண்டு வந்து சமர்ப்பிக்கலாம். அவற்றைக் குறித்துப் பெருமையடையலாம். பெண்ணாய்ப் பிறந்தவர்களுக்கு இவை ஒன்றும் சாத்தியமில்லை. அவர்களுக்குத் தேவையும் இல்லை. அரச குலத்துப் பெண்களுக்குச் சுயம்வரம் நடத்தும் வழக்கம் நம் தேசத்தில் வெகு காலம் இருந்து வந்தது. இப்போது ஏனோ மறைந்து விட்டது. ஐயா! என் தந்தை எனக்கு ஒரு சுயம்வரம் நடத்தி அதற்கு இந்தப் பரந்த பாரத தேசத்திலுள்ள அத்தனை அரசகுமாரர்களையும் அழைத்திருந்தாரானால், என் கையிலுள்ள மாலையை அவர்கள் யாருடைய கழுத்திலும் போட்டிருக்க மாட்டேன். தஞ்சைக் கோட்டையிலிருந்து தப்பி ஓடி வந்து பழையாறை ஆலய பட்டரின் துணையுடன் ஓடமேறி ஓடையைக் கடந்து அரண்மனைத் தோட்டத்துக்குள் புகுந்து என்னைத் தனிமையில் சந்தித்த அநாதை வாலிபர், அத்தனை அரச குமாரர்களுக்கு மத்தியில் எங்கேயாவது இருக்கிறாரா என்று தேடுவேன். அவருடைய கழுத்திலே தான் என் கையிலுள்ள சுயம்வர மாலையைப் போடுவேன்!''

வந்தியத் தேவனுடைய செவிகளில் ஆயிரம் கிண்கிணிகள் ஒலித்தன. வானத்திலிருந்து பொன் மழை பொழிந்தது. தளிர்களும் மலர்களும் குலுங்கிய மரங்களின் உச்சியில் வர்ணப்பட்டுப் பூச்சிகள் இறகுகளை விரித்து நடனம் புரிந்தன.

இதுவரையில் உட்கார்ந்திருந்த வந்தியத் தேவன் எழுந்து நின்றான்.

''நான் கூறியது தங்களுக்குப் பிடிக்கவில்லையா?'' என்றாள் குந்தவை.

''நன்றாய்க் கேட்டீர்கள். நான் விழித்திருக்கிறேனா, என் காதில் விழுந்ததெல்லாம் உண்மையா, அல்லது கனவு காண்கிறேனா என்று சோதித்தேன். கனவு காணவில்லை, உண்மைதான் என்று தெரிந்து கொண்டேன்! பாற்கடலைக் கடைந்து தேவர்கள் அமுதத்தை அடைந்தார்கள்,

அதை அருந்தி அமரரானார்கள் என்று கேட்டிருக்கிறேன். தாங்கள் இப்போது கூறிய மொழிகள் என்னை அமுத முண்டவனாகச் செய்து விட்டன; எனக்குப் புத்துயிர் அளித்து விட்டன!''

குந்தவை அப்போது ''ஐயா! ஒன்று மாத்திரம் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் போகுமிடங்களில் எத்தனையோ அபாயங்களுக்கு உட்படுவீர்கள். எவ்வளவோ போர்க்களங்களில் போர் செய்வீர்கள். பகைவர்கள் வஞ்சகச் சூழ்ச்சியால் தங்களை மேலுலகம் அனுப்ப முயற்சி செய்வார்கள். அப்படி ஏதாவது தங்கள் உயிருக்கு அபாயம் நேர்ந்து விட்டால், இந்தத் தொல் பெருமை வாய்ந்த சோழ குலத்தில் பிறந்த ஓர் இளவரசி கலியாணம் ஆவதற்கு முன்னாலேயே கைம்பெண் ஆவாள்! இதை மறந்து விடாதீர்கள்!'' என்றாள்.


''தேவி! அப்படி ஒன்றும் நிச்சயமாக நேராது. நான்தான் அமுதமுண்டு அமரனாகி விட்டேனே! எனக்கு இனி மரணம் இல்லை! கன இருள் சூழ்ந்த வனாந்தரங்களில் காற்றும் மழையும் கடுகிப் பெய்து நான் திசை தெரியாமல் தடுமாறும் சமயங்களில், தாங்கள் அக்காட்டு மத்தியில் உள்ள வீட்டில் பலகணிக்கு அருகில் விளக்கேற்றி வைத்துக் கொண்டு எனக்காகக் காத்திருப்பீர்கள். அந்த நினைவு எனக்குத் தைரியமளித்துக் காற்று மழை கனாந்தகாரத்திலிருந்து தப்புவதற்குத் துணை செய்யும். அலை கடலின் நடுவில் மரக் கலத்தில் ஏறி நாளும் வாரமும் மாதமும் கணக்கும் மறந்து திக்குத் தெரியாமல் மதி மயங்கிக் கதி கலங்கி நிற்கும் போது, ஸப்தரிஷி மண்டலத்தின் அடியில் என்றும் நிலைத்து நின்று சுடர் விட்டு வழிகாட்டும் துருவ நட்சத்திரமாகத் தாங்கள் ஒளி வீசுவீர்கள். நான் திசை அறிந்து என் மரக்கலத்தைத் திருப்பிக் கொண்டு வருவேன். கடற்கரை ஓரத்துப் பாறைகளில் மாமலைகள் போன்ற பேரலைகள் தாக்கிக் கடல் கொந்தளித்துக் கொண்டிருக்கும் இரவு நேரங்களில் கலங்கரை விளக்கிலிருந்து வரும் உயிர்காக்கும் ஒளியாகத் தாங்கள் பிரகாசிப்பீர்கள். அந்தப் பிரகாசத்தைக் கொண்டு என் படகு பாறையில் மோதாமல் கரையிலே கொண்டு வந்து சேர்ப்பேன். புல்லும் பூண்டும் முளையாத அகண்டமான பாலைவனப் பிரதேசத்தில் வடவைக் கனல் எனக் கொளுத்தும் வெய்யிலில் அனல் பிழம்பெனச் சுட்டுப் பொசுக்கும் மணலில் நான் தாகத்தினால் நா உலர்ந்து வியர்வைக் கால்கள் வறண்டு தவித்துத் தத்தளிக்கும் நேரங்களில் தென்னை மரங்களும் தேன் கதலிகளும் சூழ்ந்த ஜீவநதி ஊற்றாகத் தாங்கள் எனக்கு உதவுவீர்கள். தேவி! இந்த விரிந்து பரந்த உலகத்தில் நான் எங்கே போனாலும் எத்தனை கஷ்டங்களுக்கு உட்பட்டாலும் ஒருநாள் கட்டாயம் திரும்பி வருவேன். திரும்பி வந்து தங்களைக் கரம் பிடித்து மணந்து கொள்வேன். இந்த என் மனோரதம் நிறைவேறும் வரையில் என்னை யமன் நெருங்க மாட்டான். அமுதமுண்ட அமரனாக இருப்பேன்!''

இவ்விதம் வந்தியத்தேவன் தன் வாழ்க்கையில் என்றும் பேசி அறியாத வாறு பேசிவிட்டு உட்கார்ந்தான். இளைய பிராட்டி மெய்மறந்து அவன் முகத்தைப் பார்த்த வண்ணமிருந்தாள். இந்த வார்த்தைகளையெல்லாம் இந்த வீரன் முதல் முறையாகத் தன்னிடம் சொல்லவில்லையென்றும், எத்தனை எத்தனையோ ஆண்டுகளுக்கு முற்பட்ட யுக யுகாந்திரங்களில் எவ்வளவோ தடவை இதே சொற்பிரவாகத்தை இவனிடம் கேட்டிருப்பதாகவும் அவளுக்குத் தோன்றியது: இந்தச் சித்தப் பிரமையின் விசித்திரத்தைப் பற்றி அவன் சிந்தித்துக் கொண்டிருந்த போது ''அக்கா! அக்கா!'' என்ற வானதியின் குரல் கேட்டது.

இருவரும் திரும்பிப் பார்த்தார்கள்.

வானதி விரைந்து அவர்கள் அருகில் வந்து, ''அக்கா! இவருக்கு ஓர் அவசர ஓலை வந்திருக்கிறது. மணிமேகலையின் தமையன் கந்தமாறனிடமிருந்து வந்திருக்கிறது!'' என்று சொல்லிக் கொண்டே ஓலையை நீட்டினாள்.

(தொடரும்)



— சீர்காழி. வீ. ரேவதி.

பின்னல்

ராஜன் அந்த அலுவலகத்தில் சேர்ந்து சில நாட்களே ஆகியிருந்தன. எனினும், நல்ல பேர் எடுத்து விட்டான். கடைநிலைப் பணியாளர் என்ற பதவிதான். கோப்புக்களை இந்த மேஜையிலிருந்து இன்னொரு அலுவலர் மேஜையில் சேர்ப்பது, டெலிபோன் கிணுகிணுத்தால் கவனிப்பது. இதெல்லாவற்றிலும் முக்கியமாக, அவன் செய்த வேலை நாற்காலிகளுக்குப் பிளாஸ்டிக் நார்களால் இருக்கை பின்னுவதுதான். அடிக்கடி அவனிடம் பணத்தைக் கொடுத்துத் தேவையான பிளாஸ்டிக் நார்களை வாங்கி வந்து பிய்ந்து போன நாற்காலிகளுக்கு இருக்கை பின்னச் சொல்வார்கள். இதற்குத் தனியாகப் பணம் தருவதாகவும் கூறப்பட்டது.

ஒருநாள் ராஜன் வராந்தாவில் உட்கார்ந்து பின்னிக் கொண்டிருந்த போது அங்கு அவன் செக்‌ஷன் அதிகாரி கிருஷ்ணன் வந்தார்.

''ராஜன், நாளைக்கு நீ நம் வீட்டுப் பக்கம் வா. நம் வீட்டிலும் இரண்டு மூன்று நாற்காலிகள் பிய்ந்த நிலையில் உள்ளன'' என்றார்.

''இன்னும் இந்த வேலை முடியவில்லையே, சார்.''

''ஆங், அதை எப்போது வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். நம் வீட்டில் விசேஷம். அதனால் அவசரம்'' என்றார்.

ராஜன் அலுவலகம் மூடும் நேரம் வரை மிக வேகமாக வேலை செய்து முடித்தான். மீந்த பிளாஸ்டிக் நார் சுருள்களை ஸ்டோர் கீப்பரிடம் கொடுத்து விட்டுப் போனான்.

மறுநாள், ஆபீசர் வீட்டைக் கண்டு பிடித்து வந்தடைந்தான்.

கேட்டிலிருந்து கூப்பிட்டவுடன் ஓர் அம்மாள் விரைந்து வந்தாள். உற்சாகம் ததும்பும் குரலில் ''ராஜனா, வாப்பா வா, ஸார் நீ வருவாய் என்று சொல்லி விட்டு வெளியே போனார். நான் உன்னை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன்'' என்று சொல்லிக் கொண்டே அவன் கையிலிருந்த ஊன்றுகோலைப் பிடித்து வராந்தாவுக்கு அழைத்துச் சென்றாள். ஒரு சோபாவும் இரு பெரிய நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன. அவற்றை அவனுக்குக் காட்டி ''குழந்தைகள் ஏறிக் குதிப்பதால் பிய்ந்து விட்டன. கெட்டியாகப் பின்னு'' என்று உத்தரவிட்டாள். நாற்காலிகளைத் தடவிப் பார்த்து எவ்வளவு ஒயர் வேண்டுமென்று கணக்கிட்டான்.

''அம்மா, நான் கடைக்குப் போய் ஒயர் வாங்கி வருகிறேன். பணம் தருகிறீர்களா?'' என்று கேட்டான்.

''நீ சிரமப்பட வேண்டாம் என்று அவரே எல்லாம் ரெடியா வாங்கிக் கொண்டு வந்து விட்டார்'' என்று சொல்லி விட்டு, இரண்டு பெரிய சுருள்களைக் கொண்டு வந்து கொடுத்தாள். ஏனோ ஒரு நிமிஷம், அவனுக்கு அது தான் நேற்று வாங்கி வந்த ஒயர்தான் என்று தோன்றியது. மனக் குழப்பத்தோடு வேலையைத் தொடங்கினான்.

வாசலில் உட்கார்ந்திருந்த குழந்தைகள் அவன் அருகே வந்து உட்கார்ந்து வேடிக்கை பார்த்தார்கள். மாலை வரை வேலை செய்து விட்டு வீடு திரும்பினான்.

இரண்டு நாட்களுக்கு வேலை இருந்தது. குழந்தை அருண் நன்றாகவே பழகி விட்டான். பிற்பகல் மூன்று மணி இருக்கும். ஒரு பெண் வேகமாகப் படியேறினாள். ஒரு கணம் அவன் பக்கம் பார்த்து விட்டு உள்ளே போனாள். அருண் அவள் பின்னாலேயே ஓடினான். ''அக்கா, அக்கா நம்மாத்திலே ஒயர் மாமா வேலை செய்யறாரே, பார்த்தியா?'' என்று கட்டியம் கூறினான். ''எனக்கு ஒரு சின்ன மேஜை, ஒரு சின்ன நாற்காலி வேணும்னா பண்ணித் தரேன்னு சொல்றாரே'' என்று மகிழ்ச்சியோடு எக்காளம் கொட்டினான்.

அவள் அவனைக் கவனிக்கவே இல்லை. ''அம்மா, பசிக்கிறதே, என்ன இருக்குது?'' என்று கத்தினாள். ''இன்னிக்கு கிளாஸ் படுபோர். நாங்கள்ளாம் தூங்கியே போய் விட்டோம்'' என்று சொல்லிக் கொண்டே பெரிதாகச் சிரித்தாள். அதற்குள் டிபன் வந்து விட்டது போலும்.

''ஐயோ, இன்னிக்கும் உப்புமாவா? படு

பத்மா ராமசுவாமி

போர்! என்னம்மா? உலகத்திலே, வேறு டிபனே கிடையாதா?'' என்று ஆர்ப்பாட்டம் பண்ணினாள். இப்படியெல்லாம் சொன்னாளே தவிர தட்டு காலியாகி விட்டது. ஒரு சிநேகிதி வேறு வந்திருந்தாள்.

''ஏண்டி, நீ கட்டுரை தயார் பண்ணி விட்டாயா? இருந்தா எனக்குக் கொஞ்சம் கொடேன்'' என்றாள்.

''ஐயோ, நானா? இன்னும் செய்ய வில்லை'' என்று சொல்லி விட்டு மீரா மறுபடியும் கத்தினாள்.

''அம்மாம்மா, நஸ்ருல் இஸ்லாம் பற்றி உனக்கு ஏதாவது தெரிந்தால் சொல்லேன். நீதான் ஓயாமல் படித்துக் கொண்டிருக்கிறாயே'' என்றாள்.

''எனக்குத் தெரியாதே மீரா. அவர் யார், கபீர் மாதிரியா? மதபோதகரா, கதாசிரியரா?''

''அவர் ஒரு கவி. வங்காளத்தின் புரட்சிக் கவி. நம் பாரதி போல். சுதந்திரப் போராட்டம் நிகழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர்.''

எல்லோரும் திகைத்தனர். அசரீரியா என்ன!

''நீயாப்பா பேசினது?'' அம்மா ராஜனிடம் கேட்டாள்.

''ஆமாம், உங்களுக்கு நஸ்ருல் இஸ்லாம் பற்றித் தெரிய வேண்டுமானால் சாஹித்ய அகாதமி பிரசுரம் இருக்கிறது. தவிர ''நச்ருல் என்றொரு மானிடன்'' என்று ஒரு புத்தகம் கூட இருக்கிறது. அதில் வெகு அழகாக அவருடைய கவிதைகளைத் தமிழில் மொழி பெயர்த்துக் கொடுத்திருக்கிறார்கள்'' என்றான்.

மீரா அவனருகே வந்தாள். ''உனக்கு எப்படி இதெல்லாம் தெரியும்?'' என்று கேட்டாள்.

''தமிழ்க் கவி ஒருவருடன் வேறுமொழிக் கலைஞரை ஒப்பிட்டு ஒரு கட்டுரை எழுத வேண்டியிருந்தது. அதனால் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

''அவர் பிறப்பினால் ஹிந்து அல்ல. எனினும் காளியையும் கண்ணனையும் தம் பாடல்களில் பாடியுள்ளார். அவரைத் தேசிய கவிஞர் என்றுதான் கூற வேண்டும்.''

மீரா அதிர்ச்சி அடைந்தாள், நீ... இல்லை நீங்கள் ரொம்ப அழகாப் பேசறீங்க. நீங்க என்ன படிச்சிருக்கீங்க என்று கேட்கலாமா?'' என்றாள்.

''அதுவா, தமிழ் இலக்கியம். எம். ஏ. எம். பில்., பி. எட்.,'' என்று சொல்லி மெதுவாகச் சிரித்தான் ராஜன்.

மீரா உலகியல் அறியாமல் வளர்ந்த பெண். சூதுவாது அறியாத, இளகிய மனமுடைய கல்மிஷமற்ற பெண். அவள் கண்களில் அவளறியாமலேயே நீர் நிறைந்தது.

''ஸார்! ஸார்! நீங்கள் — நீங்கள் இந்த வேலையா செய்வது?'' தடுமாறினாள்.

''இதில் அகௌரவம் ஒன்றும் இல்லையே. நான் கன்யாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவன். எங்கள் வீட்டில் ஓலைக் கூடைகள், பெட்டிகள் முதலியன முடைவது எல்லோரும் செய்யும் தொழில்தான். சிறு வயதில் கிலுகிலுப்பை பண்ணுவதில் தேர்ச்சி பெற்றிருந்தேன். இந்த நாற்காலி பின்னுவதும் அது மாதிரிதானே. என் பட்டங்கள் மதிக்கப்பட்டு வேலை கொடுக்கப்படாவிட்டாலும் இந்தப் பின்னல் சோறு போடுகிறது'' என்றான். வேலை முடிந்து விட்டது. எழுந்து நின்றான். மீராவின் தாய் டீ போட்டுக் கொண்டு வந்து கொடுத்தாள்.

''அம்மா முடித்து விட்டேன், சரியாக இருக்கிறதா, பாருங்கள்'' என்று சொல்லி முடிப்பதற்குள் குழந்தை அருண் சோபா நாற்காலி எல்லாவற்றிலும் உட்கார்ந்து பார்த்தான். ''ஜம்னு இருக்கு'' என்று நற்சான்றிதழ் கொடுத்தான். பணத்துக்காகத்தான் நின்று கொண்டிருக்கிறான் என்று மீராவின் அம்மாவுக்கு மெதுவாகப் புரிந்தது.

''நாளைக்கு உங்களை நேரிலே ஆபீசிலேயே பார்த்துப் பணம் கொடுப்பதாகச் சொன்னார்'' என்று கூறினாள். இது அவனுக்குச் சற்று அதிர்ச்சியாகத்தான் இருந்தது. இன்று வரும் பணத்துக்காகப் பல செலவுகள் காத்துக் கொண்டிருந்தன. அக்கா சிக்காக இருப்பதாக வேறு கடிதம் வந்திருந்தது. தான் ஏதோ பெரிய கம்பெனி



வேலையில் இருப்பதாக ஊரில் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மறுநாள் ஆபீசுக்குப் போய் அன்று பாதியில் நிறுத்தி விட்டுப் போன வேலையைத் தொடங்கினான். பிளாஸ்டிக் சுருள்களை வாங்கப் போன போது ஸ்டோர் கீப்பர் "அன்னிக்குக் கிருஷ்ணன் ஸார் எடுத்துக் கொண்டு போன ஒயரையும் இன்னும் இரண்டு சுருளும் கூட வாங்கிக் கொடுத்திருக்கிறார்" என்றார். ராஜனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

அப்போது கிருஷ்ணன் வந்தார். அவன் வேலையின் நேர்த்தியைப் பெரிதும் பாராட்டினார். தன் நண்பர்களுக்கெல்லாம் சிபாரிசு பண்ணுவதாகச் சொன்னார். பின் ஒரு காகிதத்தை நீட்டி அவனைக் கையொப்பமிடச் செய்தார். "உன் பில்" என்று விவரித்தார். பிறகு இன்னொரு காகிதத்தை நீட்டி இதிலும் ஒரு முத்திரை போட்டு விடு" என்றார். யோசனை பண்ணாமல் கையொப்பமிட்டுக் கொடுத்து விட்டான். பிறகு, 'இதென்ன, அதென்ன?' என்று கேட்டான்.

"முதலில் போட்டது நாற்காலி பின்னினதுக்குக் கூலி ரூ. 200."

"இன்னொரு கடிதாசு?"

"பிளாஸ்டிக் நாருக்கு ரூ........."

ராஜன் சற்றுத் தயங்கி, "அதிகமாக் கொடுத்திட்டீங்க போலிருக்கு ஸார்" என்றான்.

"கணக்கு எல்லாம் சரிதான். அங்கே செஞ்சதையும் சேர்த்தால் சரியாயிருக்கும்" என்று சொல்லி விட்டு நகர்ந்தார்.

ராஜனுக்கு உடம்பெல்லாம் எரிவது போல் இருந்தது. கூலிப்பணம் 200 ரூபாயையும் அவர் முகத்திலேயே விட்டெறியலாமா என்று நினைத்தான். பின், "இது நான் உண்மையாக முதுகு வலிக்க உழைத்ததற்குக் கூலி. இதை நான் ஏன் விட வேண்டும்" என்று தோன்றியது. "ஆனால் இந்த ஆபீஸ் வேலையை விட்டு விட வேண்டியதுதான். இந்த மாதிரி மோசடிகளுக்கு நாம் ஏன் உடந்தையாக இருக்க வேண்டும்" என்று நினைத்தான்.

இரண்டு மூன்று நாட்கள் கழித்து, மீரா தன் தந்தையிடம், "அப்பா, உங்க ஆபீஸ் ராஜனைச்சற்று வரச் சொல்றீங்களா? அவர் சொன்ன நஸ்ருல் இஸ்லாம் கவிதைப் புத்தகம் வாங்கிண்டு வந்திருக்கேன். சில கவிதைகளுக்கு விளக்கம் கேட்கலாம்னு ஆசை" என்றாள்.

கிருஷ்ணன், "அவனா! அவன் திடீர்னு வேலையை விட்டுட்டுப் போய் விட்டானே. ஊரிலே யாருக்கோ உடம்பு சரியில்லையாம். போகணும்னான்" என்றார்.

"திரும்பி வர மாட்டாரா அப்பா?"

"வர மாட்டானாம். கன்யாகுமரியிலே ஓலைக் கலைப் பொருள்கள் செய்து விற்கப் போறானாம். இங்கே வேலை பிடிக்கலையாம்... உலகம் தெரியாதவன். சுத்தப் பைத்தியக்காரன்... இவனுக்குப் பதிலா இன்னொரு கண்ணு தெரியாத பயலைப் போடணும். எம். டி. ஆர்டர்" என்று அலுத்துக் கொண்டார் கிருஷ்ணன்.

மீரா தனக்குக் கிடைக்க இருந்த ஒரு சிறந்த வீட்டு ஆசிரியரை இழந்து விட்ட துக்கத்தில் ஆழ்ந்தாள். இவ்விழப்பு அவளுக்கு மட்டுமா?

— பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் அமைப்பின் ஒன்பதாம் ஆண்டு நினைவு மலரில் இடம் பெற்ற சிறுகதை.



●● ஓடும் மெட்ரோ ரயிலில் ஊதுபத்தி வியாபாரம் செய்வதற்கும் ஒரு திறமை வேண்டும்! வண்டி நிற்கும் போது அவர் ஸ்டேஷன் பெயரைச் சொல்லுவார். பிளாட்பாரம் வலமா அன்றி இடமா என்பார்! ஏறுபவர்களையும், இறங்குபவர்களையும் ஒருமுகப்படுத்துவார். வண்டி கிளம்பியதும் ஊதுபத்தி விற்பனையைத் தொடர்வார்! கிருஷ்ணமூர்த்தியின் வியாபாரம் சக்கைப் போடு போடுவது அவரது இத்தகைய உபகார மனப்பான்மையால்தான். வியாபார தந்திரமாக ஆரம்பித்து இன்று போரிவிலி ரயிலில் இதை பம்பாய் ஜனங்களுக்கு ஒரு பொது ஜனச் சேவையாகச் செய்து வருகிறார் கிருஷ்ணமூர்த்தி!

— ராஜீவி நரசிம்மன்



• கருப்பையா: மனத்தில் விழுந்தது சிறு விதை...

வாழ்க்கை உயர்வதற்கே!

மொட்டு மலர்வது போல் சாதனையின் முழு மலர்ச்சி

உடம்பெல்லாம் ஊரப் புழுதியினைச் சுமந்து கொண்டு ஓடி விளையாடிக் கொண்டிருந்த மகனை வேதனையோடு பார்த்தாள் அம்மா! அப்பா கன்னத்தில் கையூன்றி அசையாது உட்கார்ந்திருந்தார். அப்பா இப்படி வெறுமையாய் உட்காருகிற ரகமில்லை. காலில் சக்கரம் கட்டிக் கொண்டு அலைவார். இப்போது அச்சு முறிந்து போயிருந்தது. காவேரிப்பாசன நிலம் தான்... ஏனோ சுத்தமாய்ச் செத்துப் போய் விட்டது. விவசாயம் போனவுடன் வீடு கடனில் மூழ்கிப் போயிற்று. பத்தாயிரம் கடன். எப்படி மீளப் போகிறோமோ என்ற ஹிம்சைதான் அப்பாவின் ஆணி வேரை ஆட்டிற்று!

"படிப்பை நிறுத்திட்டு, கருப்பையாவை மதுரைக்கு அனுப்பிச்சுடலாம்னு இருக்கேன் செல்லம்மா! ஜவுளிக்கடையிலே எடுபுடி வேலை. நம்ம கல்லிக்குடி ஆள் தான் ஓனர். சாப்பாடு போட்டு மாசம் நாலு ரூபா தருவாங்க..."

"மகமாயி எங்களை ஏன் தாயி இப்படிச் சோதிக்கிற! பன்னிரண்டு வயசுல, என் பிள்ளை இப்படிப் போவணுமா! பள்ளிக்கூடத்துக்கு அனுப்ப வேண்டிய வயசுல இப்படி வேற்று மனுஷருக்கு ஊழியம் பண்ண அனுப்பணுங்கிறீங்களே...."

அம்மா அழுதாள். சேலைத் தலைப்பால் முகம் பொத்திக் குமுறினாள். அம்மா அழுவது பார்த்து அக்காவும் அழுதாள். தங்கச்சி புரியாது விழி மலர்த்திப் பார்த்தது. அப்பா மிருதுவாய் அம்மாவுக்கு வீட்டோட நிலையைப் புரிய வைத்தார். இரண்டு பெண் பிள்ளைங்க இருக்கே! என்று வேதனை ஏற்படுத்தினார்.

தீர்மானமாயிற்று! படிப்பை நிறுத்தி விட்டு கருப்பையாவை மதுரைக்கு வேலைக்கு அனுப்புவது என்று தீர்மானம். ஒருநாள் இருட்டில் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்ததுதான் தெரிந்தது. விழித்துப் பார்க்க 'டக்' கென்று விடிந்து. முற்றிலுமாய்ப் புதிதாய்த் தெரிந்தது. மதுரை!

"தோ பாரு தம்பி! மாடியில உன்னைப் போல நாலு பசங்க இருக்காங்க! அவங்களோடயே படுத்துக்கணும். காலையில அஞ்சு மணிக்கு எழுப்பி விடுவாங்க. பக்கத்துத் தெருவுல போய், குழாய்ல நல்ல தண்ணி அடிச்சு எடுத்தாந்திடணும். தொட்டி நிரம்பின பிற்பாடுதான் சாப்பாடு. ஒன்பது மணிக்குக் கடை திறக்கும்.கீழ இறங்கி வந்திடணும்..."

மதுரை ஜவுளிக் கடை முதலாளி சொன்னவுடன் கருப்பையா கைதட்டித் தலையசைத்தான். ஆனால் உள்ளுக்குள் ஒரு பயம் ஆளைத் தின்று கொண்டிருந்தது. முதலாளியைப் பார்த்ததும் உடம்பு நடுங்கிற்று. வெளேரென்று ஜிப்பா போட்டுக் கொண்டு

எல்லோரையும் அதட்டிப் பேசுகின்ற மனிதரைப் பார்த்ததும் ஏற்பட்ட பயம். நாலாவது வகுப்பு சாரும் மிரட்டுவார். ஆனால் இப்படிப் பயம் வந்ததில்லை!

மூன்று மாதத்தில் மொத்தப் பயமும் விலகி சகலமும் புரிந்து போயிற்று! ஜவுளிக் கடையின் ஒவ்வோர் அசைவும் அப்படியே அச்சாய் மனத்தில் பதிந்து போயிற்று.

முதலாளி கடைக்குப் பக்கத்திலே ஓர் அறை எடுத்துத் தங்கியிருந்தார். அவர் குடும்பம் கல்விக்குடியில் இருந்தது. கருப்பையாவை முதலாளி கூடவே வைத்துக் கொள்வார் —, உள்ளூர்ப் பையன் என்பதால். ஹோட்டலில் சாப்பாடு வாங்கி வர, வேஷ்டி சட்டை துவைத்துக் கொடுப்பதற்கு, இப்படி எதற்கெடுத்தாலும் கருப்பையாவையே ஏவுவார். அவருக்குப் பணிவிடைகள் செய்துவிட்டு நாற்பது குடம் தண்ணீர் சுமக்க வேண்டும். மாடி ஏறும் போது அப்படியே குப்புறப் பிடித்துத் தள்ளும்! சற்று நின்று நெஞ்சுக் கூடு அலைய மூச்சு வாங்கிய பின்புதான் அடுத்த படியில் கால் வைக்க முடியும். பிற்பாடு கடையைத் திறந்தவுடன் சாப்பாடு முடித்து விட்டு கடைக்கு வந்தால் திசைக் கொருவராய்க் கை காட்டுவார்கள்; ஓட வேண்டும்.

''ஏன் கருப்பையா உன்னைப் போட்டு முதலாளி இப்படிப் படுத்துறாரு? என்னையெல்லாம் இப்படிப் போட்டு வதைச்சா சர்த்தான் போயான்னு கிளம்பிடுவேன்...''

''ஏய் இவனே! ராத்திரி சினிமாவுக்குப் போகலாமா?''

''கருப்பையா! தெப்பத் திருவுலா பாக்க வர்றியா? அப்படியேலைட்டுலேஎன்னாம்மா ஜோடிச்சு வைச்சுருக்கான். பாத்துட்டு வந்திடுவோம்.''

சகாக்கள் வருடலாய்ப் பேசுவதாய் ஏதேதோ விதைத்தார்கள். ஆனால் அதற்கு முன்பே கருப்பையாவின் மனசில் ஒரு பெரிய ஆல்விதை விழுந்திருந்தது! 'முதலாளியின் கம்பீரமும் குண்டூசி வேண்டும் என்றால் கூட 'டிங்' என்று 'பெல்' அழுத்திக் கொண்டுவரச் சொல்லுகின்ற தோரணையும். பத்துப் பேர்கள் முன்னாடி மிடுக்காய் நடந்து வருகின்ற பாவனையும்... யப்பா! இதற்கு எத்தனை வேண்டுமானாலும் கஷ்டப்படலாம். எப்படியாவது கஷ்டத்தில் எதிர்நீச்சலிட்டு முதலாளியாய்க் கரையேற வேண்டும். மிக ஆழமாய் இந்த விதை விழுந்திருந்தது!

இப்படியே மூன்று வருஷங்களை மூச்சடக்கிக் கழித்தாயிற்று. நான்காவது வருஷம் கடைக்குத் துணிகள் வாங்க மில்லுக்குப் போகும் போது முதலாளி, கருப்பையாவையும் கூட அழைத்துக் கொண்டு போனார். அப்போது ஒவ்வொரு செயலையும் உற்றுக் கவனித்து மனசுக்குள் இறக்கிக் கொண்டாயிற்று. நின்று கொண்டு வியாபாரத்தினைக் கவனிக்க ஒட்டுமொத்தமாய்ச் சகலமும் புரிந்து போயிற்று!

ஆறு வருடங்களில் அத்தனை சமாசாரங்களையும் தெரிந்து கொண்டாயிற்று. அப்போது கருப்பையாவுக்குப் பதினேழு வயது. உதட்டுக்கு மேலே கருநிழல் படர ஆரம்பித்த வாலிபப் பருவம். தனியாய் வாழ்க்கையைச் சந்திக்க வேண்டும் என்ற காளை வெறி! முதலாளியிடம் தன் ஆசையினைச் சொல்லி ஆசிர்வாதம் கேட்க, ஆறு வருட உழைப்பிற்கு இரண்டாயிரம் பணம் கொடுத்து வாழ்த்தினார். கருப்பையா சென்னைக்குப் பஸ் ஏறினார். சென்னையில் பிராட்வேயில் ஒரு ஸ்டோர்ஸில் சேல்ஸ்மேன் உத்தியோகம். நான்கு வருட மகா உழைப்பிற்குப்பின் மூன்று பேர்களைப் பார்ட்னர்ஷிப் சேர்த்துக் கொண்டு ராயப்பேட்டையில் ஜெயலட்சுமி ஸ்டோர்ஸ் என்ற ஜவுளிக் கடை — மூவாயிரம் மூலதனத்தில் துவங்கினார். 'முதலாளி'க் கனவு மலர்ந்தது! ஆனால் கருப்பையா நினைத்தபடி முதலாளி கம்பீரம் வந்துவிடவில்லை. 'பெல்' அழுத்தி. குண்டூசி கேட்க முடியவில்லை.' பயம் தான் ஆளை உலுக்கிக் கொண்டிருந்தது. எந்த இடத்திலும் பிசகி விடாது முன்னேற வேண்டுமே என்ற பயம். வேறு எந்தச் சிந்தனையும் மனசில் வளர்க்கவே கூடாது என்ற திடம். 'கடை' தான் கண்முன்னே நிற்க வேண்டும் என்ற கட்டுப்பாடு.

அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து குளித்து வெள்ளை உடுத்தி ஊதுபத்திப் புகை மிதக்க ஐந்து மணிக்கெல்லாம் கடையைத் திறந்து விடுவார். இரவு ஒரு மணி வரையிலும் கடை திறந்திருக்கும். பத்தரைக்கெல்லாம் எல்லோரும் கடைகளைப் பூட்டி விட்டுப் போன பின்பு ஒரு மணிவரை திறந்திருக்கின்ற கடையினைப் பார்த்து ராயப்

• ஜவுளியில் மட்டுமின்றி சென்னை நகரம் முழுவதும் வேறு பல துறைகளிலும் விரிவடைந்து....



பேட்டை ஜனங்கள் மூக்கின் மேல் விரல் வைத்து வியக்க, கருப்பையாவின் பலம் கூடிற்று! பொய் இல்லாது, வாடிக்கையாளர் வயிற்றில் கைவைக்காமல், லாபத்தில் வியாபாரம் பண்ணக் கூடிய வித்தைதான் கருப்பையாவின் பலம். பால்ய பருவத்திலிருந்து படிப்படியாகக் கற்றுக் கொண்ட அற்புதமான பாடம். இரவு இரண்டு மணிக்குத் துண்டைச் சுருட்டித் தலைக்கு வைத்துக் கொண்டு, கடை வாசலிலேயே கண் மூடி விடுவார். நான்கு மணிக்கு எழுந்து கார்பரேஷன் பாத்ரூம், லெட்டிரின் பயன்படுத்திக் கொண்டு ஐந்து மணிக்குக் கடை திறந்து விடுவார். கொஞ்சம் உயர்ந்தவுடன் இன்னும் உற்சாகம் கூடிற்று! பார்ட்னர்ஸ் பிரிய, கடை கருப்பையாவுக்குச் சொந்தமாயிற்று. கடை தனக்கென்று ஆனவுடன் உழைப்பும் கூடிற்று. அப்பாவின் மொத்த கடனையும் அடைத்து, ஒரு மாதத்திற்கு ஐயாயிரம் பெருக்கிக் கொண்ட உழைப்பு!


• குடும்பத்தாருடன் கருப்பையா: உயர்விலும் எளிமை மறவாமல்...

"வணக்கம் கருப்பையா சார். இந்த ஏரியா முழுவதும் உங்க பேச்சுத்தான். போட்டு அசத்தி எடுத்திட்டீங்க! வாங்களேன் கிண்டி ரேஸ் பாத்துட்டு வந்துடலாம். கார் எடுத்துட்டு வந்திருக்கேன்."

"அடுத்த வீக் எங்க வூட்டுக்கு லஞ்சுக்கு வாங்களேன். ரொம்ப நாளா எனக்கு ஆசை. நீங்க வரணும்."

"நாளைக்கு மட்டும் ஒன் அவர் முன்னாடி கடையைச் சாத்திடுங்க. பக்கத்துலே ஒரு ஸ்கூல்லே விழா. நீங்கதான் சீஃப் கெஸ்ட்!"

எதற்கும் மயங்கவில்லை கருப்பையா! யார்யாரோ எப்படி எப்படியோ திசை திருப்பப் பார்த்தார்கள். பலரும் பலவிதமாய்ப் பேசினார்கள். கருப்பையா தாம் தேர்ந்தெடுத்த திசையிலே திடமாய் இருந்தார். அவரின் உழைப்பு அதற்கு உரமாயிற்று. பணம் சேரச் சேர மனசு பறந்தது. இன்னும்.. இன்னும்... என்று உள் மனசுக்குள் ஓர் உற்சாகம் ஊற்றெடுத்துக் கொண்டிருந்தது. இரவு இரண்டு மணிக்குக் கடையை மூடி விட்டுப் பணம் எண்ணிய போது, உழைப்பின் பயன் பிரத்யட்சமாகிப் பரபரப்பும் பரவசமும் கூடிற்று!

கூண் எதிரே ஒரு மொட்டு அவிழ்ந்து மலர்வதைப் போல மிக நிதானமாக ஒரு மனிதனின் முழுமலர்ச்சி! 1964 இல் கடை திறந்து கொஞ்சம் கொஞ்சமாய் நகர்ந்து, 67 இல் லட்சக் கணக்கில் வியாபாரம் பெருக்கிக் கொண்ட மனிதனைப் பார்த்து எல்லோரும் வியந்தார்கள். அப்படியிருக்குமோ இப்படியிருக்குமோ என்று அநாவசியமாக அனுமானமாய்ப் பேசினார்கள். ஆனால் கருப்பையா சிதறிவிடாது ஒரே குறியில் இருந்தார். அவரைப் புரிந்து கொண்டு பிரபல ஜவுளி வியாபாரி ஒருவர் தம் மகள் இந்திரா தேவியைக் கருப்பையாவுக்கு மணம் முடித்துக் கொடுத்தார். மிக எளிமையாய்த் திருமணம் நடந்தது.

கையில் காசு இருக்கின்றதே என்று ஒரு ஹால் ஒரு கிச்சன், பெட்ரூம் என்று வீடு தேடாது, கடைக்குப் பக்கத்திலே ஒரு வீட்டின் கார் ஷெட்டினை வாடகைக்குப் பிடித்துக் கொண்டு குடித்தனத்தைத் துவங்கினார். அதுவே சொர்க்கமாய்த் தெரிந்தது. திருமணம் நடந்த அதே ஆண்டில் மகாலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் என்று ஒரு புதிய துவக்கம்! மனசில் தெளிவான திட்டம் இருந்தது. எதன் பொருட்டும், எதற்கும் அசையாத மனவலு கூடிற்று. கூர்மையான ஒரே சிந்தனை — 'உயர வேண்டும்'. 'மாபெரும் சபைகளில் நீ நடந்தால் மாலைகள் பல விழ வேண்டும்..' திரும்பத் திரும்பச் சில்வண்டு மாதிரி காதில் வார்த்தைகள் இரைந்து கொண்டே இருந்தன.

மாலைகள் விழுந்தன! சமீபத்தில் தொழில் நிமித்தமாகக் கருப்பையா லண்டன் பயணம் மேற் கொண்ட போது சின்னதும் பெரியதுமான தொழிற்சாலை முதலாளிகள் வந்து மாலைகள் பல போட்டார்கள். எப்போதோ கருப்பையாவின் மனத்தில் விழுந்த விதை இன்று சென்னை நகரம் முழுவதும் நிறைய விழுதுகள் விட்டுப் பல துறைகளில் விரிவடைந்து கொண்டே போகின்றது. இருப்பினும் 'முதலாளி தோரணையோ பந்தாவோ காட்டாது, மிக எளிமையாய் ஒரு சின்னப் புள்ளியிலிருந்து கொண்டு தம் வட்டத்தினை விரிவுபடுத்திக் கொண்டே போகின்றார் கருப்பையா!

உண்மைக்கதை வடிவம்: **சரஸ்வதி**

படங்கள்: **ரமணன்.**

மணல்வெளி

"கௌதம்... கௌதம்!"

வராந்தாவுக்கு வெளியே வந்து ஒரு நர்ஸ் கூப்பிட்டாள். பெஞ்சில் கௌதம் இல்லை. அன்னவாசல்காரன் இரவு புதூர் துளசிங்கம் வராததால் அதிகாலை முதல் பஸ்ஸில் தகவல் சொல்லி வர ஊருக்குப் போய் விட்டான்.

காலை ஏழரை மணிக்கு ஆஸ்பத்திரிக்கு வரும் கூட்டத்தைப் பார்த்துக் கொண்டு வராந்தாவுக்கு அப்பால் நின்றிருந்தான் கௌதம்.

"கௌதம் யாருய்யா?" என்று வார்டு பாய் ஒருவன் போட்ட கூச்சல் கேட்டு வேகமாக உள்ளே வந்தான்.

"கௌதம் நான்தான்."

"எம்மா நேரம் கூவறது? பெரிய டாக்டரு அர்ஜண்டா கூப்பிடறாரு."

கௌதம் டாக்டரின் அறைக் கதவைத் தள்ளிக் கொண்டு நுழைந்தான்.

டாக்டர் அவனை நிமிர்ந்து பார்த்தார்.

"அந்தப் பூச்சி மருந்து சாப்பிட்ட பொம்பளை உங்களுக்கு என்ன ஆகணும்?

என்ன இக்கட்டான கேள்வி?

"நெய்பர்."

"ரிலேடிவ்ஸ் யாராவது வந்திருக்காங்களா?"

"யாருமில்லே சார்."

டாக்டர் அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தார். அவர் நினைப்பது புரிந்தது. இதற்கெல்லாம் பாதிக்கப்பட்டு விடுவதா?

"என்ன சார் விஷயம்?" என்று அவனே கேட்டான்.

"கண்டிஷன்கிரிடிகல். தேர்றது கஷ்டம்."

கௌதம் திடுக்கிட்டான்.

"இது போலீஸ் கேஸாவும். டி.எஸ்.பிக்குப் போன் பண்ணியிருக்கேன். மரண வாக்குமூலம் வாங்கணும். மாஜிஸ்திரேட்டுக்கு இண்டிமேட் பண்ணச் சொல்லியிருக்கேன்."


"சுயநினைவு வந்திருச்சா சார்?"

"ஓ... ஆனா" என்று நிறுத்தித் தம் கடிகாரத்தைப் பார்த்தார்." பகல் பத்து மணி வரை தாண்டுமான்னு சந்தேகம்."

கௌதமுக்கு மனசு பதைத்தது.

"நான் போய்ப் பார்க்கலாமா?"

"ஓ எஸ்."



ஐஸி யூனிட்டில் ஒரு படுக்கையில், ஆக்ஸிஜன் ஸிலிண்டரிலிருந்து மூக்கில் ஒரு

குழல் செருகியிருக்க, ரஞ்சிதம் கண் மூடிப் படுத்திருந்தாள். இடது புஜத்தில் குளுகோஸ் டிரிப் ஏறிக் கொண்டிருந்தது.

அவன் படுக்கையருகே போய் நின்றான்.

அருகில் ஒரு நோயாளி திடீரென்று அலறினான். அந்த ஓசையில் ரஞ்சிதம் கண் விழித்தாள். அவள் பார்வை அவன் மேல் பதிந்தது. சில விநாடிகள். அவள் கண்களி லிருந்து கண்ணீர் பெருகி இரு கன்னங்களி லும் வழிந்து இறங்கிற்று.

கௌதம் சங்கடமாக உணர்ந்தான்.

ரஞ்சிதம் அவனையே வைத்த கண் வாங் காமல் பார்த்தாள். வேதனை. அவமானத் தையும்சிறுமையையும்உணர்த்தும்வேதனை. எதையோ யாசிக்கிற மாதிரி ஒரு கெஞ்சுதல்.

அவள் கரங்கள் மெல்ல அசைந்தன. வயிற்றுக்கு மேலே ஒன்று சேர்ந்தன. குவிந் தன. அவள் அவனை வணங்குவது போல் உயர்த்தினாள்.

அப்போதுதான் கௌதம் ஏன் இவளைத் தான் பார்க்க வந்தோம் என்று நினைத் தான். அவள் மீதிருந்த வெறுப்பு மாய்ந்தது. பரிதாபத்திற்குரிய அவள் வாழ்க்கை, ஒரு வீச்சில் அவன் மனசில் கொடியோடிற்று.

எங்கே பிறந்தவள் இவள்? என்னென்ன கனவுகளோடு விட்டலாபுரம் வந்தவள்? எதுவாவது நிறைவேறியதா? அப்படி ஒன்றிரண்டு நிறைவேற, தாலி கட்டியவ னின் கொலை விலை தர வேண்டும் என்று நினைத்து வந்தவளா? அப்படி நேருமென்று இவள் எதிர்பார்த்திருப்பாளா?

இவளுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? இவள் உயிர் காப்பாற்றப்பட வேண்டும் என்று அனிச்சையாக எனக்குள் எழுந்த உத்தரவு ஏன் வந்தது? யார் அதைக் கொடுத் தது?

இறுதியில் இவள் என் கண்ணெதிரில் சாக வேண்டும் என்று என்னவொரு குரூர மான விதி? இவள் அதற்கு என்னை வணங்குகிறாளா? இவளை நேருக்கு நேர் சந்தித்து முதன் முதலில் பேச நேர்ந்த அந்த முதல் தடவையிலேயே இவள் மனசைத் துளைப்பது போன்ற வார்த்தைகளைத் தானே நான் வெளியிட்டிருக்கிறேன்!

அவள் உதடு மெதுவாய்ப் பிரிந்து அசைந் தது.

''அவரு... அவரு வர்லியா?'' என்று ஈன சுரத்தில் அவள் கேட்டாள்.

துளசிங்கத்தைக் கேட்கிறாள்.

''இல்லே!''

''நீங்க.. நீங்களா என்னை ஆஸ்பத்திரிக்கு இட்டாந்தீங்க?''

அவன் ஆமோதிப்பது போல் தலைய சைத்தான்.

பிரிந்து விலகிய கரங்களை அவள் மீண்டும் கூப்பினாள். நன்றி தெரிவிக் கிறாளா?

கௌதம் மரணத்தின் சன்னிதியில் நிற்பது போல் உணர்ந்தான். நன்றி, வணக்கம், போராட்டம், மனக்கோலங்கள், அதன் கோணல் நெளிவுகள்... எல்லாவற் றுக்கும் இப்போது அர்த்தமென்ன?

''பார்த்தாச்சு இல்லே.. ப்ளீஸ் வெளியே போங்க, நகருங்க சார்'' என்று அதட்டி னாள் ஒரு நர்ஸ்.

அவன் திரும்பி அவளை முறைத்தான்.

''பேஷண்ட்டை ஸ்ட்ரெயின் பண்ணா தீங்க!''

நர்ஸ் சொல்வது உண்மை. அவன் நிற்க நிற்க ரஞ்சிதம் இன்னும் வேதனைப்படு வாள். சாகும் போதாவது இவள் நிம்மதி யாகச் சாகட்டும்.

அவன் ஐ. ஸி. யூனிட் வாயிலருகே வரும் போது ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டருடன் மூக்குக் கண்ணாடி தரித்த ஒரு கம்பீரமான நபர் உள்ளே நுழைந்தார். மாஜிஸ்திரேட் தான். உள்ளுணர்வு சொல்லிற்று.

மரண வாக்குமூலத்தின் போது தான் உள்ளே இருக்கவேண்டுமா? தேவையில்லை. இவள் தான் எவ்வளவு இழிந்து போனேன் என்பதை என் கண்ணெதிரே தெரிவிக்க வேண்டாம்.

வேகமாக வெளியேறப் போனவனுக்கு ஏனோ நின்று அவளைத் திரும்பிப் பார்க் கத் தோன்றியது. திரும்பினான். அவள் பார்வை அவனைச் சந்தித்தது. ரஞ்சிதம் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். இன்னும் அவள் வயிற்றின் மீது அந்தக் கைகள் குவிந்திருந்தன.

ஏனோ அவனுக்கு எல்லாமே அர்த்த மற்றது போல் ஒரு விரக்தி வந்தது.

சட்டென்று வெளியேறினான்.

வினோதமான ஒரு துக்கம் அவனுள் மூண்டது. வெறுப்பின்றி லேசான ஒரு பச்சாதாபத்தோடு அவள் உயிர் பிழைக்க வேண்டுமென்று நினைத்தவாறே இரவெல் லாம் அவன் முடங்கியிருந்த பெஞ்ச் கண்ணில் பட்டது.

காப்பாற்ற முனைந்த ஓர் உயிர். செய்யத் துடித்த ஒரு செயல். இதுதான் அவளுக்கும் தனக்குமாக மிஞ்சியிருந்த ஒரே தொடர்பு.

அதுவும் அறுகிறது. அந்த முயற்சியும் தோற்கப் போகிறது. இந்த விரக்திக்கு அது தான் பொருளா?

அவன் வராந்தாவுக்கு வெளியே வந்து நின்றான்.

''சார்... உங்களை அதோ கூப்பிடறாங்க

மாலன்

பாருங்க!''

யாரோ தோள் தொட்டுச் சொன்னார்கள்.

அவன் திரும்பினான்.

தூரத்தில் ஒரு வேன் பக்கத்தில் பரிச்சயமில்லாத எவனோ ஒருவன் நிற்பது தெரிந்தது. பார்த்த முகம். யாரென்று தெரியவில்லை.

'என்னையா?' என்று மார்பில் கை வைத்துத் தலையாட்டிக் கேட்டான்.

'ஆமாம். கிட்டே வாருங்கள்' என்று அவனும் கையசைத்துச் சமிக்ஞை செய்தான்.

போக வேண்டுமா?

மீண்டும் அவன் அவசர அவசரமாகக் கையாட்டுவது தெரிந்தது.

கௌதம் நடந்தான்.

வேன் இப்போது அண்மைக்கு வந்தது. இந்த வேன்? இது கோட்டையில் பிலோமினா ஏறி வந்த வேன். அட.. அதை ஓட்டி வந்த டிரைவர்தான் இவன்.

அவனை நெருங்கியதுமே டிரைவர் பேசத் தொடங்கினான்.

''சார் நீங்க கௌதம்தானே?''

''ஆமாம்.''

''என்னை ஞாபகமிருக்கா?''

''ம்ம்ம்.''

''சிஸ்டர் பிலோமினா அனுப்பிச்சாங்க.''

பிலோமினாவுக்கு நான் இங்கே இருப்பது எப்படித் தெரியும்? கௌதம் யோசித்தான்.

''சிஸ்டர் நீங்க இங்கே இருந்தா கையோட கூட்டிட்டு வரச் சொன்னாங்க.''

கௌதமுக்கு நம்பிக்கை வரவில்லை.

''என்ன விஷயம்?''

''விட்டலாபுரத்திலேர்ந்து யாரோ ஒரு பொண்ணு ஒங்களைத் தேடி வந்திருக்காம்.''

''எங்கே?''

''கான்வெண்ட்டுக்கு.''

விட்டலாபுரத்திலிருந்து தேடி வரக் கூடிய பெண்? நித்யாதான். அவள் வெளியே வர முடியாத வீட்டுக் காவலில் இருப்பதாக அல்லவா சிங்காரம் நேற்று வண்டியில் வரும் போது சொன்னான்!

''பேரு என்ன சொன்னாங்க?''

''சத்யாவோ வித்யாவோ.''

''நித்யாவா?''

''ஆமா... ஆமா... நித்யாதான்.''

டிரைவர் முகத்தைக் கௌதம் உற்றுப் பார்த்தான். சுத்தம்தான். நம்பலாம். கௌதம் தலை திருப்பி ஐ ஸி யூனிட்டைப் பார்த்தான். எந்த நேரத்திலும் அவன் அழைக்கப்படலாம். டாக்டர் பத்து மணி கடப்பது அரிது என்று சொன்னார்.

உயிர் போனதும் என்ன செய்வார்கள்? மார்ச்சுவரியா? போஸ்ட் மார்ட்டமா? முதலில் போஸ்ட் மார்ட்டம்தான்.

இனி இங்கிருக்க வேண்டிய அவசியம்

வரலாறுக்கு ஒரு வரலாறு!

இல்லைதான். உயிர் போய்விடும். உடம்பு மிஞ்சும். அதை யார் எடுத்துச் செல்வது? ஏன் எங்கே எடுத்துச் செல்வது?

டிரைவர் அவன் முகத்தையே பார்த்தான், பதிலுக்காக.

''அடேடே... இங்கே நான் ஒரு 'பேஷண்ட்'டைக் கூட்டிட்டு வந்தேன். உயிர் போவற நிலைமை. இப்ப நான் வர்றதுக்கு இல்லையே. வேற யாரும் பார்த்துக்க ஆள் இல்லே.''

''அப்படியா...? சரி. நான் சிஸ்டரம்மாகிட்டே சொல்லிடறேன்.''

அவன் வண்டியில் ஏறப் போனான்.

''ஒரு வேள்ள ரொம்ப அர்ஜண்டா இருந்தா இன்டென்ஸிவ் கேர் யூனிட்லே இருக்கேன். தகவல் சொல்லச் சொல்லுங்க.''

''சரி.''

நித்யா வந்திருக்கிறாளா? ஏதோ விவகாரம்.

தகவல் தெரிந்துதான் வந்திருப்பாள்.

கௌதம் மீண்டும் பெஞ்சில் போய் உட்கார்ந்தான். இன்ஸ்பெக்டரும் மாஜிஸ்திரேட்டும் இன்னும் உள்ளேயிருந்தனர்.

கௌதமுக்குப் பெஞ்சில் இருப்புக் கொள்ளவில்லை. நாலைந்து முறை எழுந்து வெளியேபோனான். திரும்பிவந்துஉட்கார்ந்தான். மீண்டும் எழுந்து வராந்தாவில் குறுக்கும் நெடுக்கும் நடந்தான்.

இன்னும் அவர்கள் வெளிவரவில்லை.

''சார்!''

திரும்பினான்.

வேன் டிரைவர்.

''சிஸ்டர் அம்மா வேன்லே குந்திட்டிருக்கு.''

''இதோ வர்றேன்.''

அவன் வேகமாக வெளியேறி வேனை நெருங்கினான்.

அவன் வருவதைப் பார்த்து சிஸ்டர் பிலோமினா கதவைத் திறந்து கொண்டு கீழே இறங்கினாள்.

''குட்மார்னிங்.''

''குட்மார்னிங்.''

''ஐ'ம் ஸாரி கௌதம்.''

வேனின் பின் இருக்கையில் நித்யா உட்கார்ந்திருந்தாள். அவனைப் பார்த்ததும் அவள் அழத் தொடங்கிவிடுவாளோ என்று கௌதமுக்குத் தோன்றியது. நித்யாவின்

> சரித்திரம் என்பதற்கு வரலாறு என்ற சொல் இன்று வழக்கத்தில் வந்துவிட்டது. வரலாறு என்றால் என்ன? வரல் ஆறு — வந்த வழி என்று குறிப்பிடும் சொல் அது.
>
> — வெஸ்பால்.

கன்னச் சதைகள் துடித்தன. முகம் வாடி ஒரு பய மருட்சி.

கௌதம் பார்த்ததும் பளிச்சென்று நித்யா சிரித்தாள். அடக்கி வைத்திருந்து வெடித்த சிரிப்பு. மூட்டம் கலைந்த ஒளி.

''என்ன விவகாரம் சிஸ்டர்?''

பிலோமினா நூதனமாக அவனைப் பார்த்தாள். பிரியம், பரிவு, தெளிந்த நீர் போன்ற புன்னகை.

''அன்யூஷுவல்.''

''புரியல்லே.''

''நித்யா அவங்க அம்மாவோட வந்திருக்காங்க.''

''எதுக்கு?''

பிலோமினா நித்யாவைப் பார்த்து மெதுவாகச் சிரித்தாள்.

''உன்னைத் தேடி.''

''என்ன நித்யா?''

ஆமோதிப்பது போல் அவள் தலையாட்டினாள். கண்ணில் ஒரு தைரியம். காவல் உடைத்து வெளிவந்த களிப்பு.

பிலோமினா சொன்னாள்.

''நித்யா அவங்க அம்மாவை மட்டும் சம்மதிக்க வச்சுட்டாங்க.''

எதற்கு என்று அவனுக்குக் கேட்கத் தோன்றவில்லை.

''அப்பாவைச் சம்மதிக்க வெக்க முடியலே.''

''ஸோ?''

''ஹ்ம் ஹ்ம் ஹ்ம்.''

பிலோமினா புரிந்து கொள்ளக் கூடாதா என்பது போல் சிரித்தாள். அவர்கள் இருவரும் திருமணம் செய்து கொள்ள அதாவது ஓடிப் போக, அவள் அம்மாவுக்குச் சம்மதம் என்று மண்டையில் அறைந்தது அந்தச் சிரிப்பு.

''இதுதான் நேரமா?'' அவன் சற்று வருத்தமான கோபத்தோடு நித்யாவைப் பார்த்தான்.

''இதான் எனக்குக் கிடைச்ச நேரம்.''

''நான் இங்கே இருக்கேன்னு.''

''நேத்து ராத்திரியே தெரியும்... ஊருக்கே! அதனாலேதான் காலைலே காவல் போடலே. அம்மா ஃபர்ஸ்ட் பஸ்ல போகலாம்னு கௌம்பச் சொன்னாங்க.''

''அவங்க எங்கே?''

''கான்வெண்ட்ல இருக்காங்க.''

இந்த நேரத்தில் முடிவெடுக்கிற சங்கதியல்ல. பேச வேண்டும். நித்யாவோடு. அவள் அம்மாவோடு.

''ஆல்ரைட் சிஸ்டர். இவளும் கான்வெண்ட்ல இருக்கட்டும். ரஞ்சிதம் கிட்டே மரண வாக்குமூலம் வாங்க இன்ஸ்பெக்டரும் மாஜிஸ்திரேட்டும் போயிருக்காங்க...''

இன்ஸ்பெக்டர் என்றதும் பிலோமினா நிமிர்ந்து பார்த்தாள்.

''இருதயராஜ் இல்லே. இங்கத்திய இன்ஸ்பெக்டர்.''

''அது அவங்களுக்கும் தெரியுமே! அவரு இங்கே வர முடியாதே.''

நித்யா குறுக்கிட்டாள்.

''எப்படி?''

''வந்து...'' என்று ஆரம்பிக்கப் போனாள்.

அதற்குள் பிலோமினா அவளைத் திரும்பிப் பார்த்து, ''நீ கொஞ்ச நேரம் வேன்லயே வெய்ட் பண்றியா நித்யா?'' என்றாள்.

''இருக்கேனே... நீங்க எங்கே போறீங்க சிஸ்டர்?''

''ரஞ்சிதம் செத்துக் கொண்டிருக்கிறாள். அவளுடைய ஆத்மாவுக்காக நான் பிரார்த்திக்கலாமா?''

கௌதமுக்குச் சிலிர்த்தது.

''ஒரு பெண். பாவப்பட்டவள்...'' பிலோமினா கிட்டத்தட்ட அனுமதி கேட்டாள்.

அவன் திடுக்கிட்டான்.

எல்லையற்ற கருணை எந்தத் திக்கில் பாய யார் அனுமதி வேண்டும்? ஒருவேளை அத்தகைய அனுமதி கோரப்பட்டால் வழங்கவோ மறுக்கவோ தான் யார்?

''ஓ யெஸ்... உங்க பிரியம் சிஸ்டர்.''

''நீங்க வேன் பக்கத்திலேயே நின்னுட்டிருங்க. கால் மணி நேரத்திலே வந்துடுவேன்.''

''ஓ எஸ்.''

''எந்த யூனிட்?''

''இன்டென்ஸிவ் கேர் யூனிட். பெட் நம்பர் ஆறு.''

''சரி.''

அவள் தலை மறைந்ததும் நித்யாவைப் பார்த்தான் கௌதம். அவள் புன்னகை நிம்மதிப் பெருமூச்சாக ஒளி வீசிற்று.

''உங்கம்மாவுக்குப் பிரச்னை வைச்சுட்டே நித்யா!''

''என்ன சொல்றே?'' அவள் முகம் மாறிற்று.

''இப்பக் கூட இது இல்லே நாம போக வேண்டிய வழி! சொல்லப் போனா உங்கப்பா மனசு இன்னும் வெறுப்பு ஏறிடும்'' என்றான்.

(அடுத்த இதழில் முடியும்)

ஆறாம் ஆண்டு நினைவு நாள்

2.10.1908



21.7.1984

டி.வி. இராமசுப்பையர்

நிறுவனர்

தினமலர்

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு —குறள்

தன் முயற்சியால் சேர்த்த பொருளையெல்லாம்
தகுதி வாய்ந்தவர்களுக்கு அள்ளி, அள்ளித்தந்து
தன்னுள்ளம் மகிழ்வார்கள் ஒப்புரவாளர்கள்
அத்தகைய ஒப்புரவாளராகி
திருவாங்கூர் தமிழர்க்காய்த் தினமலரைத் தொடங்கி
திக்கெல்லாம் புகழ்பரவச் செய்து பெருமை சேர்த்த
எங்கள் நிறுவனரின் நினைவு நாளில்
எங்கள் அஞ்சலியை செலுத்துகின்றோம்

இங்ஙனம்,
குடும்பத்தினர், உறவினர்கள்,
நண்பர்கள், தினமலர் ஊழியர்கள்.



தேவிலால்

திக் திக் விஜயம்!

கோவை, வையம்பாளையத்தில் நாராயண சாமி நாயுடுவின் நினைவாலயத்தைத் திறந்து வைத்த பின்னர், தஞ்சைக்குச் சென்று விவசாயிகள் பேரணியில் கலந்து கொண்டார், தேவிலால். சிவாஜியுடன் அவரது சூரக்கோட்டை பண்ணையில் காலைச் சிற்றுண்டி. சிவாஜியின் மனைவி கமலாவே பரிமாறினார். தேவிலாலுக்கு நெல் மாலை போடப்பட்டது. பண்ணையைச் சுற்றிப் பார்த்துப் பிரமித்துப் போனார்.

சென்னையில் முதல் நிகழ்ச்சி, பத்திரிகையாளர்கள் ஏற்பாடு செய்திருந்த கூட்டம். இந்தியில் வரவேற்புரை நிகழ்த்தினார்கள்! அதற்குக் கைமேல் பலன்! பத்திரிகையாளர் அமைப்புக்கு ரூ. 50,000 நன்கொடை கொடுத்தார் தேவிலால்! பின்னர் கேள்விக் கணைகள். இரண்டு மூன்று பத்திரிகையாளர்கள் இந்தியிலேயே கேள்வி கேட்டு இந்தியிலேயே பதிலைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள். அங்கு வந்திருந்தவர்களில் கிட்டத்தட்ட 90 சதவீதம் பேர்களுக்கு இந்தி தெரியாது. டெல்லியில் தமிழகத் தலைவர்களிடம் தமிழ் தெரிந்த நிருபர்கள் தமிழிலேயே கேள்வி கேட்டால் எவ்வளவு எதிர்ப்பை இந்தி பத்திரிகையாளர்கள் காட்டுவார்கள் என்பது நம்ம ஊர் பத்திரிகைக்காரர்களுக்குத் தெரியாதா?

நாரத கான சபையில் தேசியவர்த்தக சபையின் நிகழ்ச்சி. ஆங்கிலத்தில் எழுதி வைத்திருந்த உரையைக் கண்ணாடி இல்லாமலே படித்த தேவிலால், அது முடிந்தவுடன், இந்தியில் எந்தவிதக் குறிப்பும் இல்லாமல் பேச ஆரம்பித்தார். எல்லோருக்கும் அதிர்ச்சி!

தென் மாநில மீனவர் கூட்டமைப்பு நிகழ்ச்சி, கலைவாணர் அரங்கில் நடந்தது. சுப்பிரமணியம் என்பவர் தேசிய மீன் வள ஆலோசனைக் குழுவின் தலைவராம். அவர் பேசும் போது இரண்டு முறை தேவிலாலைப் 'பிரதமர்' என்று குறிப்பிட்டார். தேவிலால் கம்பீரமாக எல்லோரையும் ஒருமுறை பார்த்துக் கொண்டார்.

சிவாஜியின் தளபதி ராஜசேகரன், தேவிலாலிடம் ஜனதா தள அலுவலகத்துக்கு வந்து போக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். செழியன், ஹெக்டே ஆகியோர் வரவேற்றனர். கலிவரதன், ஜெகவீர பாண்டியன் ஆகியோர் மிஸ்ஸிங்! சிவாஜி தஞ்சையிலேயே தங்கி விட்டார். அலுவலகத்துக்குள் வந்த தேவிலால், சிவாஜி இருக்கையில் அமர்ந்தார். சென்ற முறை தேவிலால் வந்திருந்த போது சிவாஜியுடன் எடுத்துக் கொண்ட போட்டோவைத் தேவிலாலிடம் காட்டிக் கைழுெத்துப் போடச் சொன்னார் ராஜசேகரன். 'தேவிலால்' என்று கையெழுத்திட்டு, அடியில் 'ஹரியானா' என்று எழுதினார். ஆங்கிலத்தில் கையெழுத்துப் போட்டார் என்பது ஆச்சர்யமான விஷயம்!

சுதந்திரப் போராட்ட தியாகிகள் நிகழ்ச்சியிலும் இந்தியில் வெளுத்துக் கட்டினார், தேவிலால். பல நிகழ்ச்சிகளிலும் அவரது பேச்சு ஒரே மாதிரிதான் இருந்தது. சொன்னதையே சொன்னார். அவருக்குக் கறுப்புப் பூனை பாதுகாப்புப் படுபலம்.

கருணாநிதியுடன் ரகசிய ஆலோசனை நடந்தது. "பாரதீய ஜனதா கட்சியினர் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் மோதலை உண்டாக்கப் பார்க்கிறார்கள்" என்று கலைஞர் முறையிட, "கவலைப்பட வேண்டாம்" என்று ஆறுதல் சொன்னார் தேவிலால்.

அ. தி. மு. க. பழைய மந்திரிகள் இரண்டு பேர் தொடர்பு கொள்ள முயன்ற போது டெல்லியில் வந்து சந்திக்கும்படி சொல்லி விட்டுச் சென்றிருக்கிறார் தேவிலால்!

— தில்லப்பா

படம்: சுபா.

பனித்திரையூடே கஸ்தூரிமான்!

தனக்குள்ளிருந்தே மணம் வருவதை அறியாத கஸ்தூரி மான், அந்த மணத்தைத் தேடி, சுற்றி அலைவது போல், நாம் தேடும் நிம்மதி, அதாவது மோகன் கூறும் மாறுதல், நமக்குள்ளிருந்தே தோன்ற வேண்டும் என்ற கருவே என்னைக் கவர்ந்தது. பரஸ்பரம் கடிதம் எழுதுவதற்கான விதி முறைகளைப் படிக்கும் போதே கதையின் முடிவை ஊகித்து விட்டேன். முன்பின் தெரியாதவரிடம் நாம் காட்டும் பரிவு, புரிந்துணர்வு முதலியவற்றை நம்மைச் சார்ந்தவரிடம் காட்ட நாம் தயாராக இல்லை. நரேஷ் என்று மாறி, விஜுவுக்கு உள்ள உயர்ந்த ரசனைகளைப் புரிந்து கொண்ட மோகன், தன் மனைவி பத்மாவுக்கும் தனக்கும் இடையே பனித்திரை உருவாகியதைக் கண்டும் காணாதிருக்கிறான். பதினெட்டு ஆண்டுகள் மணவாழ்க்கைக்குப் பிறகு, ஒருவர் கையெழுத்தைக் கூட மற்றவர்கள் அடையாளம் கண்டு கொள்ளவில்லை என்பது என்ன பரிதாபமான நிலைமை! இதை முதலில் உணர்ந்த பத்மா கோவிலுக்குக் கணவனை அழைப்பதிலும், ''உங்க கூட பேசணும்'' என்பதிலும் உள்ள வெளிச்சக் கீற்று ஆறுதல் அளிக்கிறது.

— சத்யபாமா, பத்ராவதி.

விதிகளை மீறுவதில் வசீகரம்!

கணவன் மனைவி உள்ளங்கள் தனித் தீவுகள் ஆகும் போது, மாறுதலை விரும்பி அதனை அடைய வழிதேடும் மனம், சிவப்பாகவும், உயரமாகவும் உள்ள சொந்த மனைவியையே மாற்று ஆளாகப் பார்த்த போது வசீகரம் கொள்கிறது! எதிர்பார்ப்பிலும், விதிகளை மீறுவதிலும்தான் வசீகரம் உள்ளது என்ற கருத்தை மோகன் — பத்மா உறவு மூலம் சுஜாதா தெளிவுபடுத்தி உள்ளார்.

''உங்களுடன் பேச வேண்டும். கோவிலுக்குப் போகிறேன் வருகிறீர்களா?'' என்று பத்மா கணவனைக் கேட்பது, இருவரும் மனம் திறந்து பேசி, இறைவன் துணையுடன் வாழ்க்கையில் எதிர்நீச்சல் போடுவார்கள் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. சுஜாதா பிரச்னை தீர வழி காண்பித்திருப்பது மிகவும் பாராட்டுதற்குரியது.

— அ. ஆல்பர்ட், கன்னியாகுமரி.

மேற்கத்திய வாடை

இக்கதையில் மேற்கத்திய வாடை அடிக்கிறது. நமது நாட்டில் இன்னும் இந்த அளவுக்கு 'நாகரிகம்' பெருகவில்லை! இதுவரையில் வந்த மத்யமர் கதைகளில் வந்த நிகழ்ச்சிகளைக் குறித்து இப்படி நடக்க முடியும், நடந்திருக்கலாம் என்று கூற முடிந்தது. ஆனால் இக்கதையில் வரும் நிகழ்ச்சி முற்றிலும் அசம்பாவிதமாகத்தான் தோன்றுகிறது. 'சுஜாதா' அவர்களின் ரசிகை என்ற முறையில் மிகுந்த ஏமாற்றங்களுடன் இதை எழுதுகிறேன்.

— வி. ரத்னா, பெங்களூர் — 18.

ரசிக்கத்தக்க சொற் பிரயோகம்

இவர் அளவுக்குக் கதையில் அக்கறை எடுத்துக் கொள்பவர்கள் இப்பொழுது இல்லை. (முன்பு தி. ஜா.) நாவிதனின் செய்கைகள், 6.40 மணிக்கு விவசாயம் பேசும் வானொலி பூங்கா, அளவான வார்த்தைகள் பேசும் (மனம் விட்டுப் போன தம்பதிகளின்) யதார்த்தம் என போரடிக்காமல் நகைச்சுவையுடன் தெளித்திருக்கிறார். தொலைபேசினான், ஒய்வாளிகள், இரு சக்கரப் பிரயாணம் போன்ற சொற் பிரயோகங்கள் ஆங்கிலத்திலிருந்து நேரடித் (ரசிக்கத்தக்க) தாவல்கள்.

— ஜே. ரெங்கராஜன், திருச்சி — 2.

பனித்திரையினூடே

ரூ. 50 சிறப்புப் பரிசு பெறுபவர்:

திருமதி சத்யபாமா,
M 1/191, பேப்பர் டவுன்,
பத்ராவதி — 577 302.

மற்ற விமர்சனங்கள் ரூ. 25 சன்மானம் பெறுகின்றன.



காரிருளில் இனிப்பின் ருசி!

பேனா நட்பு என்பது விசித்திரமும், வினோதமும் நிறைந்த ஓர் இனிய அறிமுகம்! முன்பின் தெரியாத இருவர், எவ்விதப் பொருட்செலவுமின்றி ஆத்மார்த்த நட்பை — ஹோட்டல், கடற்கரை என்றில்லாமல் — காகிதத்தில் மட்டும் பரிமாறிக் கொள்வதென்பது, காரிருளில் நின்று கொண்டு இனிப்பைச் சாப்பிடுவதைப் போன்றது! சோகங்களும், துன்பங்களும் நிறைந்த மனித வாழ்வின் வேதனைகளைப் பகிர்ந்து கொள்ளத் தேவைப்படும் ஒரு துணை தமக்கென்று இல்லாத போது, பேனா நட்பு கைகொடுக்கிறது. பள்ளியில் படித்து, உடன் பணிபுரிந்து, தியேட்டரில் களித்து தான் வரவேண்டும் என்ற இலக்கை உடைத்து, நட்புக்கிருந்த விதிமுறையை முற்றிலும் நீக்கிவிட்டார் சுஜாதா! அதே சமயம் இம்முறையில் வளரும் உறவுக்கு எதிர்பார்ப்பும் மிக அதிகமானது என்பதைச் சொல்லத் தவறவில்லை சுஜாதா! ஆனால், ஆவல் மிஞ்சி அலையும் மனித மனம் இதுபோன்ற உறவின் புனிதத்துவத்தைத் தொடர்ந்து காப்பாற்றுமா என்பதுதான் கேள்விக் குறி!

— வேணாதாசன், முருங்கப்பேட்டை.

இருளோடு நடத்தும் யுத்தம்!

ஆணோ பெண்ணோ, சில நிஜங்களை நேரடியாக ஏற்றுக் கொள்ள மனம் மறுக்கிறது. முகம் தெரியாத யாரிடமோ தன் தனிமைச் சோகங்களை, பிரிவு ஆற்றாமைகளைக் காகிதம் மூலம் கொட்டித் தீர்க்கின்றது! ஆனால் அருகில் இருப்பவர்களிடம் நிரம்ப 'அழுத்தம் உள்ள' மனசாக வேஷம் போட்டுக் கொள்கிறது. இவை அனைத்துமே போலி என உணரும் போது சோகம்தான் இருமடங்காகிறது. ஆயாசம் பொங்குகிறது! எத்தனை நிதர்சனமான உண்மை... மனக்குரங்கின் பிடிவாத ஆட்டங்களுக்கு வளைந்து கொடுக்கும் 'சுய மூளை'யற்ற ஜீவன்கள், இருளோடு நடத்தும் இந்த யுத்தம் பரிதாபத்தைத்தான் ஏற்படச் செய்கிறது!

— மதுரகீதா, கும்பகோணம்.

சுபர்ப் சுதர்சன்!


அறியாமை, புரியாமை, பொறாமை இந்த ஆமைகள் நுழைந்தவுடன் குடும்பம் சீர்குலைகிறது. தலைவன் ஒரு மாறுதலுக்கு ஆசைப்பட, நண்பன் மறைமுகமாக நல்வழி காட்டுகிறான். ஒரு நல்லெண்ணத் தூதுவனாய் மனைவிக்கும், கணவனுக்குமிடையே 'சஸ்பென்சில்' உலவும் அந்த 'சுதர்சன்' பாத்திரம் சிம்ப்ளி சுபர்ப்! "சில கேள்விகளுக்கு விடை தெரியாமல் இருப்பது நல்லது என்று சில விஞ்ஞானிகளே நினைக்கிறார்கள்" என்னும் நண்பனின் உபதேச வாக்கியம் நினைவிற் கொள்ள வேண்டிய ஒன்று..." மூன்றரைப் பக்கம் கதையில் மூன்றே பாத்திரங்களை உலவ விட்டு ஒரு ஜீவனுள்ள கதையைப் படைத்த சுஜாதாவுக்கு மனம் நிறைந்த பாராட்டுக்கள்!

— வைதேகி கண்ணன், கோவை — 45.

கஸ்தூரிமான்!

15

ஆரோக்கிய ரகசியம்:
வி. என். குமாரசாமி



மயூராசனம்

கல்லீரலிலிருந்து வரும் பித்த நீரைச் சேர்த்து வைத்துக் கொள்வது பித்தப்பை. ஆகாரம் சிறுகுடலை அடையும் போது பித்த நீர், பித்தப்பையிலிருந்து சிறுகுடலுக்கு வருகிறது. மறுபடியும் கல்லீரலிலிருந்து வரும் நீரைத் தேக்கி, அடுத்த வேளை ஆகாரத்துக்கு அனுப்பப் பித்தப்பை தயாராகிறது.

பித்த நீர், நல்ல மஞ்சள் நிறமாகக் கோழி முட்டையிலிருக்கும் மஞ்சள் கருவைப் போல் தாராளமாக எங்கும் ஓடக் கூடிய தன்மை படைத்தது.

பித்தப்பை, ஆள்காட்டி விரலை விடச் சற்று நீளமாக, மேல்பாகம் கனத்தும் அடி சிறுத்தும் இருக்கும். கல்லீரலிலிருந்து பித்தப்பைக்குப் பித்த நீரைக் கொண்டு சேர்க்கவும் பித்தப் பையிலிருந்து இரைப்பையின் முடிவில் பித்த நீரைக் கொண்டு சேர்க்கவும் இரு வேறு குழாய் அமைப்புக்கள் உண்டு. சாதாரணமாக, பித்த நீர்ப் பையில் இருக்க வேண்டிய பித்த நீரின் அளவு இரண்டு அல்லது மூன்று அவுன்ஸ். இந்தப் பித்த நீரின் உற்பத்தியும் சிறுகுடலின் தொடக்கத்தில் போய்ச் சேருதலும் சரியாக இருந்து வரும் வரை ஒரு கோளாறும் இராது. கோளாறு ஏற்பட்டால் பல இன்னல்கள் உண்டாகும்.

டான்சிலில் அடிக்கடி புண் வருதல், அப்பெண்டிக்ஸில் புண் ஏற்படுதல் முதலிய காரணங்களால் பித்தப்பையைக் கிருமிகள் தொற்றக் கூடும். டைஃபாய்ட் ஜுரத்தினாலும் பித்தப்பை அயர்ச்சி ஏற்படலாம். இவை அபூர்வமாக ஏற்படுகின்றவை. ஆனால் நாம் வேளை கெட்ட வேளைக்ளில் ஆகாரம் சாப்பிட்டு வருவதால் பித்தப்பைக்கு அதிகப்படி வேலை கொடுத்து அதனைக் கெடுப்பதுதான் அதிகம்!

ஒரு தடவை சாப்பிட்ட உணவுக்கு வேண்டிய பித்த நீரைக் கொடுத்து விட்டுப் பித்தப்பை தன் சக்தியைச் சேகரித்துக் கொள்ளும் போது மறுபடி ஆகாரம் வந்தால் என்ன செய்யும்? தன் கடமையை ஆற்ற அது மீண்டும் வேலையைத் தொடங்குகிறது. இப்படியே அடிக்கடி செய்து பலவீனமடைந்து கெட்டு விடுகிறது. அதிலும் கொழுப்புச் சத்து ஆகாரமாக இருந்தால் இன்னும் கஷ்டப்பட்டு அதனை ஜீரணிக்க வேண்டியிருக்கிறது. அதனால் பித்த நீர் அதிகம் உற்பத்தியாக வேண்டும். பித்த நீர்ப் பைக்கும் கல்லீரலுக்கும் அதிக வேலை. எனவே சீக்கிரம் பழுதடைகின்றன. பித்த நீர் வரும் வழியில் குழாயில் சிறுசிறு கற்களாகக் கட்டி தட்டிப் போகிறது. சிறுமணல் பருமன் முதல், கோழி முட்டை அளவு வரை கூட பித்தக் கல் கட்டுவதுண்டு. அப்போது பித்த நீர் வரத் தடை ஏற்படுகிறது. உணவு

ஜீரணமாகாது. வலி எடுக்கும். ஆபரேஷன் செய்து பித்தக் கல்லை நீக்குவார்கள். சிலருக்குப் பித்தப் பையையே நீக்கி விடுவார்கள். வேறு சிலருக்குப் பித்தப் பைக்குப் பித்தநீர் வந்துசேர விடாமல் தடுத்து, பையை உலரச் செய்து விடுவார்கள்.

பித்தப் பையில் சிறு மணல் போல் கல் தோன்ற ஆரம்பிக்கும் போதே ஆசனம் செய்தால் பயனடையலாம். கல் வளர்ந்து பெரிதான பிறகு, ஆசனத்தினால் பயனில்லை. ஆபரேஷன் செய்ய வேண்டியது தான்.

கண்கெட்ட பின் சூரியநமஸ்காரம்செய்வதற்குப் பதில், உடம்பு ஆரோக்கியமாக இருக்கும் போதே வேளா வேளைக்கு மட்டும் அளவோடு உணவருந்தி, ஆசனங்களும் பழகி வந்தால் பித்தப் பைக் கோளாறே எதுவும் ஏற்படாது.

பித்தநீர்க் கோளாறின் இன்னொரு வடிவம்தான் ஜாண்டிஸ் அல்லது மஞ்சள் காமாலை. ரத்தத்தில் பித்தநீர் கலப்பதால் கண்கள் மஞ்சள் நிறமாகத் தோன்றும். உடலிலும் மஞ்சள் நிறம் பரவும். மயக்கமும் கிறுகிறுப்பும் உண்டாகும். இதை மாந்திரீகத்தால் போக்கலாம் என்பது குருட்டு நம்பிக்கை. மாந்திரீகத்தை விட, அதனுடன் கூறப்படும் பத்தியம்தான் நோயைக் குணப்படுத்துகிறது. காரம், புளி, உப்பு, கடுகு, எண்ணெய் ஆகிய ஏதும் சேரக் கூடாது. ஏடு நீக்கிய தயிர் அல்லது மோர் சாப்பிடலாம் என்பான் மாந்திரீகன். இந்தப் பத்தியத்துடன் மஞ்சள் கருசலாங்கண்ணிக் கீரையைத் தினமும் ஆகாரத்துடன் சேர்க்கலாம். இந்தக் கீரையில் உள்ள இரும்புச் சத்து, ரத்தத்திலிருந்து பித்தநீரை அகற்றி, சிவப்பு அணுக்களை விருத்தி செய்து, சோகையைப் போக்குகிறது.

மயூராசனம், ஓய்ந்து போன பித்தப் பை, கல்லீரல், பித்தப்பைக் குழாய் முதலியவற்றுக்குப் புத்துயிர் அளிக்க வல்லது எனில், ஆரோக்கியமாக இருக்கும் போதே மயூராசனம் செய்வது அவற்றை எவ்வளவு நேர்த்தியாக வைத்திருக்கும் என்று கூறவும் வேண்டுமா? மயூராசனம் ஒன்றே மஞ்சள் காமாலை, இரத்த சோகை, அஜீரணம், தலைவலி, மயக்கம், சோம்பல், வயிற்று வலி, நெஞ்சு எரிச்சல், மலச்சிக்கல் முதலியவை வராமல் தடுத்து ஆரோக்கியம் காக்கும் சஞ்சீவி.

மயூரம் என்பது சமஸ்கிருத வார்த்தை. மயில் என்று அர்த்தம். மயூராசனம் என்றால் மயிலைப் போன்ற தோற்றமுடைய ஆசனம். மயில் தன் நீண்ட தோகையுடன் கூடிய உடலை இரண்டு கால்களால் தாங்கியிருப்பதைக் கவனித்திருப்பீர்கள். நமது இரு கைகளும் கால்கள் போல் உடலைத் தாங்க, கால்கள் இரண்டும் தோகையாக நீண்டிருக்கும் நிலைதான் மயூராசனம்.

விரிப்பில் முழங்கால்களை மடித்து, முகம்மதியர்கள் தொழுவதைப் போல் மண்டியிட்டு அமரவும். பிறகு இரண்டு கைகளையும் சேர்த்து முழங்காலுக்கு ஒரு சாண் தள்ளித் தரையில் பதிய வைக்கவும். இரண்டு சுண்டு விரல்களும் சேர்ந்தாற் போல் அருகருகே இருக்க வேண்டும். விரல்கள் முழங்கால் பக்கமாகத் திரும்பி இருக்க வேண்டும். முழங்கை மடித்து முழங்கையை வயிற்றில் ஊன்றவும். தலையும் புஜமும் முன்னுக்கு வர, உடல் பளுவை முழங்கை மேல் தாங்கும்படி செய்ய வேண்டும். இப்படிச் செய்யும் போது முழங்கால்கள் தாமாகவே தரையிலிருந்து மேலே கிளம்பும். கால் பெரு விரல்கள் மட்டும் தரையில் இருக்கும். உடல் இன்னமும் சற்று முன்னுக்கு வந்தால் அவ்விரல்களும் தரையிலிருந்து மேலே கிளம்பும். இப்படிச் செய்து படத்தில் உள்ள நிலைக்கு வரலாம். மூச்சைச் சௌகரியம் போல் இழுக்கவும் விடவும் செய்யலாம். முடிந்த மட்டில், அதாவது பத்துப் பதினைந்து வினாடிகள் முதல், அரை நிமிஷம் அல்லது ஒரு நிமிஷம் வரை இந்த நிலையில் இருக்கலாம். பிறகு கால் கட்டை விரல்களை முதலில் தரையில் ஊன்றி, அப்புறம் முழங்கால்களையும் ஊன்றித் தலையை நிமிர்த்திக் கைகளைத் தரையிலிருந்து எடுத்து இளைப்பாறவும். இம்மாதிரி மூன்று முதல் ஆறு தடவை செய்யலாம்.

இதுவரை கூறிவந்த ஆசனங்களைவிட இது கஷ்டமானது. இதைப் பழகும் போது என்ன சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும், என்ன முன்னெச்சரிக்கைகள் தேவை என்பனவற்றை அடுத்த வாரம் விவரிக்கிறேன். அவற்றையும் கவனமாகப் படித்துப் பார்த்த பிறகு இந்த ஆசனம் செய்ய ஆரம்பிக்கலாம்.

(தொடரும்)

படம்: உத்ரா.

''நம்ம காதலுக்குப் போர்க்கால நடவடிக்கையா ஒரு முடிவு சொல்லுங்க...''

''நான் வேணும்னா புறமுதுகு காட்டி ஓடிடட்டா...?''

— மணியன் தர்மலிங்கம்.



அப்படியா பிரதமரே?!

தேசிய ஒளிபரப்பில் 'கான்வர்சேஷன்' என்றொரு நிகழ்ச்சி. ஜே. ஆர். டி. டாடாவைப் பேட்டி கண்டார்கள். முதல் கேள்வியே இப்படி இருந்தது: ''மொரார்ஜி தேசாய் பிரதமரானவுடன் ஏர் இந்தியா தலைமைப் பொறுப்பி லிருந்த உங்களை வெளியேற்றினாரே, அப்போது எப்படி உணர்ந்தீர்கள்?''

அடுத்தது:

''உங்கள் காலத்தில் இதுபோலப் பலரை நீங்கள் வெளியேற்றி இருப்பீர்கள். அப்போது என்ன முறையைக் கடைப்பிடித்தீர்கள்?''

இப்படிப் பல கேள்விகள். உணர்ச்சி வசப்படாமல் பொறுமையாகப் பதில் அளித்தார் டாடா. கூடவே பல விவரங் களையும் வெளியிட்டார்.

தொழிலாளர்கள் எட்டு மணிநேரம் தான் வேலை செய்ய வேண்டும் என்கிற முறையை நூறாண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் முதல் முதலாக அறிமுகப்படுத்தியது ஜாம்ஷெட்பூரில் அமைந்துள்ள டாடா நிறுவனம்தானாம். சொன்னார்.

சோஷலிஸம் பற்றிய அவருடைய மதிப்பீடு சற்றுச் சூடாகவே இருந்தது. நேருவின் காலத்திலிருந்து இன்று வரை நாட்டு நடப்புகள் பற்றிய அவருடைய கருத்துக்கள், விளைவு களைப் பற்றிக் கவலைப்படாத பதில்க ளாக வெளிப்பட்டன.

பேட்டியளிப்பவரின் எண்ணங்களை, மன உணர்வுகளை, அவர் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளின் உண்மைப் பின்னணிகளை வெளிக்கொணரப் பயன் பட்ட கேள்வி — உத்திகளைப் பாராட்டிப் பின்பற்றலாம்.

மகாபாரதம் முடிவடைந்து விட்டது. தொண்ணூற்று மூன்று வாரங்கள் ஞாயிற்றுக்கிழமை காலை நேரங்களில் அங்கே இங்கே நகர முடியாமல் கட்டிப் போட்டு வைத்திருந்தது பெரிய சாதனை.

ஆரம்பத்திலிருந்தே அதிகாரிகளின் குறுக்கீடுகள். ''வசனம் எழுதுகிறவர் ஒரு முஸ்லிம் என்பதால் மத உணர்வுகள் பாதிக்கப்படக் கூடும். அதனால் அவர் கூடாது'' என்பதிலிருந்து, பொதுத் தேர்தல் சமயத்தில், ''ஆரம்பக் காட்சியில் வரும் காலச் சக்கரத்தை நீக்கிவிட வேண்டும். காரணம், அது ஜனதா தளத்தின் தேர்தல் சின்னத்தை நினைவுபடுத்திவிடும்'' என்பது வரை. முந்தைய அரசின் இத்தகைய குறுக்கீடுகளைச் சமாளித்து முடிவில் வெற்றி கண்டுவிட்டார் பி. ஆர். சோப்ரா. ஞாயிற்றுக்கிழமைக் காலை நேரங்கள் வெறுமையாகத் தோன்றப் போகின்றன.



* வி. பி. சிங்: எதிர்க்கட்சிகளுக்கு இடமா...?

அண்மையில் அலகாபாத் நிகழ்ச்சி யொன்றில் பிரதமர் கலந்து கொண்டு பேசியதை ஆங்கிலச் செய்தி அறிக்கை யில் காண்பித்தார்கள்.

''அடுத்த ஆண்டுத் தொடக்கத்தில் வானொலிக்கும் தொலைக்காட்சிக்கும் தன்னாட்சி வந்துவிடும். இப்போதே எதிர்க்கட்சியினருக்கு நிறைய இடம் கிடைத்து வருகிறது'' என்றார் பிரதமர். சென்னை நிலைய நிகழ்ச்சிகளைப் பார்க்கும் நேயர்கள் கேட்கக் கூடிய ஒரு கேள்வி: ''அப்படியா?''

வழக்கம்போல் விம்பிள்டன் போட்டி களுக்கு முக்கியத்துவம் அளித்து ஒளி பரப்பினார்கள். இதுபோன்ற ஒரு சர்வ தேசப் பரபரப்புடைய நிகழ்ச்சி ஒளி பரப்பப்படும் போதுதான் டீ. வி., விண் கோள்கள், இவை தொடர்பான விஞ் ஞான முன்னேற்றங்கள், இவற்றைச் சாதித்த விஞ்ஞானிகளுக்கு நன்றி நம் உள்ளத்தில் பொங்குகிறது! அதுவும் கரங்களில் வெற்றிக் கோப்பை யுடன் கன்னங்களில் கண்ணீர் வழிய மார்டினா சிரித்ததைக் காணக் கொடுத்து வைத்ததே!

— கிச்சாமி



* டாட்டா: அச்சமற்ற பேட்டி.

அமைச்சரின் ஆசி பெற்றவன்

அகிலா கார்த்திகேயன்

செயற்பொறியாளர் செங்கல்வராயன் கடுப்பு மேலிட 'காலிங் பெல்'லை அழுத்தினார். அதே கடுப்பைக் காண்பித்தபடி ப்யூன் கந்தசாமி உள்ளே நுழைந்ததும், அவனிடம் பவ்யமாக, ''கொஞ்சம் மானேஜரைக் கூப்பிடேன்'' என்றார்.

''சார் கூப்பிட்டீங்க போலிருக்கு'' என்றபடி மேனேஜர் சுப்பராயன் வந்தார்.

''என்னய்யா இவ்வளவு வருஷ சர்வீஸிலே இதைக் கூடவா பண்ண முடியலே!''

''என்ன சார் பண்ணட்டும்! அந்தப் புதுப் பையன்கிட்டே ஒப்பனாவே சொன்னேன். உனக்கு ரீபோஸ்டிங் வேணும்னா ஈ.ஈயைப் போய் வீட்ல பாருன்னு...''

''ஆமாம்! நேத்து. 'உங்களை வீட்ல வந்து பார்க்கச் சொன்னார் மேனேஜர்'னு சொல்லிட்டு வந்தவன் ஏதோ வண்டலூர்ல வாயில்லா ஜீவனைப் பார்த்துட்டு நிக்கறா மாதிரி நின்னான். என் பெண்டாட்டி ஒரு விவஸ்தை கெட்டவ... இவன் ஏதோ நீட்டப் போகிறான்'னு நெனைச்சு, டிபன் காப்பியெல்லாம் வேறு கொடுத்து உபசாரம் பண்ணினா. எல்லாத்தையும் தின்னு ஏப்பம் விட்டுட்டு 'ரொம்ப தேங்க்ஸ் சார்! டிபார்ட்மெண்ட்ல சேர வர்ற புது ஆபீஸர்களை வீட்டுக்குக் கூப்பிட்டு விருந்து வைக்கிற உங்களைப் போல ஆபீஸர் கிட்டே முதல் முதலா வேலை செய்யற பாக்கியம் கிடைச்சதுல சந்தோஷம்'னு சொல்லி வெறுப்பேத்திட்டுப் போயிட்டான்யா...! வீட்ல போய்ப் பார்க்கறது, கவனிக்கறது, இதுக்'கெல்லாம் அர்த்தம் புரியாம டிபார்ட்மெண்ட்லே எப்படிக் குப்பை கொட்டப் போறானோ?''

''வேற வழியே இல்லை; ரீபோஸ்டிங் போட்டுக் கொடுத்திடலாம்னு சொல்லுங்க.'' — சுப்பராயன் இவர் வாயைப் பிடுங்கினார்.

''அட நீங்க ஒண்ணு. எந்த எம்.எல்.ஏ. மினிஸ்டர் சிபாரிசும், தொந்தரவும் இல்லாம, நாம இஷ்டத்துக்கும் ஒரு இடத்துக்கு ரீபோஸ்டிங் கொடுத்திடலாம்னா அது சுடுகாடுப்பட்டிதானேய்யா...? அந்த ஒரு இடத்தை வைச்சு ஒரு இழு இழுத்தாத் தான்யா உண்டு. இல்லேன்னா பொண்டாட்டி கழுத்தறுப்பாய்யா'' என்றவர் தான் அளவுக்கு மேல் பேசி விட்டதை உணர்ந்து ''சரி என்ன செய்யலாம்'' என்றார்.





"அதுதான் இழுத்தடிக்கலாம்னு சொல்லிட்டீங்களே!"

. "எல்லாத்துக்கும் என்னையே இழுத்து விடுமய்யா" என்று அலுப்பை அள்ளித் தெளித்து மானேஜரை அனுப்பினார்.

பின்னே இருக்காதா சொல்லுங்கள்! முன்னெல்லாம் ஏப்ரல், மே, ஜூன் மாதங்கள் நமக்குக் கோடை காலமென்றால் செங்கல்வராயனுக்குக் கொடை காலமாக இருந்தது. தம் கீழ் வேலை பார்க்கும் அலுவலர்களை அங்குமிங்குமாக மாற்றுவார். ஆட்டைத் தூக்கி மாட்டில் போடுவார். மாட்டைத் தூக்கி மாடியில் கட்டுவ்வார். யாரை எங்கெங்கு தட்ட வேண்டுமென்று தெரிந்து வைத்துச் சூதாடுவார். தங்களுக்குப் பிடித்தமான இடத்துக்கு மாற்றலாகிப் போக அலுவலர்கள் ஆடிக் காற்றாய் அலை மோதுவார்க்ள். அம்மி நகர்ந்தாலும் இவர் இம்மியும் நகரமாட்டார். கவரை நீட்டினால் மட்டும் கை நீண்டு கையெழுத்திடும். இப்படி மாற்றல் மாதங்கள் மகசூல் மாதங்களாக இருந்தது ஒரு காலம். ஜூலையில் வரும் 'மேரேஜ் டே' அன்று ஸ்பெஷலாய்க் கணவரைக் கவனிப்பாள் கமலா.... சில ஆயிரங்கள் செலவில் கவனிக்கவும் படுவாள்.

ஆனால், இப்போது எல்லாம் போயிற்று! அரசாங்க ஊழியர்களின் மாற்றங்களில் ஊழல் செய்து அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்வதைப் பொறுக்க மாட்டாத ஆட்சியாளர்கள், ஊழலை அதிகாரிகளிடமிருந்து ஓட ஓட விரட்டியதில் அது போக்கிடமில்லாமல் தங்களிடமே வந்து தஞ்சமடையுமென்றா கண்டார்கள்!

தங்கள் தலைவர் வேறு அடிக்கடி 'ஆட்சியில் பல மாறுதல்கள் செய்வோம்' என்று முழங்கியதைச் சூட்சுமமாகப் புரிந்துகொண்டு, அனைத்து அரசாங்க அலுவலர்களின் மாற்றல் சமாசாரங்களையும் தாங்களே இழுத்துப் போட்டுக் கொள்ள ஆரம்பித்திருந்தனர். கவனிப்புக்குத் தக்கபடி கடமை ஆற்றினர். இதனால் அதிகாரிகள் பிழைப்பில் மண் விழுந்து. அவர்கள் ஸ்பான்சர் கிடைக்காத டீ.வி. தயாரிப்பாய்த் தவிக்க நேர்ந்தது.

அப்படிப்பட்ட தவிப்பில்தான் செங்கல்வராயன் இருந்தார். ஆட்சியாளர்கள் அப்படி ஒன்றும் மோசமானவர்களல்ல. காஷ்மீர் கவர்னர் போஸ்ட்டாக யாருமே சீந்தாத சில செக்ஷன்களின் போஸ்டிங் உரிமைகளை, உரிய அதிக்ாரிகளே தாராளமாய் உபயோகிப்பதற்கு அவர்கள் தடையாய் இல்லை. அப்படி சுயேச்சை அதிகாரம் பெற்ற ஒரு செக்ஷன்தான் சுடுகாட்டுப் பட்டி! புதிதாக வந்த பையனை அந்த செக்ஷனுக்குப் போடுவதால் செங்கல்வராயனுக்கு எந்தப் பிரச்னையும் இல்லைதான். இருந்தும் கல்லில் நார் உரிக்க ஒரு நப்பாசை.

அவர் இழுத்தடித்ததில் ஒன்றும் புரியாமல் பையன் புறப்பட்டுப் போய் விட்டான். இரண்டு நாட்களாக ஆளைக் காணோம்.

மூன்றாம் நாள் பையன் நரிமுகத்தில் விழித்துவிட்டு வந்தான்.

"சார்" என்றபடி உள்ளே நுழைந்தவனை ராஜபாளையமாய் வரவேற்றார். "என்னய்யா! எங்கேயா போய்த் தொலைஞ்சே இரண்டு நாளாய்? ரீபோஸ்டிங் வேணாமா....? சொல்றதையும் புரிஞ்சு தொலைச்சுக்க மாட்டேங்கறே."

"மெட்ராஸ் வரைக்கும் போயிட்டு வந்தேன் "சார்" பையன் சொன்னதும் ராஜபாளையத்தின் வால் சற்றுச் சுருண்டது.

"மெட்ராஸா... எதுக்கய்யா?"

"செக்ரடேரியட்ல எங்க மாமா..." என்று ஆரம்பித்ததும் எல்லையைக் கடந்து வந்து மாட்டிக் கொண்ட தெரு நாயாய் அதிர்ந்தார் செங்கல்வராயன்.

"உன் பேரு என்ன சொன்னே...? ஆங் சீனிவாசன், உட்கார்ந்து பேசேன்" என்றவர், சற்று இடைவெளி விட்டு "மினிஸ்டரைப் பார்த்தியோ?" சந்தேகமாக வினவினார்.

"உங்களுக்கு எப்படி சார் தெரிஞ்சுது. மாமாதான் கூட்டிட்டுப் போனார், மினிஸ்டரைப் பார்க்க" என்றான் சீனிவாசன்.

"ஓகே... நீ போய் மேனேஜரை அனுப்பு. ரீபோஸ்டிங் போட்டுத் தரேன்" என்று சொல்லி அவனை அனுப்பி வைத்தார்.

நான்கு நாட்கள் நகர்ந்தன. அன்று செங்கல்வராயனின் திருமண நாள், சச்சரவு காணாத சட்டசபைக் கூட்டத் தொடராய்க் கசந்தது. கையில் ஓட்டமில்லாததால், கூட்டமில்லாத ஒரு படத்திற்குக் கமலாவை அழைத்துச் செல்லலாமென்று ஆபீஸில் அசை போட்டபடி அமர்ந்திருந்தவரை டெலிபோன் அழைத்தது. 'கால் ஃப்ரம் கமலா' என்று நினைத்து எடுத்தவரை "கால் ஃப்ரம் மெட்ராஸ்" என்று மிரட்டியது.

"யார் பேசறது? செங்கல்வராயனா?" தலைமை அதிகாரி லைனில் 'லையனா'க் கர்ஜித்தார்.

சப்த நாடிகளும் அடங்கியதில் செங்கல்வராயனிடம் சப்தம் எழவில்லை. "உம்... எஸ் சார் நா..." — சரிகமபதநி வாசித்தார்.

"நாசமாப் போக! ஏன்யா இப்படி பயந்து சாவற...? யாரைக் கேட்டு அந்தப் பையனுக்குச் சுடுகாட்டுப்பட்டி ரீபோஸ்டிங் கொடுத்தே?"

விழித்தார் செங்கல்வராயன்.

நிஜமான புரட்சிக் கவிஞர்!

ஆந்திர மாநிலத்தில் 'திகம்பர கவுலு' என்ற புரட்சிக் கவிஞர், தாம் எழுதிய மூன்று கவிதை நூல்களைப் புரட்சியாக வெளியிட்டார்.

முதல் நூலை நடு இரவில் ஒரு ரிக்ஷாக்காரனைக் கொண்டு வெளியிடச் செய்தார்.

இரண்டாவது நூலை வெளியிட்டவர், ஒரு ஹோட்டல் சர்வர்.

மூன்றாவது நூலை ஒரு பிச்சைக்காரனை வைத்து வெளியிட்டார்.

— எஸ். முகம்மது யூசுப்.

''என்னய்யா... பதிலைக் காணோம்?'' எதிர்த்திசையில் ஒலி பலமாக எழுந்தது.

''சார். அது வந்து டிவிஷன்ல வேற இடம் காலி இல்லே.. அதனால'' என்று இழுத்தவரை ''ஏன் உன் மரமண்டை காலியாத்தானே இருக்கு...'' என்று அநாகரீகமாய் அடுத்த முனை அடக்கியது. தொடர்ந்து, ''சுடுகாட்டுப்பட்டிலே பை எலக்ஷன் வருதுன்னு தெரியுமில்லே. இந்த வருஷம் ஹெவி அலர்ட்மெண்ட். என்னைப் போடு உன்னைப் போடுன்னு மினிஸ்டர்கிட்டே ஆயிரம் பேர் மோதறானுங்களாம். அதுலே செலக்ட் பண்ணி ஒரு கேன்டிடேட்டை ரெகமண்ட் பண்ணியிருக்கார். மந்திரி என்ன சொல்றதுன்னு முந்திரிக் கொட்டையாட்டம் நீ எந்தப் பையன்கிட்டேயோ காசை வாங்கிட்டு போஸ்டிங் போட்டுக் கொடுத்துட்டே... மினிஸ்டர்கிட்டே யாருய்யா பாட்டு வாங்கறது? மினிஸ்டர் பி.ஏ. பேசுவாரு நீயே பதிலைச் சொல்லு...''

தொலைபேசி ஓய்ந்தது. செங்கல்வராயன் அழுத்திப் பிடித்தும் மார்பில் லப்டப் ஓட்டம் ஓயவில்லை. உடம்பு வேர்த்து வடிந்தது. மந்திரியிடம் என்ன சொல்வதென மலைத்தார். மேனேஜரைக் கூப்பிட்டார்.

''என்னய்யா... ஒண்ணுமில்லாத சமாசாரத்துக்கு இப்படி ஆயிடுச்சு!'' என்று அங்கலாய்த்தவரிடம்,

''ஏன் சார்... அந்தப் படத்துக்கும் டிக்கட் கிடைக்கலையா?'' என்று சமயம் தெரியாமல் சதாய்த்தார் மேனேஜர்.

''புடலங்காய்! படம்தான் ஒரு கேடா...! ஒரு உதவாக்கரை செக்ஷனுக்கு ரீபோஸ்டிங் கொடுத்ததுக்கு என்னமா கொதறுகிறானுங்க!'' மெலிதாகக் கோபம் வெளிப்பட்டது. ''அந்த ஓட்டை செக்ஷனுக்கும் மினிஸ்டர் சொல்ற ஆளைத்தான் போடணுமாம்... பையன் ஆர்டரை கேன்சல் பண்ணிட வேண்டியதுதான்! ஆளை அனுப்பி அந்தப் பையனைக் கூட்டிட்டு வரச் சொல்லுங்க'' என்று உத்தரவிட்டார்.

''பையன் டவுன்லதான் எங்கேயோ ரூம் எடுத்துட்டுப் போயிட்டு வர்றான்.. இதோ ஆளை அனுப்பறேன்... ஆனால் ஒரு எடத்துக்கு போஸ்டிங் போட்ட ஆளை இரண்டு வருஷம் மாத்தக் கூடாதே சார்! ஜி. ஓ. இருக்கே!'' என்று குண்டைத் தூக்கிப் போட்டார் மானேஜர்.

''அப்ப என்னதான் பண்ணலாம்'' துடிதுடித்தார் செங்கல்வராயன்.

''நீங்க ஏன் சார் பயப்படணும். சீனிவாசன் கூட மினிஸ்டர் ஆளுதானே... அன்னிக்கு மாமாவோட செகரடேரியட் போய்ப் பார்த்துட்டு வந்ததாச் சொல்லலையா..? அவனை விட்டே மினிஸ்டர்கிட்டே சொல்லச் சொல்லலாம் சும்மா இருங்க.'' — சமாதானப்படுத்தினார்.

''அதானே...! அதுவும் சர்தான்'' என்றார் செங்கல்வராயன் மூச்சு சற்று லேசானவராய்.

''சார்....!'' உள்ளே வந்தான் சீனிவாசன்.

''உன் ஆர்டருக்கு வேட்டு வைச்சுடு வாங்க போலிருக்கு'' என்று பயமுறுத்தலோடு செங்கல்வராயன் ஆரம்பித்ததும் அரியானா வேட்பாளராக அரண்டு போய் விட்டான்.

''என்ன சார் சொல்றீங்க? இது எனக்கு ஃபர்ஸ்ட் போஸ்டிங். கேன்சல் ஆனா சென்டிமெண்டலா கஷ்டமா இருக்கும்.வேற எந்த எடத்துக்குப் போய் அலையறது சொல்லுங்க?''

''எதுக்குத் தம்பி பயம், மினிஸ்டரைக் கையில வைச்சுக்கிட்டு? உங்க மாமாவோடு போய் மினிஸ்டரைப் பார்த்து ஸ்ட்ராங்கா இன்னொரு வாட்டி சொல்லிட்டு வந்துடு. எங்களையும் மேலிடத்திலிருந்து குடையாத இருப்பானுங்க'' — மேனேஜர் இடையில் புகுந்தார்.

''மினிஸ்டரா?'' சீனிவாசன் செந்தில் முழியாய் முழித்தான். பிறகு மொடாக்குடியன் வாயில் மலிவு விலை மதுவாக, மெதுவாய் ஞாபகம் வந்தவனாய் ''ஓ! அதுவா சார்... உங்ககிட்டேர்ந்து ஆர்டர் வாங்க இரண்டு மூணு நாளாகும்னு மேனேஜர் சொன்னதாலே, மெட்ராஸில எங்க மாமாவைப் பார்த்து வேலை கிடைச்சதைச் சொல்லிட்டு ஆசிர்வாதம் வாங்கலாம்னு போனேன். அவரு செகரடேரியட் லேகான்டீன் இருக்கே, அதிலே சர்வரா இருக்காரு. தினமும் சாயங்காலம் பீச்சிலே சுண்டல் விப்பாரு. அன்னிக்கு அவருதான் 'பீச்சில் மினிஸ்டரோட மீட்டிங்; சுண்டல் நல்ல சேல்ஸ் ஆகும் நீயும் வா'ன்னு கூட்டிட்டுப் போனாரு. அப்பத்தான் மினிஸ்டரைப் பார்த்தேன். நீங்களும் மினிஸ்டரைப் பார்த்தாயான்னு கேட்டதுக்கு ஆமான்னு சொன்னேன்'' கோஷ்டிச் சண்டை எதிர்க்கட்சியாய் அசடு வழிந்தான்.

மொட்டையாக 'அஸ்வத்தாமா அவுட்' என்றதும் அம்பேலான துரோணர் கதையாய், செங்கல்வராயன் ஆடி விழுந்தார்.

கோஷ்டிப் பூசலில் முன்னணி வகிப்பது எந்தக்கட்சி?

* எஸ். சக்திவேல், சிதம்பரம்.

? மு. க. ஸ்டாலின் டி. வி. தொடரில் நடிக்கிறாராமே?



* டி. வி. தொடரில்...

! திரைப்படத்தை விட்டால் டி. வி. தான் இன்று பிரபலமடையக் குறுக்கு வழி. பேரும் புகழும் பெறுவது என்பது வேறு! அதற்குத் தேவையான திறமையும் தகுதியும் ஸ்டாலினிடம் வளர வாழ்த்துவோம்.

---

* எம். குணசேகரன், வேலாயுதம்பாளையம்.

? 'இலங்கைப் போராளிகளுக்குத் தமிழகத்தில் சிகிச்சை அளிப்பதை எதிர்ப்பவர்கள் தமிழர் பண்பாடு இல்லாதவர்கள். மனித நேயத்தையே எதிர்ப்பவர்கள்' என்கிறாரே, கருணாநிதி?

! கலைஞரிடமும் நம்மிடமும் உள்ள அந்த மனிதாபிமானத்தை விடுதலைப் புலிகள் பிரதிபலிக்கவில்லையே. அவர்கள் மனிதாபிமானத்தை அறவே இழந்தவர்களாகவும், நம்பவே முடியாதவர்களாகவும் அல்லவோ தங்கள் செயல்களால் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் எச்சரிக்கையுடன் செயல்படுமாறு முதல்வரைக் கேட்டுக் கொள்கிறோம்.

---

* மல்லிகை மன்னன், மதுரை.

? 'ஆபாசம் இல்லாதவை மட்டுமே இலக்கியம் என்றால் இருக்கிற இலக்கியங்கள் அத்தனையையும் கொளுத்திவிட்டு ஆணும் பெண்ணும் தூர நின்று குளிர்காய வேண்டியதுதான்' என்கிறாரே, வைரமுத்து?



* ஆபாசமற்ற இலக்கியம்...

! ஆபாசம் இருக்கிறதா இல்லையா என்பது அல்ல அளவு கோல். இலக்கியம் இருக்கிறதா என்பதுதான் கவனிக்க வேண்டிய விஷயம். சில இலக்கியங்களில் ஆபாசம் தலைகாட்டுகிறது என்பதால் ஆபாசம் எழுத அதுவே லைசென்ஸ் வழங்கிவிட்டதாக யாரும் எண்ணக் கூடாது. அத்தகைய சிந்தனையால் மிஞ்சுவது ஆபாசம் மட்டுமே! 'இலக்கு உள்ளது இலக்கியம்' என்று விளக்கம் அளித்தவர் கலைஞர். எனவே, இலக்கு என்ன? யார் எழுதியது? யாருக்காக எழுதப்பட்டது? ரசனையை அது உயர்த்துமா, தாழ்த்துமா? என்பதையெல்லாம் கவனித்து, ஓர் எழுத்தை, அல்லது பாடலை அல்லது காட்சியை எடைபோட வேண்டும்.

---

* சமநோக்கு...



* எஸ். என். ராகவன், பெல்லாரி.

? மறைந்த நாவலாசிரியர் இர்விங்வாலஸின் நாவல்களை நீங்கள் படித்ததுண்டா?

! உண்டு. அதில் திட்டமிட்டுப் புகுத்தப்பட்ட ஆபாசப் பக்கங்களைத் தவிர ஆராய்ச்சித் திறனும் இலக்கிய ஆற்றலும் உண்டு என்பதைக் கண்டு மகிழ்ந்திருக்கிறேன். சில புத்தகங்களில் ஆபாசத்தைத் தவிர வேறு ஒன்றுமில்லை என்பதை உணர்ந்து ஏமாற்றமும் அடைந்திருக்கிறேன்!

---

* டி. சீனிவாசன், சென்னை.

? 'எதிரிகளை ஒழித்துக் கட்ட நமக்கு ஆயிரம் மணி நேரமே போதும்' என்று புதிய ராணுவத் தளபதி ரோட்ரிக்ஸ் கூறுகிறாரே?

! மக்கள் பதற்றமடையாமலிருக்கவும் தன்னம்பிக்கை பெறவும் தளபதி, தைரியமூட்டும் வார்த்தைகளைப் பேச வேண்டியதுதான். ஆனால் அப்படிப் பேச வேண்டிய அளவுக்கு இன்று சூழ்நிலை மோசமாகி

விடவில்லை. இப்போதைக்கு நாவடக்கமே நல்லது.

---

* தேர்தல் வெற்றி



* ராஜேந்தர் ப்ரியன், திருச்சி.

? 'நாங்கள் இந்தியாவை எதிர்த்துக் கொள்ள மாட்டோம், இந்தியாவின் தார்மிக ஆதரவு எங்களுக்குத் தேவை' என்கிறாரே தளபதி கிட்டு?

! தார்மிக ஆதரவு தரப்பட்ட போது அதை எங்கே பெற்றுக் கொண்டார்கள்? எதிர்த்துக் கொள்ளத்தானே செய்தார்கள். தாக்குதலில் புலிகளாக விளங்கும் அவர்கள், பிரசார தந்திரத்தில் நரிகளும் கூட. சமயத்துக்கு ஏற்றவாறு பேசுவார்கள். சக்திகளைத் திரட்டிக் கொள்ள, புது பலம் பெற அவர்களுக்கு இன்று அவகாசம் தேவை. அதனால் இப்போது அதற்கேற்பப் பேசுகிறார்கள். ஆனால் ஏற்கெனவே புலிகள் காட்டிய பிடிவாதத்தின் நிகர விளைவு நூற்றுக் கணக்கில் உயிர்ப் பலிகளும் ஆயிரக்கணக்கில் அகதிகள் வருகையுமே. இந்தியாவின் தார்மிக ஆதரவை ஏற்று, அவர்கள் வன்முறையைக் கைவிட்டு, ஜனநாயகப் பாதைக்குத் திரும்பியிருந்தால் சிங்களவர்களுக்கு இணையாக ஈழத் தமிழர்களுக்கும் எல்லா விதங்களிலும் சம உரிமைகளைப் பெற்றுத் தருவது இந்தியாவுக்குச் சுலபமாகியிருக்கும்.

---

* பணமும் குணமும்



* ஏ. எம். சர்தார், விருத்தாசலம்.*

? பணமும் குணமும் சேர்வது எப்போது?

! அபூர்வமாகத்தான் என்றாலும் அத்தகைய சிலரை எனக்குத் தெரியும். உதாரணத்துக்கு ஏவி. எம். ஓர் எழுத்தாளரின் குடும்பத்துக்கு உதவ நிதி திரட்டிக் கொண்டிருந்த போது ஏ. வி. மெய்யப்பன் அவர்களை நேரில் சந்தித்தேன். ஒரு கணிசமான தொகை தந்தார். மறுநாள் தபாலிலும் ஒரு காசோலை வந்தது. மறதிதான் காரணமாயிருக்கும் என்ற எண்ணத்தில் மீண்டும் அவரைச் சந்தித்துத் தபாலில் வந்த காசோலையைத் திருப்பித் தந்தேன். அவர் சொன்னார்: ''நீங்கள் என்னைச் சந்திக்க வருவதற்கு முதல் நாள் உங்கள் சுற்றறிக்கை வந்தது. அதைப் பார்த்ததுமே காசோலை அனுப்பி விட்டேன். மறுநாள் நேரில் வந்து கேட்ட போது மறுக்க மனமில்லாது கொடுத்தேன். கொடுத்ததைத் திரும்பப் பெறும் பழக்கமில்லை. இரண்டையுமே வைத்துக் கொள்ளுங்கள்!'

---

* ரேவதிப்ரியன், ஈரோடு.

? தமிழகத்தில் அண்மைக்காலமாகக் கோஷ்டிப் பூசலில் முன்னணி வகிப்பது எந்தக் கட்சி?

! ரொம்பக் காலமாகவே அந்த முன்னணி இடம் காங்கிரஸுக்குத்தான். அ. தி. மு. க. என்ன முயன்றாலும் அதனிடத்தை ஆக்கிரமித்துக் கொள்ள முடியாது!

---

* கே. வி. நாதன், நெய்வேலி.

? தற்சமயம் ரஷ்யாவில் என்ன குழப்பம்?

! எல்லாம் பழைமைவாதிகளுக்கும் புதுமை விரும்பிகளுக்கும் இடையேயான பிரச்னைதான். பழையன கழிதலும் புதியன புகுதலும் இன்றியமையாதது என்பதை கோர்பசேவின் தேர்தல் வெற்றி மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறது.

---

* டி. சந்திரன், ஈரோடு.

? எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்புத் தமிழ்ப் பாடநூல்களைப் படித்தீர்களா? ஏதோ ஓர் ஆதிக்கம் புகுந்தது போல் தோன்றுகிறதே?

! ஆத்திகத்தையும் நாத்திகத்தையும் தாம் சமநோக்கில் பார்ப்பதாகக் கலைஞர் அண்மையில் கூறினார் அல்லவா? அந்தச் சம நோக்கின் ஆதிக்கமாகத்தான் இருக்கும்!

---

* ரூ. 20 பரிசு பெறுபவர்:

ஏ. எம். சர்தார்,
108/46, ஆலடி சாலை,
விருத்தாசலம் — 1.

அரசியல்வாதிகளுக்கு 'ஐடியா' கொடுக்கிறீர்களே!

* நிலக்கோட்டைத் தொகுதியில் 'கள்ளச் சாராயக் கடையையும், 'சாராயம் கேட்கும் போலீஸ்காரரையும் துணிச்சலாகப் படமெடுத்த போட்டோகிராப ரையும் எம். எல். ஏ.வைத் தர்மசங்கடமான கேள்விக் கணைகளை வீசித் திணறடித்த கல்கி நிருபரையும் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. இவ்விரு வரும் தொகுதி தோறும் உலா வருவார்களாக!

சென்னை — 21, அ. க. சுகுமாரன்.

* 'எல்லோருக்கும் கல்வி — எப்படிச் சாதித்தார்கள்' என்ற செய்தி உண்மையிலேயே வியப்பூட்டியது. தமிழகத்திலும் இப்பேர்ப்பட்ட சாதனை களைச் செய்ய யாராவது முன்வர மாட்டார்களா என்ற ஏக்கத்தை வரவழைத் தது எர்ணாகுளத்தின் சாதனை.

வேலூர். கே. ஆர். தேவேந்திரன்.

* திட்டமிட்டுச் செயலாற்றுவதன் மூலம் எதையும் சாதிக்க முடியும் என்ப தற்கோர் எடுத்துக்காட்டாக விளங்கும் எர்ணாகுளம் மக்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். எல்லோருக்கும் கல்வி என்ற சிக்கல் நிறைந்த பிரம் மாண்டமான திட்டத்தை மக்கள் இயக்கமாக மாற்றி, வெற்றி கண்டதை ஓர் எடுத்துக்காட்டாகக் கொண்டு, இந்தியாவிலேயே எழுத்தறிவின்மையை அடியோடு ஒழிக்கப் பாடுபடுவோமாக...!

சிறுமுகை. ஜி. கதிரேசன்.

* தேசிய முன்னணி அரசின் தொழில் கொள்கை அறிவிக்கப்பட்டு அதைப் பற்றிய வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்று வரும் வேளையில் தங்களுடைய 'தலையங்கம்' ஆட்சியாளர்களுக்கு மிகவும் பயன்படும் என்பதால் அதை மொழி பெயர்த்து அவர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்பதே எங்களின் அவா!

தக்கோலம். மு. பாரக்.

* மூன்று முறை தொகுதிக்குப் பயணம் மேற்கொள்ளும் போது விபத்தா? இப்போதுதான் தெரிகிறது. ஏன் எம். எல். ஏக்கள் தொகுதிப் பக்கம் வருவ தில்லையென்று!

சென்னை — 94, கே. ஆர். பவானி.

* நிலக்கோட்டை கோவாட்டம்மன் கோயில் வாசலில் கள்ளச் சாராயக் கடை புகைப்படம் வெளியிட்டிருப்பதன் மூலம் கள்ளச் சாராய வியாபாரிகள் எவ்விதப் பாதிப்புக்கும் பயந்தவர்கள் அல்லர் என்பது நிரூபணமாகிறது. இது தமிழ்நாட்டின் சாபக்கேடுகளில் ஒன்று என்பதை நாம் ஒப்புக் கொண்டே ஆக வேண்டும்.

துடுப்பதி. ம. வி. தங்கவேலு.

வட்டமேஜை வட்டமேஜை வட்டமேஜை வட்டமேஜை வட்டமேஜை வட்டமேஜை



* 'காணாமல் போன எம். எல். ஏ.' போன்ற கதைகளை வெளியிட்டு ஒன்றுமே தெரி யாத நம் அரசியல்வாதிக ளுக்குப் புதுப்புது ஐடியாக் களைக் கற்றுக் கொடுக்கிறீர் களே!

திருவண்ணாமலை, கதி. அரசு.

* பக. தனபாலனின் ''காணாமல் போன எம். எல். ஏ.' சிறுகதை கண்டேன்! கதாசிரியர், எம். எல். ஏக்கள் தங்களுக்குப் பப்ளிசிட்டி தேடிக் கொள்ள நல்லதொரு ஐடியா(!) கொடுத்துள்ளார். கதையின் முடிவு, அரசியல் வாதிகள் சுயலாபத்திற்காக எதையும் செய்யத் தயங்க மாட்டார்கள் என்ற கசப் பான உண்மையைப் புலப் படுத்தியது!

சென்னை — 82, எஸ். யோகலிங்கம்.

* 'சௌம்யாவின் மறுபக் கம்' சிறுகதை மிகமிக அருமை. சௌம்யா ஏன் இப் படி ஒரு பொய்க் கடிதத்தை எழுதியிருப்பாள்? என்ற கேள்வி என்னுள்ளும் எழுந் தது. ஆரம்பத்திலேயே இப் படியொரு பிரச்னையை ஏற் படுத்திய கதாசிரியர் முடிவைச் சுபமாக முடித்தது மனத் துக்கு நிறைவை அளித்தது.

தஞ்சாவூர், மா. அதிராமவிஜயன்.

* ஜெயஸ்ரீ ராஜின் ''அம்மா வுக்கு ஓய்வு'' என்ற சிறுகதை அருமையாக இருந்தது. ஆழ மான கருத்தைத் தத்ரூபமாகச் சொல்லிய விதம் அற்புதம்!

சென்னை — 116, என். ஜி. பிரசாத்.

* ஆணையும் பெண்ணை யும் தவறான கோணத்தில் மட்டுமே இணைத்துப் பார்க் கும் மனித சமுதாயத்தைத் தலையில் 'நறுக்'கெனக் குட்டியிருக்கிறார் ஜோதிர் லதா கிரிஜா! படிப்பினையூட் டும் படைப்பு!

வேலாயுதம்பாளையம், எம். சம்பத்.

* 'வி.ஐ.பி. என்றால் Very Ignorant Person என்ற புது விளக்கம் தருகிறாரே, தேவி லால்?' — தராசு பதில்களில் இடம்பெற்ற சுவையானதும், அர்த்தமானதுமான கேள்வி! கேள்விதான் சுவை என்றால், பதிலில், சுவை 'ஸ்ட்ட்.... ர்...ர்...ரா...ங்...ங்...காக' இருந் தது!

மேல்பட்டி. எம். வி. வெங்கடேஸ்வரன்.

எமனுக்கு எதிரி எத்திராஜ்

காமராஜர் முதல்வராகவும், பக்தவத்சலம் உள்துறை அமைச்சராகவும் இருந்த போதுதான் முத்துராமலிங்கத் தேவர் மீது இமானுவேல் கொலை வழக்கு நடந்தது. இடம்: புதுக்கோட்டை. தேவர் சமுதாயம் முழுக்க அங்கே கூடியிருந்தது. அரசு சார்பில் வாதாடப் போனார் வி. எல். எத்திராஜ். கோர்ட்டுக்குள் நுழைந்த எத்திராஜ், தேவர் சாட்சிக் கூண்டில் நிற்க வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்து விட்டார். 'அவர் ஒரு பார்லிமென்ட் உறுப்பினர்; எம். பி. அவருக்கு முதலில் உட்கார நாற்காலி கொடுங்கள்!' என்றார். பார்வையாளர்கள் எல்லோரும் நெகிழ்ந்து போய் விட்டார்கள். சூழ்நிலையையே ஒரு நொடியில் தமக்குச் சாதகமாக மாற்றிக் கொண்டு விட்டார் எத்திராஜ். (இந்த வழக்கில் போதிய சாட்சியம் இல்லை என்று தேவரை விடுதலை செய்யச் சொல்லி விட்டார்.)

சித்தூர் அருகே நாங்கலி என்ற இடத்தில், கள்ளச் சாராயக்காரர் ஒருவரை விரட்டிக் கொண்டு போன தமிழ் நாட்டு போலீஸ் சப் இன்ஸ்பெக்டரை, கர்நாடக போலீஸ் கைது செய்து விட்டது. காரணம், எஸ். ஐ. சுட்டு அந்தக் கள்ளச் சாராயப் பேர்வழி இறந்து விட்டார். ராஜாஜிதான் அப்போது முதல்வர். எத்திராஜை போனில் கூப்பிட்டார். விஷயத்தைச் சொல்லி விட்டு, அந்தத் தமிழ் நாட்டுப் போலீஸ் சப் இன்ஸ்பெக்டரை விடுதலை செய்து கொண்டு வர மைசூர் போக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மைசூர் சென்ற எத்திராஜ் இரண்டே நிமிடங்கள்தாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசினார். சப் இன்ஸ்பெக்டரை ஜாமீனில் வெளியே கொண்டு வந்து விட்டார்! "உங்கள் ஃபீஸை தர ஏற்பாடு செய்து விடுகிறேன்!" என்றார் ராஜாஜி. 'ஒரு சப் இன்ஸ்பெக்டரைக் காப்பாற்ற ஒரு முதலமைச்சரே முன்வருவது என்பது எத்தனை அசாதாரணமான செயல்! அந்தச் செயலுக்கு நான் உதவியதாக இருக்கட்டும். ஃபீஸ் வேண்டாம்!' என்று மறுத்து விட்டார் எத்திராஜ். இத்தனைக்கும் '47 ல், ஒரு கேசில் வாதாட நாலு லட்ச ரூபாய் ஃபீஸ் வாங்கியவர் அவர்.

இவ்வளவு பெரிய வழக்கறிஞராகத் திகழ்ந்தவர் கல்லூரியில் அட்மிஷன் கிடைக்கக் கஷ்டப்பட்டார் என்றால் நம்ப முடிகிறதா! அவர் வாங்கிய மார்க்குக்கு பிரசிடென்சி கல்லூரியில் அவருக்கு இடம் கொடுக்கவில்லை. சர் கே. பி. லட்சுமண தாஸ்தான், சிறந்த டென்னிஸ் ஆட்டக்காரர் என்ற வகையில் அவருக்கு இடம் வாங்கிக் கொடுத்தார்.

சர் எஸ். ராதாகிருஷ்ணன் இவருக்கு ஆசிரியராக இருந்திருக்கிறார். ஆர். வெங்கட்ராமன் இவரிடம் ஜூனியராக இருந்திருக்கிறார். (ஒரு ராஷ்டிரபதி குரு; ஒரு ராஷ்டிரபதி சிஷ்யர்!) ஜூனியர் இன்டர்மீடியட்டுக்குப் பிறகு லண்டனுக்குப் போய்



எத்திராஜ்

சென்னை எத்திராஜ் மகளிர் கல்லூரி என்றால் எல்லோருக்கும் தெரியும். அந்தக் கல்லூரியைத் தோற்றுவிக்கப் பத்து லட்ச ரூபாய் வழங்கியவர் வி. எல். எத்திராஜ். வசதியற்ற மாணவிகளுக்கு உதவித் தொகை அளிக்கவும் தமது உயிலில் கணிசமான தொகை ஒதுக்கினார் இந்த வழக்கறிஞர். அவரது நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் இத்தருணத்தில் அவரைப் பற்றிப் பல சுவாரஸ்யமான தகவல்களைத் தருகிறார் அவரிடம் ஜூனியராகப் பணியாற்றிய பிரபல வழக்கறிஞர் எஸ். பிச்சை.



• ராஜ்கிரண்: கோபத்துக்குக் கைமேல் பலன்!

தேறவில்லை. ஒரு நாள் உதவியாளரைக் கோபமாகத் திட்டிக் கொண்டிருந்தார் ராஜ்கிரண். அதைப் பார்த்துக் கொண்டிருந்த பட டைரக்டர் கஸ்தூரி

ராஜ்கிரண் கோபத்துக்குக் கைமேல் பலன்!

●● மனோரமா, பேத்தி பிறந்த சந்தோஷத்தில் இருந்த போதுதான் அவரை இரட்டிப்புச் சந்தோஷத்தில் ஆழ்த்த அந்த டெலிபோன் செய்தி வந்தது. "நடிகர் திலகத்துடன் ஒரு படத்தில் ஜோடியாக நடிக்கின்றீர்கள். அது பற்றி நேரில் பேசலாம்" — வியட்நாம் வீடு சுந்தரம் ஒற்றை வரியில் பேசி முடித்து விட்டார். மனோரமாவின் நீண்ட கால ஆசை, சிவாஜி கணேசனுடன் ஒரு படத்திலாவது ஜோடியாக நடிக்க வேண்டும் என்பதுதானாம். இதை யாரிடமும் அவர் சொல்லவே இல்லை. ஒரு நகைச்சுவை நடிகை நடிகர் திலகத்துடன் ஜோடியாக நடிக்க முடியுமா? சொன்னால் சிரிப்பார்களே என்று விட்டு விட்டாராம். "வியட்நாம் வீடு சுந்தரம் என் மனத்தை எப்படியோ படித்து என்னை சிவாஜி சாருக்கு ஜோடியாக 'ஞானப் பறவை' படத்தில் போட்டிருக்கிறார்" என்று வியந்து பேசுகிறார்.

●● ராஜ்கிரண் தயாரிக்கும் புதிய படமான 'ராசாவின் மனசுலே' படத்திற்கு வில்லன் பாணிக் கதாநாயகன் தேவைப்பட்டது. ஒருவருமே

ராஜா, 'சார், நீங்கதான் நம்ம படத்துக்கு ஹீரோ! எங்கே இன்னொரு தடவை கோபப்படுங்க...' என்று கூறியவுடன் 'சார்! ஜோக் அடிக்கிறதுக்கு இதுதானா நேரம்? என்று அவர் மீது திரும்பி விட்டார் ராஜ்கிரண்! கடைசியில் நிஜ மாகவே ராஜ்கிரணைக் கதாநாயகனாகத் தேர்ந்தெடுத்து விட்டார்கள். இப்போது தொப்பையைக் குறைக்க வேண்டும் என்பதற்காகத் தினசரியும் காலையில்



• புதிய ஸ்வரங்கள், புதிய முகங்கள்: தேவன், சுந்தர்.

பார்—அட்—லா ஆனார். அங்கேயே ஒரு பிரிட்டிஷ் பெண்மணியைத் திருமணம் செய்து கொண்டு 1913ல் இந்தியாவுக்கு வந்து, சென்னையில் வக்கீலாக பிராக்டிஸ் தொடங்கினார்.

ஆரம்பித்த ஏழே வருடங்களில் ஆக்டிங் பப்ளிக் பிராசிக்யூடராக ஆகி விட்டார். அப்போதுதான் பரபரப்பாகப் பேசப்பட்ட 'போட்டோகிராபர் கொலை வழக்'கில் ஜமீந்தார் சூலூர் சுப்பராவுக்கு ஆஜராகி, கீழ்க்கோர்ட்டில் ஜெயித்தார். இவருக்கு எதிராக வாதாடியவர் அன்றைக் குப் புகழ்பெற்ற நார்ட்டன்!

1937ல், முதல் இந்திய பப்ளிக் பிராசிக்யூடராக எத்திராஜ் நியமிக்கப்பட்ட போது, பெரும்பாலான நீதிபதிகள் வெள்ளைக் காரர்களே. தாம் பப்ளிக் பிராசிக்யூடராக இருந்தும் கூட, போதிய சாட்சியம் இல்லை என்றால் எதிரியை விடுதலை செய்யச் சொல்லி விடுவார் எத்திராஜ். 'நான் பப்ளிக் பிராசிக்யூடர்தான்; பப்ளிக் பெர்சிக்யூடர் அல்ல!' என்பார். 'எத்திராஜ் பப்ளிக் பிராசிக்யூடராக இருக்கிற வரை ஒரு ஜுடிஷியல் மர்டரும் நடக்காது!' என்று ஒரு நீதிபதி பாராட்டியிருக்கிறார்.

எப்போதும் சிரித்துக் கொண்டே இருப்பார்; வாழ்க்கையில் விரோதமே சம்பாதித்துக் கொள்ளாமல், சிநேகமாக இருக்க வேண்டும் என்பார். ஆனால் அவர் மட்டும் ஒரே ஒரு நபரிடம் விரோதம் சம்பாதித்துக் கொண்டார்: ஆமாம், அவருடைய நிரந்தர விரோதி எமன்தான். நாளை தூக்கில் தொங்கப் போகிறவருக்காக இன்று வாதாடி, அவரை எமனின் பிடியிலிருந்து



• ஞானப் பறவையில்....



• ....ஜோடியாக....

தன் வீட்டு மாடியில் சண்டைப் பயிற்சி பெற்று வருகிறார் ராஜ்கிரண்!

●● நடிகர் விஜயன், 'புதிய ஸ்வரங்கள்' என்ற படத்தை இயக்குகின்றார். பாரதி ராஜாவின் பல படங்களில் உதவி இயக்குனராகவும், கதை இலாகாவிலும் பணியாற்றி வந்த விஜயன், எம். ஏ. பட்டதாரி. 'ஸீவாலா' என்ற மலையாளப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவர். சினிமா டைரக்டராக வேண்டும் என்று வந்தவர், திசைமாறி நடிகராகி விட்டார். சில காலம் பட வாய்ப்புக்களே இல்லாமல் கஷ்டப்பட்ட விஜயன், 'புதிய ஸ்வரங்கள்' மூலம் உற்சாகமாகியுள்ளார். இந்தப் படத்தின் கதாநாயகன் மலையாளப் பட உலகைச் சேர்ந்த தேவன். தேவனுக்கு ஜோடி புதுமுகம் உத்ரா.

●● 'புதிய பாதை' படத்தைத் தயாரித்த விவேக் சித்ரா — சுந்தரம், பார்த்திபனைக் கதாநாயகன் கம் டைரக்டராகப் போட்டுப் படம் பண்ணிய அதே ஃபார்முலாவில், இப்போது 'தர்மா'வில் யூகிசேதுவைக் கதாநாயகன் கம் டைரக்டராகப் போட்டுப் படத்தைத் துவக்கியுள்ளார். யூகிசேது திரைப்படக் கல்லூரி மாணவர். 'கவிதை பாட நேரமில்லை' பட டைரக்ஷனுக்குப் பின்பு வாய்ப்புக் கிடைக்காமல், கமல், ரஜினி போன்ற நடிகர்களின் படக் கதை டிஸ்கஷனில் கலந்து கொண்டிருந்தார். 'புதிய பாதை' படக் கதையைப் பார்த்திபன், தயாரிப்பாளரிடம் சொன்ன போது சேதுவும் போய்த் தம்முடைய கதையைக் கூறியிருக்கிறார். 'பார்த்திபனுக்குப் பின்பு உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்' என்று கூறி அனுப்பியவர், தற்போது ஞாபகமாகச் சொன்ன சொல்லைக் காப்பாற்றியிருக்கிறார்.

●● 'காலம் மாறிப் போச்சு' என்ற படத்தின் துவக்க விழாவில் ஏ. வி. எம். சரவணன் கிளாப் அடிக்க, முதல் காட்சி ஷூட் செய்யப்பட்டது. காட்சி முடிந்ததும் ரஜினி, இளையராஜாவைத் தேடிப் போனார். இருவரும் சேர்ந்தே சாப்பிட்டார்கள். அப்போது ரஜினி, "நாம் இருவரும் ஒரே ஜாதி; எனவே நாம் சேர்ந்து இருப்பதே நல்லது" என்று சிரித்துக் கொண்டே கூறினார். உடனே ராஜா ரஜினியைப் பார்க்க, "நாம் இருவருமே வெஜிடேரியன் இல்லையா?" என்றார். ராஜா, ரஜினியின் தோளில் கை போட்டுக் கொண்டார். எனவே, ரஜினி படங்களுக்கு ராஜா இசையமைக்க மாட்டார் என்ற 'காலம் மாறிப் போச்சு!'

— எஸ். பாலு



ஐஸ்வர்யா.

மீட்டு விடுவார்!

பெரியவர்களிடம் எத்திராஜ் காண்பித்த மரியாதை மகத்தானது. ஒரு நாட்டுக்கோட்டை நகரத்தார் வழக்கு சம்பந்தமாக, இவரை ஆஜராகும்படி கேட்டுக் கொள்ள, அன்றைக்குப் புகழ்பெற்றிருந்த வழக்கறிஞர்கள் சர் கே. சீனிவாச அய்யங்கார், எஸ். சீனிவாச அய்யங்கார், டி. ஆர். ராமச்சந்திர ஐயர், அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் நான்கு பேரும் எத்திராஜ் வீட்டுக்கு வந்தார்கள்.

"நீங்கள் செய்ய முடியாததையா நான் சாதித்து விடப் போகிறேன்?" என்று சொல்லிப் பார்த்தார் எத்திராஜ்.

"இல்லை. இது உங்கள் துறை. கிரிமினல் வழக்கு. நீங்கள்தான் நடத்த வேண்டும்!" என்றனர் நால்வரும்.

வந்த நான்கு பேரும் திரும்பிச் செல்லும் வரை, நின்று கொண்டேதான் பேசினார் எத்திராஜ்!

எத்திராஜ் தெய்வபக்தி மிக்கவர். சாயங்காலம் ஆறு மணிக்கு, காமாட்சி அம்மனுக்குக் குத்து விளக்கு ஏற்றி வைத்து விட்டு, நிறைய பக்திப் பாடல்களைக் கேட்பார். கர்நாடக இசைப் பிரியர். வேஷ்டி — ஜிப்பா — அங்கவஸ்திரம் அணிந்து சபா கச்சேரிகளுக்கு வந்து கேட்டு ரசிப்பார். இவருக்கு மிகவும் பிடித்தமான பாடல், ராமலிங்க சுவாமிகளின் 'ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்' தான். இன்றைக்கும் எத்திராஜ் கல்லூரி விழாக்களில் இறைவணக்கமாகப் பாடப்படுவது அப் பாடலே.

கட்டுரை வடிவம்: சாருகேசி



• ஜினா

ஸ்போர்ட்ஸ் ஸ்டார்ஸ்:

நிறபேத உணர்வை வென்றவர்!

அந்தப் பெண்மணி ஏழாவது முறையாகக் கருவுற்றதும் டாக்டரிடம் போனார். டாக்டர்களோ வயிற்றில் வளர்வது டியூமர் (கட்டி) என்று கூறி விட்டனர்! ஆயுத சிகிச்சை செய்து எடுத்து விட வேண்டும் என்றனர். கவலையுடன் வேறு மருத்துவரிடம் மறு அபிப்பிராயம் கோரிய போது வயிற்றில் வளர்வது சிசுவே என்பது ஊர்ஜிதமாயிற்று. அந்த ஏழாவது குழந்தை தான் ஜினா காரிஸன். இவ்வாண்டு விம்பிள்டன் இறுதியாட்டத்தை எட்டி, மார்டினாவிடம் தோற்றவர்.

இதுவே கடைசி குழந்தையாக இருக்கட்டும் என்ற எண்ணத்தில் 'Z' என்ற எழுத்தில தொடங்கும் 'ஜினா' என்ற பெயரைப் பெற்றோர் சூட்டினர்!

ஜினா, கிரிஸ் எவர்ட்டை எதிர்த்து ஆடிய போது அமெரிக்க ரசிகர்களும் அமெரிக்க டீ.வி.யும் எவர்ட்டையே வெளிப்படையாக ஆதரித்ததைப் பார்த்தார். நிறபேத உணர்வே இதற்குக் காரணம் என்று புரிந்தது. தமக்கும் ஒரு நாள் இப்படி ரசிகர்கள் ஆதரவு கிடைக்காதா என்று ஜினா ஏங்கியதுண்டு. அந்த ஏக்கம் இப்போது விம்பிள்டனில் தீர்ந்தது — 26 வது வயதில்.

ஜினா பள்ளி மாணவர்களிடையே சுய முன்னேற்றச் சொற்பொழிவுகள் நிகழ்த்த அடிக்கடி அழைக்கப்படுகிறார். கல்லூரியில் சேர்ந்து படித்துப் பட்டம் பெறும் இலக்கும் இவருக்கு இருக்கிறது.



• மார்டினா

●● இறுதி ஆட்டத்தில் வென்ற 33 வயது மார்ட்டினா நவரதிலோவா இதுவரை ஒன்பது விம்பிள்டன் வெற்றிகளைப் பெற்று உலக சாதனை படைத்திருக்கிறார். என்றாலும் ஆசை எங்கே விட்டது? இன்னொரு வெற்றி கிடைத்தால் இரட்டைப் படை ஆகி விடுமே என்று கணக்குப் போடுகிறார்!

●● விம்பிள்டனில் விளையாடிக் கொண்டிருந்த பெக்கரைக் கேட்டார்கள்: 'மே.



• பெக்கர்


ஜெர்மனி ஜெயிக்குமா? அர்ஜன்டீனா ஜெயிக்குமா?' பெக்கரின் ஜோஸியம் பலித்து விட்டது! நல்லவேளை, டென்னிஸ்ஸில் இரு ஜெர்மானிய உலக சாம்பியன்களும் தோற்றதற்கு கால்பந்தாவது ஈடுகட்டியதே!

●● அர்ஜன்டீனா ஸ்டார் ஆட்டக்காரர் மாரடோனா, ஜெர்மனி ஸ்டார், ஆட்டக்காரர் மத்தாயூஸ் ஆகிய இரு காப்டன்களுக்குமே ஒரே எண் தான்: 10!

●● இரண்டு ஜெர்மனிகளும் இணைந்ததில் பொருளாதாரத்தில் எப்படியோ, விளையாட்டுத் துறையில் ஜெர்மனி எதிர் காலத்தில் சக்கை போடு போடும் என்பது ஸ்போர்ட்ஸ் நிபுணர்கள் கணிப்பு.

தொகுப்பு: **நிருபர்கள்**

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: பெ. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ. 350/-.



Air and water pollution could affect the health of human beings adversely.

We, at NOCIL, are deeply concerned about life... That's why we make every effort to help keep the environment free from pollution — even if the cost is high!

NOCIL was one of the first in the country to tackle pollution. Speedily and effectively.

Even before statutory regulations came, NOCIL studied the environment carefully. And has invested a huge amount of more than Rs.28 crores on sophisticated, modern effluent treatment facilities and on preventing harmful gases from getting into the air. And on neutralizing and testing liquid wastes before they reach the sea. In short, keeping our environment safe, hygienic and pollution-free. So that life is protected and man can benefit from progress without irreversibly damaging the environment.

NOCIL

Committed to pollution control.

NOCIL

National Organic Chemical Industries Limited
Mafatlal Centre
Nariman Point
Bombay 400 021

CHAITRA B NOC 1209 A

GISTERED NO. M. 4392
gistered as Newspaper in Sri

